


ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 36

# உதயன்

சுடர் 27
கதிர் 55

வள்ளுவர் ஆண்டு 2043 தை 05 வெள்ளிக்கிழமை (20/01/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# இந்தியா விரைகிறது கூட்டமைப்பு பிரதமர் மன்மோகனுடனும் சந்திப்பு



## கிருஷ்ணாவுடனான பேச்சுக்களை அடுத்து சம்பந்தன் தலைமையில் குழு பயணம்



கொழும்பு, ஜனவரி20

அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பேச்சுக்கள் முடங்கியுள்ள நிலையில், கூட்டமைப்பினர் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளத் தயராகி வருகின்றனர். அநேகமாக அடுத்த மாத நடுப் பகுதியில் இந்தப் பயணம் இடம்பெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே பல தடவை புதுடில்லிக்குச் செல்ல கூட்டமைப்பினர், அந் நாட்டு பிரதமர் மன்மோகன் சிங்கைக் கூட்டாகச் சந்திக்க நேரகாலம் - வாய்ப்பு கிட்டவில்லை. தலைவர் சம்பந்தன் மட்டுமே ஒருதடவை மன் மோகனைச் சந்தித்திருந்தார். ஆனால் இம்முறை கூட்டமைப்பினர் மன்மோகன் சிங் மற்றும்

» 27

## ரணிலும் செல்கிறார் டில்லிக்கு

கொழும்பு, ஜன.20

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோக பூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இன்று வெள்ளிக்கிழமை இந்தியா செல்கிறார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி வரை அங்கு தங்கியிருக்கும் அவர், இந்தியக் குடியரசுத் தலைவர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடன் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பையடுத்தே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்கின்றார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தாலும், அவரது விஜயமானது ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்ததொன்று என ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

அதேவேளை, இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான எம்.பிக்கள் குழுவொன்று இலங்கை வரவுள்ள நிலையில், இங்குள்ள நிலைமைகள் குறித்து அவர்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையிலேயே ரணிலின் இந்திய விஜயம் அமைந்துள்ளது என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. எனினும், அவரது விஜயத்தின் நோக்கம் என்னவென்பது தொடர்பில் ஐ.தே.க. இன்னும் உத்தியோகபூர்வமாக

» 27

## அடிபணிந்தது அரசு காணிப் பதிவு வாபஸ்

கொழும்பு, ஜன. 20

வடக்கு - கிழக்கில் காணிகளைப் பதிவு செய்வது தொடர்பாகக் காணி அமைச்சு விடுத்திருந்த சுற்றறிக்கையை வாபஸ் பெறுவதாக அரசு அறிவித்திருக்கிறது. இந்தச் சுற்றறிக்கையை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்த வழக்கில் அடிபணிந்த அரசு, சுற்றறிக்கையைத் தான் வாபஸ் பெற்றுக் கொள்வதாக மேல் முறையீட்டு நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்தது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச காணிகள் மற்றும் தனியார் காணிகள் அனைத்தையும் பதிவு செய்யுமாறு காணி அமைச்சு மாவட்டச் செயலகங்களுக்குச் சுற்றறிக்கை மூலம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதனை எதிர்த்து நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் மேல்முறையீட்டு நீதிமன்றில் மனு தாக்கல் செய்திருந்தார்.

காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையை உடன் ரத்துச் செய்யுமாறும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் காணிப் பதிவு நடவடிக்கைகளை நிறுத்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குக என்றும் அந்த மனுவில் அவர் கேட்டிருந்தார்.

எந்தக் காரணமும் இன்றி இரண்டு மாதங்களுக்குள் காணிகளைப் பதிவு செய்ய வேண்டும் என்று காணி

» 27

## மீண்டும் செனட் சபை

கொழும்பு, ஜன.20

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் மீண்டும் செனட் சபை ஒன்று அமைக்கப்படும் - என்று அரசு அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கும் மத்திய அரசுக்கும் இடையில் நிர்வாக இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தும் நோக்

» 27

## கிருஷ்ணாவின் நிகழ்வுகளில் கூட்டமைப்பு பங்கேற்காதது ஏன்?
### அமைச்சர் பஸில் கேள்வி

கொழும்பு, ஜன.20

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா வடபகுதி மக்களுக்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் கலந்துகொள்ளவில்லை? இதுதான் இந்தியாவுக்கு அவர்கள் செய்யும் பிரதியுபகாரமா?

- இவ்வாறு நேற்று கேள்வியெழுப்பினார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரின் வடக்கு விஜயம் தொடர்பில் 'உதய'னிடம் அமைச்சர் பஸில் கருத்து வெளியிட்டார். அப்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தியா வடக்கின் அபிவிருத்திக்கு எண்ணிலடங்காவேலைத்திட்டங்களைச் செய்துவருகின்றது. மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல், அவர்களுக்

» 27

## போசாக்கு நிகழ்ச்சித் திட்ட தேசிய நிகழ்வு வல்லையில்
### கல்வி அமைச்சர் கலந்துகொண்டார்



யாழ்ப்பாணம், ஜன.20

தேசிய போசாக்கு நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று மு.ப. 10 மணிக்கு வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கலந்து கொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை கல்வி அமைச்

» 27

## கொழும்பு மாநகர சபையில் குழப்பம்

கொழும்பு மாநகரசபையின் நிதி தொடர்பான நிலையியல் குழுவுக்கு சபையின் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து அதிக உறுப்பினர்கள் தெரிவானதால் சர்ச்சை ஏற்பட்டது. இதனால் சபை அமர்வு சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டு பின் மீண்டும் ஆரம்பமாகியது.சபையைக் கட்டுப்படுத்தும் 6 அங்கத்தவர்கள் கொண்ட இக்குழுவுக்கு எதிர்க்கட்சியான ஐ.ம.சு. முன்னணி தரப்பிலிருந்து நான்கு உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டனர். இதையடுத்து. தமது உறுப்பினர்களின் வாக்குகள் விலை கொடுத்து வாங்கப்பட்டுள்ளன என ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் குற்றம் சுமத்தினர். அதை ஐ.ம.சு. கூட்டமைப்பு நிராகரித்துவிட்டது.

## கிளிநொச்சியில் பொறியியல் பீடம்

யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தைக் கிளிநொச்சியில் அமைக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.இதுகுறித்த அமைச்சரவைப் பத்திரத்தை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க சமர்ப்பித்திருந்தார். இதன்படி கிளிநொச்சி - அறிவியல் நகரில் யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் விவசாய பீடம் என்பன இயங்கவுள்ளன. கடந்த வருடம் ஜூன் மாதம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொறியியல் பீடம் அமைக்க வசதி செய்து கொடுக்கப்படும் என உறுதியளித்திருந்தார்.இதன்படி கிளிநொச்சியில் பொறியியல் பீடத்திற்கான கட்டடத்தை புனரமைப்பு செய்ய 393.79 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## புதிய ரயில் பாதைத் திட்டம் ஆரம்பித்தார் கிருஷ்ணா

காலி முதல் இந்துருவ வரையிலான புதிய ரயில் பாதை நிர்மாண திட்டத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்று ஆரம்பித்துவைத்தார்.காலி ரயில் நிலையத்தில் இந்த வைபவம் நடைபெற்றது.50 கிலோமீற்றர் நீளமான இந்த ரயில் பாதை இந்திய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுகிறது. இந்திய அரசினால் நடத்தப்படும் இர்கோன் நிறுவனம் இந்த நிர்மாணப் பணியை பொறுப்பேற்றுள்ளது.களுத்துறை வரையிலான இத்திட்டத்தின் இரண்டாவது கட்ட நிர்மாண நடவடிக்கை ஏப்ரல் மாதம் ஆரம்பமாகவுள்ளது. இதேவேளை, இந்திய உதவியுடன் மேற்கொள்ளப்படும் பளை காங்கேசன்துறை ரயில்பாதை நிர்மாண நடவடிக்கை 2013 ஆம் ஆண்டு நிறைவடையவுள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வவுனியா, மன்னாரில் மேலும் பல தொழிற்சாலைகள் நிறுவப்படும்

வவுனியா, ஜன.20

மன்னார், வவுனியா மாவட்டங்களில் இரண்டு ஆடைத் தொழிற்சாலைகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருவதுடன் வேறு தொழிற்சாலைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் கைத்தொழில், வணிகத்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் குழுக் கூட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**வெகுவிரைவில் கைத்தொழில்சாலைகள் மூலம் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுவதும் அதற்கான சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.**

இந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

ஆயிரக் கணக்கானவர்களுக்குத் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இரண்டு ஆடைத் தொழிற்சாலைகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் குறித்த மாவட்டங்களில் வேறு தொழிற்சாலைகளை அமைப்பது தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட முதலீட்டாளர்களுடன் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் கைத்தொழில் பேட்டைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் குறித்த மாவட்டங்களில் பெறப்படும் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நோக்குடனும் பொதுமக்களின் போக்குவரத்து இடர்பாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்குடனும் புளியங்குளம், நெடுங்கேணி, முல்லைத்தீவு வரை 52.5 கிலோ மீற்றர் வீதியை பல மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

வெகுவிரைவில் கைத்தொழில்சாலைகள் மூலம் வேலை வாய்ப்புகள் வழங்குவதற்கும் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புக் களைப் பெற்றுக் கொடுப் பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-313)

## பேராலயப் பெருவிழா இன்று

மன்னார்,ஜன.20

மன்னார் தூய செபஸ்தியார் பேராலயப் பெருவிழா இன்று நடைபெறவுள்ளது.



கடந்த 11 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான விழாவின் நவநாள் திருப்பலிகள் தினமும் மாலை 5.30 மணிக்கு நடைபெறுகின்றன.

பெருவிழாத் திருப்பலி இன்று காலை 5.45 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)

## சமூக அபிவிருத்திக் கருத்தரங்கு

மீள்குடியமர்வு செய்யப்பட்ட பிரதேசங்களில் உள்ள மாணவர்களின் நலன் கருதி சமூக அபிவிருத்திக்கான உளப்பாங்கு சீர்திருத்த முகவர் பயிற்சிக் கருத்திட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை முதல் தொடர்ந்து 5 தினங்கள் கிளிநொச்சி நகர்ப் பிரதேசங்களில் இடம்பெறவுள்ளது.

மாணவர்களின் உள ஆரோக்கியம் மற்றும் கல்வி முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள இந்த சீர்திருத்தப் பயிற்சியானது கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் மிகவும் பின்தங்கிய பாடசாலைகளில் கற்றலுக்கு ஏற்ற அடிப்படை வசதிகளற்ற மக்கள் மீள் குடியமர்த்தப்பட்ட மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

இதன் மூலம் மாணவர்கள் தமது கல்வித் தரத்தை உயர்த்துவதுடன் கடந்த காலங்களில் ஏற்பட்ட மன உளைச்சல்களை மறந்து புதிய தொரு அத்தியாயத்தில் தமது கல்வியைத் தொடரக் கூடிய வகையில் இந்தப் பயிற்சி அமையவுள்ளது. (எ-313)

## 35,485 ஏக்கர்களில் மன்னாரில் நெற்செய்கை

மன்னார்,ஜன.20

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஆண்டு டிசெம்பர் 15 ஆம் திகதிவரை 35 ஆயிரத்து 485 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம்.ஏ.சுக்கூர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு 51 ஆயி ரத்து 465 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை செய்வதற்குத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த வருடங்களில் நெற்பயிர்ச்செய்கை செய்யாமல் உள்ள பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பிலும் விவசாயம் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளதாகப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (எ)

## மக்களுக்கு வழங்காத வீடுகள்

முல்லைத்தீவு,ஜன.20

முல்லைத்தீவு கொக்கிளாய்ப் பகுதியில் யு.என்.டி.பி. நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 50 வீடுகள் எட்டு மாதங்களாகியும் இதுவரையில் மக்களுக்கு வழங்கப்படவில்லை.

இதனால் வீடுகளை எதிர்பார்த்திருக்கும் மக்கள் இந்த வீடுகள் கிடைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். (எ-6)

## கடந்த வருடம் 15 சிறுவர் துஷ்பிரயோகம்

முள்ளியவளை, ஜன.20

கடந்த வருடம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 15 சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் தகவல் தெரிவித்துள்ளது.

இடம்பெற்ற இந்த துஷ்பிரயோகச் சம்பவங்கள் அதிகமாகப் பெற்றோரின் கவனயீனத்தால் ஏற்பட்டுள்ளதுடன் சிறுவர்களுக்கான பாதுகாப்புக் குறைவடைந்ததுமே காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த வரு டங்களில் ஏற்பட்ட துஷ் பிரயோகங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கு பெற்றோர், பிள்ளைகளுக்குச் சிறந்த பாதுகாவலராகவும் அவர்களின் கல்வி, உணவு, உடை போன்ற தேவைகளைச் சரியாகப் பெற்றுக் கொடுத்து ஆரோக்கியமான சிறுவர் சமுதாயத்தை உருவாக்க முன்வர வேண்டும் எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-313)

## விதைகளை வழங்குவார்களா?

முல்லைத்தீவு,ஜன.20

முல்லைத்தீவு மாவட்டத்தில் நல்லின விதை உற்பத்திகளைப் பெருக்குவதற்கு விவசாயிகளுக்கு விவசாய சம்மேளனங்கள் விதைகளை வழங்க முன்வர வேண்டும் என முல்லைத்தீவு பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மக்களில் அதிகளவானோர் கடல் தொழில், விவசாயம் ஆகிய தொழில்களைப் பிரதான தொழிலாகக் கொண்டுள்ள நிலையில் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, தொழில்களை அபிவிருத்தி செய்ய அவை சார்ந்த சம்மேளனங்களே திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும்.

தற்போது வன்னிப் பிரதேசத்தில் பெரும்போகப் பயிர்ச்செய்கையின் அறுவடைக்காலம் இடம்பெற்று வரும் சூழ்நிலையில் வீட்டுக் காணிகள் மற்றும் ஏனைய விவசாயக் காணிகளில் நல்லின விதகளைப் பயிரிடுவதன் மூலம் இலாபத்தைப் பெற முடிவதுடன் காலநிலையும் அதற்குச் சாதகமாக அமைந்துள்ளது.

எனவே சந்தையில் விதைகளுக்கு அதிகளவில் கிராக்கி ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் நேரடியாக அதிகளவு பணம் முதலீடு செய்து கொள்வனவு செய்ய வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த சூழ்நிலையில் விவசாயிகள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு விவசாய சம்மேளனங்கள் விதைகளை கொள்வனவு செய்து கடன் அடிப்படையில்அல்லது மானிய விலையில் விதைகளை வழங்கி விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

குறிப்பாக தக்காளி, மிளகாய், பயறு, கௌபி, வெண்டி, பயற்றை போன்ற நல்லின விதைகளை வழங்குவதன் மூலம் நல்லின விதை உற்பத்தியைப் பெருக்க முடியும் என விவசாயிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் அடுத்த போகப்பயிர்ச் செய்கையை மேம்படுத்த அந்தந்தப் பிரதேசத்தில் உள்ள விவசாய சங்கங்கள் சம்மேளனங்கள் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். (எ-313-500)

## வசதிகள் உண்டு: வைத்தியர் இல்லை ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் அவதி

முல்லைத்தீவு,ஜன.20

ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் இல்லாத காரணத்தால் பனிக்கால நோயால் அவதிப்படும் முதியவர்கள் வெளிமாவட்டங்களில் தங்கி நின்று சிகிச்சை பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஒட்டுசுட்டான் பிரதே சத்தில் மீளக்குடியமர்வு செய் யப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் பிரதேசத்தில் உள்ள வைத்தியசாலைக்கு இதுவரை காலமும் நிரந்தர வைத்தியர் எவரும் நியமிக் கப்படவில்லை.

தற்போது கடுங்குளிருடன் கூடிய பனிக்காலம் என்பதால் பிரதேசத்தில் உள்ள முதியவர்கள் முட்டு, தொய்வு நோய், உயர் குருதியமுக்கம் போன்ற நோய்களால் அதிகளவு பாதிப்படைந்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லாத காரணத்தால் சிகிச்சை பெறுவதற்கு வெளிமாவட்டங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இந்தப் பனிக்கால நோயால் அதிகளவு முதியவர்களே பாதிக்கப்படுவதால் வெளி மாவட்டங்களுக்கு நீண்டதூரம் பயணம் செய்வதில் பல கஷ்டங்களை எதிர்கொள்வதுடன் நோய் அதிகரிப்பதற்கான சூழ்நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் சகல வசதிகளும் உள்ள நிலையில் நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படாததையிட்டு மக்கள் கவலையடைந்துள்ளனர்.

எனவே பொதுமக்களின் போக்குவரத்து, நோய் அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு நிரந்தர வைத்தியரை வைத்தியசாலைக்கு நியமிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-313-500)



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அடம்பன் ம.விக்கு இராணுவத்தினரால் 30 இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கூடைப்பந்தாட்ட மைதானம் நேற்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் இராணுவத்தின் 54 ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி பிரிகேடியர் மைத்திரி டயஸ்ஸினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இதன் போது இராணுவத்தின் 543 ஆவது படைப்பிரிவு அதி கார்களான கேணல் ராமநாயக்கா,கேணல் யூட்பெனான்டோ,மற்றும் பிரதேச செயலாளர், மதகுரு என பலரும் கலந்து கொண்டி ருந்தனர். இதன் போது குறித்த கூடைப்பந்தாட்ட மைதானம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டதோடு அந்த மைதானத்தில் அடம்பன் மற்றும் மன்னார் அணிகளுக்கு இடையில் போட்டியும் இடம் பெற்றது. இதன் போது அடம்பன் அணி வெற்றிபெற்றுள்ளது. வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக்கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-601)

## ஆதன வரியைச் செலுத்தவும்

வவுனியா,ஜன.20

வவுனியா நகர சபைக்குட்பட்ட ஆதனவரிசெலுத்துவோர் தமது ஆதன வரிகளைச் செலுத்துமாறு வவுனியா நகரசபையின் தலைவர் ஐ.கனகையா தெரிவித்துள்ளார். அத்துடன் சைக்கிள் பாவனையாளர்கள் மற்றும் ஓட்டோ பாவனையாளர் களும் இந்த ஆண்டுக்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பதின்மூன்றை நோக்கி நகராமல் 13+ பிறப்பது எவ்வாறு....?

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் செல்லவும் ஜனாதிபதி ராஜபக்ஷ தயாராக இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்திருப்பது அரசியல் வட்டாரங்களில் பல்வேறு சர்ச்சைகளை உருவாக்கி உள்ளது. ஜனாதிபதி ராஜபக்ஷ இன்னும் 13 பற்றியோ 13+ பற்றியோ பகிரங்கமாக அறிவிக்கவில்லை. அவர் கூறியதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்பில் தெரிவித்திருந்தார்.

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை ஒருபோதும் வழங்க முடியாது; இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புலிகள் போன்று நடந்து வருகிறார்கள். இனியும் பொறுமை காக்கமுடியாது என்று மிகவும் காட்டமாகக் கருத்துக்களை வெளியிட்டு வந்த ஜனாதிபதி, திடீரென அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்றும் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்தத் தயாராக இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்ததன் பின்னணியில் நிறையவே மர்மம் இருக்கலாம் என்று அரசியல் வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது.

ஜனாதிபதியின் உறுதி மொழி உண்மையிலேயே நடைமுறைப் படுத்தப்படுமானால், சுமந்திரன் எம்.பி. கூறியது போன்று, அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரங்கள் குறித்துப் பேச வேண்டிய அவசியமே இனி ஏற்படாது. 13+ பற்றியே அரச தரப்பும் கூட்டமைப்பும் பேச்சு நடத்தவேண்டும்.

ஆனால், மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் கிடைக்கவே கிடையாது. ஜனாதிபதி முன்னர் அளித்த உறுதி மொழியையே மீண்டும் வழங்கி இருக்கிறார் என்ற கருத்துக்களே கொழும்பு அரசியல் வட்டாரங்களில் மேலோங்கி நிற்கின்றன. எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்துக்குப் பின்னர், குறிப்பிட்ட வாக்குறுதி காற்றில் பறக்க விடப்பட்டுவிடும் என்றே விடயமறிந்த வட்டாரங்கள் அடித்துச்சொல்கின்றன.

ஜெனிவா மாநாட்டில் இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கே ஜனாதிபதி இப்படியான வாக்குறுதியை அளித்துள்ளார் என்கிறது ஐ.தே.க. இதனை அரசு நிறைவேற்றாது என்றும் அது கூறுகிறது.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் நாட்டில் தற்போது நடைமுறையில் இல்லாதது; அதற்கும் அப்பால் என்று கூறுவது அரசினால் திருத்தம் செய்யப்பட உள்ள புதிய சட்டத்தையே குறிப்பிடுகிறது என்கிறது விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி. புதிய சட்டத்தில் காணி, பொலிஸ் அதிகா ரங்கள் உள்ளடக்கப்படும் என்று ஜனாதிபதி எச்சந்தர்ப் பத்திலும் தெரிவிக்கவில்லை என்றும் அது கூறுகிறது. போர் உக்கிரமாக நடந்துகொண்டிருந்தபோது 13+ எனக் கூறி ஏமாற்றிய அரசு, மீண்டும் அதே பாணியைப் பாடுகின்றது என்கிறார் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

ஆகவே, பேச்சுவார்த்தையைத் தொடர்வதற்கு அரச தரப்புக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் தற்பொழுது இருந்து வரும் நெருக்கடியை, முரண்பாட்டை ஜனாதிபதியின் 13+ அறிவிப்பு நீக்கிவிடும் என்று கருதிவிட முடியாது.

ஜனாதிபதியின் கூற்றுக்கு அரச தரப்பு முக்கியத்துவம் அளித்திருந்தால், கடந்த மூன்று தினங்கள் தொடர்ந்து நடத்த இருந்த பேச்சுவார்த்தையை அரசு புறக்கணித்திருக்கமாட்டாது. இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு ஜனாதிபதி தெரிவித்த கருத்துக் குறித்தும், பேச்சுக்களில் கலந்துகொள்ளும் அரச தரப்பிடம், கூட்டமைப்பு விளக்கம் பெற்றிருக்க முடியும்.

அரசைப் பொறுத்தவரை, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பை இடம்பெற வைப்பதே முக்கியம். ஆனால், தெரிவுக்குழு தனக்கு வைக்கப்படும் ஒரு பொறி என்று கூட்டமைப்புக் கருதுகிறது. தெரிவுக்குழுவில் இருந்து வெளியேறும் நிலைமை ஏற்படுமானால், பேச்சுவார்த்தையை முறித்த முழுப் பழியும் கூட்டமைப்பையே சாரும். அடிப்படை விடயங்களில் முதலில் இணக்கம் காணப்படவேண்டும் என்பதில் கூட்டமைப்பு பிடிவாதமாக இருக்க வேண்டும். நிலை தடுமாறும் அல்லது தளம்பிப் போகும் அளவுக்குக் கீழிறங்கக் கூடாது.

இன்றைய நிலையில் அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுதாக அமுல்படுத்துவதே அரசுக்குப் பெரும் பிரச்சினை ஆகும். அதனை நோக்கி நகராமல், 13+ என்பதை நினைத்துக்கூட பார்க்க முடியாது. ஆனால், ஜனாதிபதி 13+க்குப் போகவும் தயார் என்கிறார். இது குறித்து ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக நாட்டு மக்களுக்கு அறிவித்து கூட்டமைப்புடனான பேச்சிலும் அதனை முன்வைப்பதன் மூலமே சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.

இதேவேளை, பதின்மூன்றாவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்களையே முழுங்கி விடும் நோக்குடன், நாளொரு நிலைப்பாடும், பொழுதொரு செயற்பாடுமாக 'சூ' காட்டும் அரச தரப்பினர், அமைச்சர் கிருஷ்ணாவிடம் தெரிவித்த 13+ ஐ கற்பனையும் செய்யமாட்டார்கள் என்பதனை அறுதியாகக் கூறலாம்.

ஆகையால், ஜனாதிபதி மஹிந்த அமைச்சர் கிருஷ்ணாவுக்குத் தெரிவித்த "வாக்குறுதி" மெய்ப்பட வேண்டும் எனில், இந்தியா மீண்டும், 1987 ஆம் ஆண்டில் செயற்பட்டது போன்று, பேச்சுவார்த்தைக்கு மத்தியட்சம் வகிக்க வேண்டும்.

இன்னொரு வளமாகப் பார்த்தால், தான் தொடக்கி வைத்த இலங்கைத் தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு முயற்சியை, இந்தியா தொடர்ந்தும் இயற்றலாம். அவ்வாறு செயலாற்றினால் அது தலையீடு என்றாகாது. இங்கு வந்து சென்ற அமைச்சர் கிருஷ்ணா, அதற்கு உந்து சக்தியாக இருப்பாரா? அப்போது தொட்டுவிட்டுப்போன பணியை இப்போது தொடர்வதால் இந்தியாவுக்கு என்ன நட்டம்? இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இந்தியாவுக்கு ஆத்மார்த்தமான அக்கறை இருப்பின், சமரசம் காண்பதில் கஷ்டம் இருக்காது.

# "யாழ்ப்பாணம் வரவேற்கிறது" பொறுப்பேற்குமா மாநகரசபை?

### முன்னாள் ஆணையாளர் கேட்கிறார்

யாழ்ப்பாணம், ஜன.20

"யாழ்ப்பாணம் வரவேற்கிறது" வளைவை மீள் நிர்மாணம் செய்யும்போது அதே இடத்திலேயே நிர்மாணிக்கும் பொறுப்பை யாழ்.மாநகரசபை மேற்கொள்ள வேண்டும் என்று முன்னாள் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது ஏ-9 வீதியை அகலிக்கும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. அவ்வாறு அகலிக்கும்போது யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான செம்மணிப் பகுதியில் "யாழ்ப்பாணம் வரவேற்கிறது" வளைவினை உடைக்க வேண்டியிருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் 1969 ஆம் ஆண்டு அப்போதைய யாழ். மாநகர முதல்வராக இருந்த சி.நாகராசா என்பவரால் "யாழ்ப்பாணம் வரவேற்கிறது" வளைவு நிறுவப்பட்டு 40 வருடங்களாக நிலைபெற்றுள்ளது.

யாழ்.நகரின் வீதி முடிச்சான தந்தை செல்வா நினைவுத் தூபிக்கு முன்பாக ஏ-9 வீதி நிறைவுறுவதை கருத்தில் கொண்டு இந்த வளைவு நிர்மாணிக்கப்பட்டது. அத்துடன் கண்டி வீதியில் இருந்து ஆரம்பிக்கும் செம்மணி வீதியும், யாழ். மாநகர எல்லைக்கு பருத்தித்துறை வீதியில் நிறைவடைவதுடன் செம்மணி வீதி கண்டி வீதிச் சந்திக்கு சிறிது தூரம் தள்ளியே நிர்மாணிக்கப்பட்டது.

அத்துடன் வளைவின் ஒரு பக்கத்தூண் வலி-கிழக்கு பிரதேச சபை எல்லைப் பகுதியிலும் மற்றைய தூண் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைப் பகுதியிலும் அமைந்துள்ளன. வீதி அதிகார சபையின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அகலிப்புப் பணி காரணமாக நல்லூர் பிரதேச சபைக்கு இழப்பீடாக பத்து லட்சம் ரூபாவைச் செலுத்தி தமிழர்களின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் புதிய வரவேற்பு வளைவை அமைக்கத் தீர்மானிக்கப்படவுள்ளதாகவும், நல்லூர் இராசதானியின் அடையாளங்களையும் மையப்படுத்தி இந்த வளைவு அமைக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நிலையில் அதனை மீள் நிர்மாணம் செய்யும் போது வரலாறுகளை மழுங்கடிக்கச் செய்யாமல் பழைய இடத்திலேயே நிர்மாணம் செய்ய வேண்டும்.

நல்லூர் பிரதேச சபை மேற்கொள்ளும் இந்தப் பணியை பழைய இடத்தில் நிர்மாணிக்கும் பொறுப்பை யாழ்.மாநகர சபை பொறுப்பேற்க வேண்டும்- என்றும் அவர் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளார்.

(ம-313)

### காணி, பொலிஸ் அதிகாரங்கள்

# அரசின் கொள்கையில் மாற்றம் சாத்தியமே

கொழும்பு, ஜன.20

அரசினுடைய அல்லது வேறு அரசியல் நிலைப்பாடுகள் மாற்றமடையா என்று யாரால் கூற முடியும்? அரசின் அல்லது அரசியல் நிலைப்பாடுகளின் அதிகாரப் பகிர்வு அல்லது காணி அதிகாரப் பகிர்வு தொடர்பான நிலைப்பாடுகள் மாற்றமடையாது என்று எவரால் எதிர்வு கூற முடியும்? எல்லாமே அநித்தியமானவை என்ற பௌத்த தத்து வத்தின்படி நான் எல்லாம் மாறக்கூடியவை என்பதில் நம்பிக்கை கொண்டிருக்கின்றேன்.

இவ்வாறு கூறியிருக்கின்றார் முன்னாள் பாதுகாப்பு செயலாளரான ஒஸ்டின் பெர்னாண்டோ. லோங்ரீட் என்ற இணைய வெளியீட்டில் அவர் எழுதியுள்ள கட்டுரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் அதிகாரப் பகிர்வானது இந்த நாட்டு மக்கள் மத்தியில் பெரும் ஐக்கியத்தையும் அமைதியையும் தோற்றுவிப்பதாக இருக்கும் என்று தெரிவித்திருப்பதைக் கருத்தில் கொள்ளும்போது அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு.

அரசமைப்பில் இணைக்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்த விதிகளின்படி, காணி நிர்வாக அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதானது அதிகாரப்பகிர்வுச் செயற்பாட்டின் ஒரு பகுதியாகும். எனவே காணி அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் பேச்சுக்களைத் தொடர்வது பயனுள்ளதாகவிருக்கும்.

இப்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலராக இருக்கும் அமைச்சர் மைத்திரி பாலசிறிசேன ஒருசமயம் கூறியிருந்தார் "அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் கிழக்கு மாகாணத்துக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க அரசு தயாராக இருக்கிறது" என்றார். அவரிடம் போய் காணிப்பகிர்வு மற்றும் பொலிஸ் அதிகாரப் பகிர்வு குறித்த அவருடைய இன்றைய நிலைப்பாடு என்னவென்று கேட்டால் அவர் மாற்றுக் கருத்தையே வெளிப்படுத்துவார். இதற்கு அரசியல் சிந்தனையில் ஏற்படும் மாற்றங்களே காரணம்.

கடந்த டிசெம்பர் 21 ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் வெளியான செய்தியின்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் கூட்டமைப்பின் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வடக்கு கிழக்குக்குக் கோருவதானது நடைமுறைச் சாத்தியமற்றது என்று குறிப்பிட்டிருந்தார். இது காணி அதிகாரப் பகிர்வில் ஏற்பட் டுள்ள சிந்தனை மாற்றத்தைக் காட்டுகின்றது. இதே அதிகாரங்களை வழங்குவதாக முன்னர் தமது இது தொடர்பான தீர்வுப் பொதியில் இதனை அவர் உள்ளடக்கியிருந் தார்.

எனவே காணி அதிகாரப் பகிர்வு சாத்தியமானது என்றே அவர் கருதுகிறார் என்று கொள்ள வேண்டும்.

(ப)

## நிகழ்வுகள் இன்று

**கலந்துரையாடல்**

யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் "உயர் கல்வியில் எதிர்நோக்கும் சமகால நெருக்கடிகளும் பல்கலைக் கழக புதுமுக மாணவர்களும்" எனும் தலைப் பிலான பகிரங்கக் கலந்துரையாடல் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. கலைப் பீடபதில் பீடாதிபதி பேராசிரியர் ப.சிவநாதன் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் "2011 க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுககளும் 'இசற்' புள்ளி கணிப்பீட்டு முறையும்" எனும் தலைப்பில் கணித புள்ளி விவரவியல் துறை விரிவுரையாளர் கலாநிதி கெ. அறிவழகனும், "தனி யார் பல்கலைக்கழக சட்ட மூலம்" எனும் தலைப்பில் சட்டத் துறை விரிவுரையாளர் கு. குருபரனும் கருத்துரை வழங்குவர். (ம-313)

**கருத்தாடல்**

"பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்" எனும் தலைப்பிலான கருத்தரங்கும் கருத்தாடலும் நிகழ்வு பிற்பகல் 3மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

**கால்கோள் விழா**

மயிலணி ஜனசக்தி மழலைகள் கல்விப் பூங்காவின் கால்கோள் விழா முற்பகல் 10மணிக்கு வாரியப் புலம் வீதி மயிலணி ஜன சக்தி முன்பள்ளியில் நடைபெற வுள்ளது. முன்பள்ளி ஆசிரியர் திருமதி ஜெ.வடிவாம்பிகை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக லெனின் முன்பள்ளி ஆசிரியர் திருமதி ரா.மோகனா கலந்துகொள்வார். (ம-313)

**கௌரவிப்பு**

2011 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். கொக்குவில் இந் துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-313)

**பொதுக்கூட்டம்**

வித்தகபுரம் விவசாய சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் முற்பகல் 10மணிக்கு வித்தகபுரம் ஜே/223 கிராம சேவகர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

**கலந்துரையாடல்**

வடமாகாண மாணவர்களின் கல்வியில் புலமையை மேம்படுத்துவதற்காக ஐ.எம்.எ நிறுவனம் மாவட்ட நிலையில் கணித, வர்த்தகத் துறைகளில் க.பொ.த உயர் தரத்தில் முதல் நிலைகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசுப் பொருள்களும், சான்றி தழ்களும் வழங்கவுள்ளது டன் CIMA கற்கை நெறியினைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு கட்டணத்தில் கழிவும் வழங்கத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் இன்று மு.ப 9 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட மாணவர்களை பங்கு பற்றச் செய்யுமாறு வட மாகாண கல்விப் பணிப்பாளர் வலயக்கல்விப் பணிப்பாளர் களுக்கு அறிவித்துள்ளார். (எ-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம்

கிளிநொச்சி, ஜன.20

கிளிநொச்சி மாவட்டக் கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டம் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தலைமையில் இடம்பெறும். இந்தத் தகவலை இடம்பெறவுள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பொறியியலாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் இல்லாத பாடங்களின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார்.

(க-405)

## தாலிக்கொடி அபகரிப்பு

கிளிநொச்சி, ஜன.20

கிளிநொச்சி அக்கராயன் குளம் வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணொருவர் அணிந்திருந்த தாலிக் கொடியை மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர் அறுத்துச் சென்றுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி திருமுறிகண்டியில் இருந்து அக்கராயன் குளம் செல்லும் வீதியில் கடந்த செவ்வாய்க் கிழமை பகல் வேளை துவிச்சக்கர வண்டியில் குறித்த பெண் சென்று கொண்டிருந்தார்.

அதேவேளை அந்த வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஒருவர் பெண்ணை இடைமறித்து அவர் அணிந்திருந்த எட்டு பவுன் தாலிக் கொடியை அறுத்துச் சென்றுள்ளார்.

இது சம்பந்தமாக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் குறித்த பெண்ணால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று கடந்த வாரம் கிளிநொச்சிப் பகுதியில் 17 வயதுடைய பெண்ணொருவரிடம் அவர் அணிந்திருந்த ஒன்றரைப் பவுண் சங்கிலியும் இவ்வாறு அறுக்கப்பட்டுள்ளதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான குற்றச் செயல்களைத் தடுக்கக் கூடிய வகையில் பொதுமக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சில்வா தெரிவித்துள்ளார். (எ-06)

# அடிப்படை வசதிகள் இல்லை சுற்றுலாப் பயணிகள் அவதி

### ஒட்டுசுட்டான் பகுதி மக்கள் கடிதம்

முல்லைத்தீவு, ஜன.20

ஒட்டுசுட்டானில் மக்கள் கூடும் இடங்களில் அடிப்படை வசதிகள் இல்லாதது தொடர்பாக வித்தியாபுரம் மக்களால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 50 க்கும் மேற்பட்ட மக்கள் கையொப்பமிட்ட இந்தக் கடிதம் சுகாதாரப் பகுதியினருக்கும் ஒட்டுசுட்டான் உப-பிரதேச சபை அலுவலகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வித்தியாபுரம் வீதியாலும், ஒட்டுசுட்டான் கடை வீதியாலும் சுற்றுலாப் பயணிகளும், பொதுமக்களும் எமது பகுதிக்கு வந்து செல்கின்றனர்.

**குடி தண்ணீர், மலசல கூட வசதி எதுவும் இல்லை. இதனால் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.**

ஆனால் இங்கு குடிதண்ணீர், மலசலகூட வசதி எதுவும் இல்லாத நிலையே காணப்படுகின்றது. இதனால் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக கழிப்பறை வசதிகள் இல்லாததால் வீதியோரங்களிலும், வர்த்தக நிலையங்களுக்கு அருகிலும் அசுத்தம் செய்கின்றனர். இதனால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் தோன்றியுள்ளன.

அத்துடன் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

எனவே இந்தப் பகுதியில் அவசரமான முறையில் கழிப்பறை வசதிகள் மற்றும் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-500)



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி க.பேணாட் உட்பட ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரியர்கள், மதகுருமார்கள் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (எ)

## ஏன் இந்தப் புறக்கணிப்பு? பிரதேச சபையினர் கவலை

வவுனியா, ஜன.20

வவுனியாவில் இடம் பெறுகின்ற அபிவிருத்தி தொடர்பான கூட்டங்களுக்குத் தமக்கு அழைப்பு விடுக்கப் படுவதில்லையென வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் தலைவர், உப-தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற பிரதேச சபையின் கூட்டத்திலேயே இந்தக் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான கூட்டங்களுக்கு அந்தப் பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பிரதேச சபையினரை அழைக்காமல் விடுவது எந்த விதத்திலும் நியாயமானதல்ல. அந்தப் பிரதேசத்தின் பிரச்சினைகள் தொடர்பாக இவர்களுக்குத் தான் தெரியும்.

எனவே இவ்வாறான கூட்டங்களுக்குப் பிரதேச சபையின் தலைவர் அல்லது உறுப்பினர்கள் அழைக்கப்படல் வேண்டும்.

அப்போதுதான் உண்மையான அபிவிருத்தியைக் காண முடியும் என்றும் வவுனியா பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

(க-421)

## வவுனியாவில் பொங்கல் விழா

வவுனியா,ஜன.20

வவுனியா இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தினர் சிறப்பான வகையில் பொங்கல் விழாவைக் கொண்டாடியுள்ளனர். தைத்திருநாளன்று கழகத்தின் பிரதான விளையாட்டு மைதானத்தில் இந்தப் பொங்கல் விழா இடம் பெற்றது.

மைதானத்தின் மையப்பகுதியில் பொங்கல் பானை வைத்து விசேட வழிபாட்டினைத் தொடர்ந்து பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

இந்தக் கழகத்தின் உறுப்பினரும் சிதம்பரபுரம் வித்தியாலயத்தின் உப- அதிபருமான வே.தயானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வவுனியா சனச வங்கியின் முகாமையாளர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். சேவா லங்கா நிறுவனத்தின் உதவிக் கணக்காளர் நா.பாஸ்கரன், வவுனியா வடக்குக் கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிகாரிகள், கமக்கார அமைப்பின் உறுப்பினர்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மாலையில் விளையாட்டு நிகழ்வுகளும் இங்கு இடம்பெற்றன. (க-421)

## பிரதேச சபையின் பொங்கல் விழா

வவுனியா, ஜன.20

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினரின் பொங்கல் விழாவும், கலை நிகழ்வும் சிறப்பாக இடம் பெற்றுள்ளன.

இந்த நிகழ்வுகள் வவுனியா மகா இறம்பைக் குளம் கிராமத்தில் இடம் பெற்றன.

மகா இறம்பைக்குளம் இல.1 கிராம அபிவிருத்திச் சங்கமும் இந்த நிகழ்வில் இணைந்து கொண்டது.

இந்த நிகழ்வில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர்.

பொங்கல் நிகழ்வுகளையடுத்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(க-421)

## தனியார் வாகனங்களுக்கு தடை

வவுனியா,ஜன.20

வவுனியா பஸ் நிலையத்தினுள் தனியார் வாகனங்கள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை இந்தத்தடை அமுலில் இருக்கும். பஸ் நிலையத்தினுள் தனியார் வாகனங்கள் சென்று வருவதால் ஏற்பட்ட இடையூறுகளைக் கருத்தில் கொண்டே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

(க-421)

# வட்டக்கச்சி ம.வியில் கால்கோள் விழா

கிளிநொச்சி, ஜன.20

கிளி.வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் கால் கோள் விழா மிகவும் சிறப்பாக இடம் பெற்றது.

இந்த நிகழ்வு தரம் 1 இற்கு மாணவர்களை இணைத்து வரவேற்கும் முகமாக கிளி. வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் கடந்த 16ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு தரம் 2 மாணவியான செல்வி பரமசிவம் மதுரா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த பிரதிக் கல்விப்பணிப்பாளர் கோ.செல்வராசா மற்றும் சிறப்பு விருத்தினராக சிவிக் சென்ரர் கிராம சேவையாளர் நீ. ஜோன்ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் பாடசாலை அதிபர் எம்.சி.எல்.மனுவல், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

வித்தியாலய முன்றலில் இருந்து தரம்-1 மாணவர்கள் மற்றும் விருந்தினர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியவற்றுடன் நிகழ்வுகள் அனைத்தும் பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற்றன.

இந்தநிகழ்வில் உரையாற்றிய பிரதம விருந்தினரான பிரதிக்கல்விப் பணிப்பாளர் கோ.செல்வராசா; ''இந்த மாணவச் சிறார்களின் வளர்ச்சிகளில்த்தான் இந்தப் பிரதேசங்களின் வளர்ச்சியும் தங்கியுள்ளது. இந்த மாணவர்கள் தரமானவர்களாக வளர்த்தெடுக்கப்பட்டு இந்தப் பிரதேசங்களின் வளர்ச்சிக்கும் பங்களிக்கக்கூடிய ஓர் ஒழுக்கமுள்ள ஆரோக்கியமான சமுதாயமாகக் கட்டியெழுப்பப்பட வேண்டியது இந்த மாணவர்களுக்குக் கல்வி புகட்டுகின்ற தரமான ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. இதற்கு அனைவரும் தமது தரமான ஒத்துழைப்புகளை வழங்க வேண்டிய தேவைப்பாடு உண்டு'' என்றார். இந்நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்வுகளும் மிகவும் சிறப்பாக இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (க)

## உள்ளூராட்சி சபை உறுப்பினருக்கு உரிமைகள் இன்னும் இல்லை

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடைபெற்று ஒன்பது மாதங்கள் முடிவின் பின்னரும் கூட இன்னமும் பிரதேசசபை உறுப்பினர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படவில்லை. தொடர்ந்தும் மறுக்கப்பட்டே வருகின்றன. இவ்வாறு மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான முதலாவது ஒன்றுகூடலிலேயே இந்தக் கருத்தை 12 பிரதேச சபை உறுப்பினர்களும் முன்வைத்தனர் என்று மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜேம்ஸ் சுதாகரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

பிரதேச சபைக்கு உறுப்பினர்கள் நியமனமாகி 9 மாதங்கள் கடந்த பின்னும் உறுப்பினருக்குரிய அடையாள அட்டைகள் வழங்கப் படவில்லை. மக்கள் எமது பிரதேசத்தில் நிகழும் அபிவிருத்திப் பணிகளை பார்வையிடுவதற்கோ அல்லது மக்கள் சந்திப்புக்களை மேற்கொள்வதற்கோ எந்த விதமான வாகன வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக் கப்படவில்லை. இவ்வாறான வசதிகளை பெற்றுக் கொள்வது எமது உரிமை.- என்றும் கருத்து வெளியிட்ட உறுப்பினர்கள் இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு கடிதம் மூலமும் தெரியப் படுத்தியுள்ளனர். (ங)

## பெண்ணுக்குத் தண்டம்

கிளிநொச்சி, ஜன.20

கிளிநொச்சி கண்டாவளை ஊரியான் பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி கண்டாவளை ஊரியான் 3ஆம் யுனிற் பகுதியில் வீட்டில் வைத்துக் கசிப்பு விற்பனை செய்து வந்த பெண் ஒருவரைக் கிளிநொச்சிப் பொலிஸார் 370 மில்லி லீற்றர் கசிப்புடன் கடந்த 11ஆம் திகதி கைது செய்திருந்தனர்.

குறித்தபெண்ணைநேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் எஸ். விஜயராணி முன்பாக முன்னிலைப்படுத்தினர்.

இந்தப் பெண்ணிடம் 5 ஆயிரம் தண்டம் அறவிடுமாறும் தவறும் பட்சத்தில் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (க-6)

## பொதுநோக்கு மண்டபங்கள் திறப்பு

அக்கராயன், ஜன.20

போரின்போது சேதமடைந்து காணப்பட்ட அக்கராயன் பிரதேசத்தில் உள்ள பொது நோக்கு மண்டபங்கள் தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

ஸ்கந்தபுரம் மேற்கு பொதுநோக்கு மண்டபம், கண்ணகைபுரம் பொது மண்டபம், யூனியன்குளம் பொதுநோக்கு மண்டபம், புதுமுறிப்பு பொதுநோக்கு மண்டபம், வன்னேரிக்குளம் பொதுநோக்கு மண்டபம் ஆகிய பொதுநோக்கு மண்டபங்களே அண்மையில் மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளன.

(எ-313-410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்டத்தில் இரண்டாம் கட்ட நெல்சிப் பணிகள்

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்.மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டுக்கான நெல்சிப் இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்காக சகல பிரதேச சபைகள் - நகரசபைகள் தமது விவரங்களை உள்ளூராட்சி ஆணையக நெல்சிப் திட்டப்பிரிவுக்கு அனுப்பியுள்ளனர். விரைவில் பத்திரிகை மூலம் கேள்வி அறிவித்தல் விடப்பட்டு பெப்ரவரி இறுதி யில் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச சபைத் தலைவர்கள் இதற்கான விவரங்களை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பற்றைகளை அழித்து சாவைத் தவிருங்கள்!

## நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் வலியுறுத்து

தென்மராட்சி, ஜன.20

தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள பற்றைகளை அழித்து டெங்கு மரணங்களைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.

சுகாதார அமைச்சின் தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் பளைப் பகுதியில் கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இதன் போதே இவ்வாறு வலியுறுத்தப்படுகிறது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தலைவர் எஸ்.டி. அன்ரன் தலைமையில் சபை உறுப்பினர்கள், சபை செயலாளர் சி.சிவப்பிரகாசம், கிளிநொச்சி பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனை உத்தியோகத்தர் சுப்பிரமணியம், பொது சுகாதார பரிசோதகர், குடும்ப நல சேவையாளர், சுகாதாரத் தொண்டர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோருடன் பொலிஸாரும் இணைந்து நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் டெங்கு நுளம்பு உற்பத்தி செய்யும் இடங்களைத் துப்பரவு செய்து வருகின்றனர். (ம-207)

## பனம்பொருள் உற்பத்தியை சந்தைப்படுத்த நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஜன.20

பனம்பொருள் உற்பத்திகளின் விற்பனைக்கும் நுகர்வுக்குமான மத்திய சந்தை வடக்கில் புளியங்குளத்திலும் தெற்கில் குருநாகலிலும் அமைக்கப்படவுள்ளன.

தற்போது மத்திய சந்தைகளை அமைப்பதற்கான முன் ஆயத்த வேலைகள் மும்முரமாக இடம்பெற்று வருவதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரட்ணம் கூறினார்.

பனை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான புளியங்குளத்திலுள்ள 20 ஏக்கர் காணியின் ஒரு பகுதியில் வடக்குக்கான மத்திய சந்தை அமைக்கப்படவுள்ளது.

பனம் சார் உற்பத்திகளைச் சர்வதேச எதிர்பார்ப்புக்கு அமைவாகத் தயாரிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாடுகள் சில எமது உற்பத்தியிப் பொருள்களை இறக்குமதி செய்து வருகின்றன.

மக்களின் தேவைகள், எதிர்பார்ப்புகளுக்கு அமைவாகவே பனம் சார் உற்பத்திப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.

இந்த நிலையில் தென்னிலங்கை மக்களும், தென்னிலங்கையிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வரும் மக்களும் பனம் சார் உற்பத்திகளை நுகர்வது அதிகரித்துள்ளது.

இதன் காரணமாகவே வடக்கிலும் தெற்கிலும் மத்திய சந்தை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டதாக சபைத் தலைவர் சீவரட்ணம் மேலும் கூறினார். (ம-14)

## நயினையில் நவதளம் கிரியைகள் நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜன.20

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய அதிசுந்தர நவதள நவகலச மஹா இராஜ கோபுர சகித புனராவர்த்தன அஷ்டபந்தன உத்தமோத்தமத்ரயத்திரும்சத் (33) குண்ட மஹாயாக பிரதிஷ்டா மாஹாகும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9.21 மணி தொடக்கம் 10.44 மணிவரை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு கிரியாரம்பங்கள் நேற்று வியாழக்கிழமை காலை 9.31 மணிக்கு ஆரம்பமாகின.

கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகிய கிரியைகள் 28ஆம் திகதி சனிக்கிழமை வரை இடம்பெறும். 23ஆம் திகதி திங்கட்கிழமை இறை மகா யாகம் ஆரம்பமாகும். 25ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி முதல் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறும்.

கிரியைகளிலும் கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழாவிலும் பிரதம சிவாச்சாரியார் ஸாகித்ய சிரோன்மணி வித்தியாகஸ்நிதி சிவஸ்ரீ வை.மு.முத்துக்குமாரசாமிக் குருக்கள் தலைமையில் ஐம்பதுக்கும் அதிகமான சிவாச்சாரியார்கள் கலந்துகொள்வர். நேற்றைய கிரியாரம்பத்தின்போது நயினாதீவைச் சேர்ந்த மக்களுடன் வெளியிடங்களைச் சேர்ந்தவர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர். (ம-7)

## 3 மாத காலமாக சம்பளம் இல்லை

வலி.வடக்கு, ஜன.20

கடந்த மூன்று மாத காலமாக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள கிராம அலுவலர்களுக்குச் சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கிராம அலுவலர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த வருடம் கிராம அலுவலர்களின் சம்பளத்தில் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் மாற்றம் கொண்டு வரப்பட்டு அது சம்பந்தமான சுற்று நிருபமும் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருந்தன.

இந்தச் சம்பள மாற்றத்தால் கிராம அலுவலர்கள் குறிப்பிட்ட சம்பள அதிகரிப்பைப் பெற்றுள்ளார்கள். இந்த சம்பள அதிகரிப்பைக் கணக்கிட்டு ஏனைய பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் குறிப்பிட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் இந்தச் சம்பள அதிகரிப்புச் செய்யப்படாததுடன் நிலுவைகளும் வழங்கப்படாது இருந்து வருகின்றது.

இது சம்பந்தமாக சம்பளக் கணக்கீட்டை மேற்கொள்வதற்கு அங்கு கடமையாற்றும் ஊழியர்களினால் மேற்கொள்ள முடியாது இருப்பதே காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-86)

## வேலணை பிரதேச சபையில் ஆதனப் பதிவுகள் துரிதம்

யாழ்ப்பாணம், ஜன.20

வேலணை பிரதேச சபையில் முதற் கட்டமாக 6 வட்டாரங்களின் ஆதனப் பதிவுகள் துரிதமாக இடம் பெறுகின்றன.

தற்போது முதற்கட்டத்தில் சேர்க்கப்படாத முதல் நான்கு வட்டாரங்களிலும் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆதனப் பதிவை மேற்கொள்ளுமாறு வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்துள்ளார்.

வேலணை உப அலுவலக பிரிவுக்கு உட்பட்ட மக்கள் எங்கு இருந்தாலும் இதற்கான ஆவணங்களுடன் வருகை தந்து, பதிவை மேற்கொள்ளுமாறும், அதேபோல் நயினாதீவு பிரதேச ஆதனபதிவுகளும் இடம் பெறுகின்றன என்றும் சபைத்தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 35 வருடங்களின் பின்னர் முன்னெடுக்கப்படும் இப்பணியால் நன்மை அடையப்போவது பொது மக்களே. எனவே ஆதன மீள் பதிவை மேற்கொண்டு சபையின் நடவடிக்கைக்கு உதவுங்கள் என்று அவர் மேலும் கூறினார். (ம)

## நயினாதீவு–குறிகாட்டுவான் படகுச் சேவையில் மாற்றமில்லை

யாழ்ப்பாணம், ஜன.20

நயினாதீவு-குறிகாட்டுவானுக்கான கடல் போக்குவரத்துச் சேவையில் எவ்வித மாற்றமும் இல்லை. வழமைபோன்று அரைமணி நேரத்துக்கு ஒரு தடவை படகுச் சேவைகள் இடம் பெறுகின்றன.

நாளொன்றுக்குப் பதினைந்து படகுகள் சேவையில் ஈடுபடுவதாக நயினாதீவு படகு உரிமையாளர் சங்கத் தலைவர் சி.தர்மலிங்கம் கூறினார்.

படகுச் சேவைகள் வழமைபோன்று இடம்பெறுவதாகவும் விடுமுறை தினங்களில் கூடுதல் படகுகள் மூலம் மக்களுக்கான போக்குவரத்தைச் சிரமமற்ற வகையில் நடத்துவதாகவும் அவர் கூறினார். நயினாதீவு கும்பாபிஷேக தினத்தில் பெரும் எண்ணிக்கையில் பக்தர்கள் வருகை தருவார்கள் என்பதால் 45 படகுகளும் மக்களின் வரவைப் பார்த்து சேவைக்கு விடப்படும் எனவும் தகவல் தெரிவித்தார். (ம-7)

# யாழ்.குடாநாட்டில் குவியும் மோ.சைக்கிள், ஓட்டோக்கள்!

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்.மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோக்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. இருப்பினும் 2006 ஆம் ஆண்டு இருந்த மினிபஸ், இரட்டைத் தேவை வாகனங்களின் எண்ணிக்கை கடந்த வருடம் குறைவடைந்துள்ளது.

இவ்வாறு வடமாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் பி.ஜெயகரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் 2006 ஆம் ஆண்டு 34 ஆயிரத்து 325 ஆக இருந்த மோட்டார் சைக்கிள் பாவனை 2010 ஆம் ஆண்டு 48 ஆயிரத்து 360 ஆக அதிகரித்தது. 2011 ஆம் ஆண்டு மேலும் அதிகரித்து 60 ஆயிரத்து 36 ஆகக் காணப்பட்டது.

ஓட்டோக்களைப் பொறுத்தவரையில் 2006 ஆம் ஆண்டு ஆயிரத்து 452 ஆக இருந்தது. இது 2010 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 17 ஆகவும் 2011 ஆம் ஆண்டு 5 ஆயிரத்து 659 ஆகவும் காணப்பட்டது.

2006 ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 250 ஆகக் காணப்பட்ட கார்களின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டு ஆயிரத்து 850 ஆகக் குறைவடைந்து 2011 ஆம் ஆண்டு அதிகரித்து 2 ஆயிரத்து 432 ஆகக் காணப்பட்டது.

லாண்ட்மாஸ்ரர், டிரக்டர்கள் 2006 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 250 ஆகக் காணப்பட்ட போதும் 2010 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 327 ஆக அதிகரித்தது. இது 2011 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 911 ஆகக் காணப்பட்டது.

2006 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 200 ஆகக் காணப்பட்ட லொறிகளின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டு ஆயிரத்து 723 ஆகக் குறைவடைந்து 2011 ஆம் ஆண்டு மீண்டும் அதிகரித்து 2 ஆயிரத்து 355 ஆகக் காணப்பட்டது.

மினிபஸ் 2006 ஆம் ஆண்டு ஆயிரத்து 350 ஆகக் காணப்பட்ட போதும் 2010 ஆம் ஆண்டு 692 ஆகக் குறைவடைந்துள்ளது. 2011 ஆம் ஆண்டு மீண்டும் அதிகரித்து 724 ஆகக் காணப்பட்டது.

2006 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 250 ஆகக் காணப்பட்ட இரட்டைத் தேவை வாகனங்கள் 2010 ஆம் ஆண்டு ஆயிரத்து 307 ஆகக் குறைவடைந்து 2011 ஆம் ஆண்டு மீண்டும் ஆயிரத்து 347 ஆக அதிகரிக்கப்பட்டிருந்தது.

அரச வாகனங்கள் 2006 ஆம் ஆண்டு 800 ஆகக் காணப்பட்டது. 2010 ஆம் ஆண்டு 115 ஆக குறைவடைந்து 2011 ஆம் ஆண்டு 120 ஆக அதிகரித்து இருந்தது என்றார். (ம-15)

சிந்தியுங்கள்...! சொல்லுங்கள்...! வெல்லுங்கள்...!

குழந்தைகள் அறிவுக்கூர்மையும் திறமையும் உள்ளவர்களாக
வளர்வதற்கு பெற்றோரால் ஏதாவது உதவி செய்ய முடியுமா?
அறிந்துகொள்ள, ஞாயிற்றுக்கிழமை 11ஆம் பக்கத்தில் பிரசுரமாகும் "உங்கள் குழந்தையின் அறிவுக்கூர்மையை அதிகரியுங்கள்"
என்னும் கட்டுரையை வாசியுங்கள். அதன் கீழுள்ள கேள்விகளுக்குப் பதிலளித்துப் பரிசுகளை வெல்லுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி அகலிப்புப் பணிகளுக்காக வந்தவர் வீடுகளில் சோதனை!

**மதுபோதையில் சென்ற மூவர் அந்தப் பகுதியில் மக்களை அச்சுறுத்தி அடையாள அட்டைகளைப் பரிசோதனை நடத்தியுள்ளனர். இராணுவப் புலனாய்வு பிரிவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்ததால் மக்கள் அச்சத்துடன் அடையாள அட்டைகளைக் காண்பித்தனர்.**

தென்மராட்சி, ஜன.20

வீதி அகலிப்புப் பணிக்கு வந்த தென்னிலங்கை வாசிகள் வீடுகளில் பரி சோதனை நடத்துவதா? இதற்கு யார் அனுமதி கொடுத்தது? என்று கேள்வி எழுப்பியுள்ளனர் சாவகச்சேரி மக்கள்.

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள கிராமமொன்றில் மதுபோதையில் சென்ற மூவர் அந்தப் பகுதியில் மக்களை அச்சுறுத்தி அடையாள அட்டைகளைப் பரிசோதனை நடத்தியுள்ளனர்.

இராணுவப் புலனாய்வு பிரிவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்ததால் மக்கள் அச்சத்துடன் அடையாள அட்டைகளைக் காண்பித்தனர்.

இவர்களின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட கிராம இளைஞர்கள் சாவகச்சேரி பொலிஸாருக்குத் தகவல் கொடுத்த பின்னர் புலனாய்வுத் துறையினர் எனக் கூறியவர்களிடம் துருவித் துருவி சிங்களத்தில் விசாரித்தனர்.

இளைஞர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாத நிலையில் இருவர் அங்கிருந்து ஓட்டம் எடுக்க மற்றவரை பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் சிலரிடம் விசாரணை நடத்திய போது சாவகச்சேரி பெரிய அரசடிப் பகுதியில் நடைபெறும் வீதி அகலிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் மதுபோதையில் கிராமத்துக்குச் சென்றதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நபரைக் கைது செய்த பொலிஸார் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துப்பின்னர்பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். (ம-207)

## பளையில் பனைகளைத் தறிக்க அனுமதி அழித்தவர்கள் யார்?

பளை, ஜன.20

மீளக் குடியமர இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

ஆனால், அந்தப் பகுதியில் காணப்படும் பனைகள் வகை தொகையின்றி இரவு வேளைகளில் தறிக்கப்பட்டு இரவோடிரவாக வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் அரசர்கேணிப் பகுதியில் அண்மைக்காலமாக இடம் பெற்று வருவதாக மக்கள் தெரிவித்தனர்.

அரசர்கேணிப் பகுதியின் ஒரு பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் ஏனைய பகுதியில் மக்கள் செல்ல இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் தினமும் வாகனங்களில் வருவோர் இப் பகுதியில் காணப்படும் பனை மரங்களை அடியுடன் தறித்து வீழ்த்தி துண்டாக்கி வாகனங்களில் ஏற்றிச் சென்று விடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை பளை பிரதேச செயலர், பளைப் பொலிஸார், கிராம அலுவலர், பனை அபிவிருத்திச் சபையினர், படையினர் கூட்டாக கண்காணித்து அப் பகுதி மக்களின் வாழ்வாதாரப் பயிரான பனை மரங்களைத் தறிக்காது பாதுகாக்குமாறு மீளக்குடியமர அனுமதிக்கப்படாத மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-207)

## பயிர்ச் சிகிச்சை முகாமில் அக்கறை காட்டாத விவசாயிகள்

**விவசாயிகளின் தேவை கருதியும் பயிர்களின் பாது காப்பு, சிகிச்சை போன்றவற்றின் தன்மையை விளக்கும் நோக்குடனும் இந்தப் பயிற்சி முகாம் இடம்பெற்றது.**

யாழ்ப்பாணம், ஜன.20

மிருசுவிலில் அண்மையில் நடைபெற்ற நடமாடும் பயிர்ச் சிகிச்சை முகாமில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை என்று மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் ஸ்ரீ பாலசுந்தரம் தெரிவித்தார்.

பத்திரகொட நெல்ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து வருகை தந்த ஆராச்சியாளர்களால் இந்த நடமாடும் பயிர்ச் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது.

இந்தப் பயிர்ச் சிகிச்சை முகாமில் மிகமிக குறைந்த எண்ணிக்கையான விவசாயிகளே கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

நாற்பது தொடக்கம் ஐம்பது வரையிலான விவசாயிகள் இந்தச் சிகிச்சை முகாமில் கலந்து கொண்டனர் மாவட்டத்தின் ஏனைய பகுதி விவசாயிகள் இதில் கலந்து கொள்ளவில்லை.

விவசாய பயிர்களை எவ்வாறு பாதுகாப்பது போன்ற விளக்கங்கள் இந்தப் பயிர்ச் சிகிச்சை முகாமில் எடுத்துக் கூறப்பட்டது.

விவசாயிகளின் தேவை கருதியும் பயிர்களின் பாது காப்பு சிகிச்சை போன்றவற்றின் தன்மையை விளக்கும் நோக்குடனும் இந்தப் பயிற்சி முகாம் இடம்பெற்றது.

விவசாயிகளின் இத் தேவையை பூர்த்தி செய்வதற்கு அதிக அக்கறை காட்டாதது குறித்து உதவி விவசாயப் பணிப்பாளர் கவலை தெரிவித்தார். (ம-17)



கடந்த இருபது வருடங்களின் பின் மீள இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்ட காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலையில் தரம் ஒன்றுக்கான கால்கோள் விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் மாணவர்கள் வரவேற்கப்படுகின்றனர். (ம-250)

## கழிவுகள் கொட்ட கொள்கலன்கள்

யாழ்ப்பாணம், ஜன.20

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பெரும்பாலான இடங்களில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவதற்கான கொள்கலன்கள் அமைக்கப் பட்டுள்ளன.

வீதியோரங்களில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தக் கொள்கலன்களில் குப்பைகள் மற்றும் கழிவுப் பொருள்களை கொட்டு மாறும் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் தமது குடியிருப்புப் பகுதிகளில் அகற்றும் கழிவுப் பொருள்களை இந்த கொள்கலன்களில் போட்டு வருகின்றனர்.

இந்த கொள்கலன்களில் சேர்க்கப்படும்கழிவுப்பொருள்கள்களை பிரதேச சபை தமது வாகனம் மூலம் தினமும் அகற்றி வரு கின் றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## டெங்கு ஒழிப்பு புகையூட்டல்

யாழ்ப்பாணம், ஜன.20

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட வீடுகள், பொது இடங்கள், வீதிகள் ஆகியவற்றுக்கு டெங்குப் புகையூட்டல் நேற்று இடம்பெற்றது.

கொக்குவில் அச்சுக்கூட வீதியில் டெங்கு நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டதை அடுத்தே இந்தப் புகையூட்டல் இடம்பெற்றது என்று நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்த குமார் தெரிவித்தார்.

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துடன் நல்லூர் பிரதேச சபையும் இணைந்து இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டது.

பொதுமக்களின் நன்மை கருதி டெங்கு ஒழிப்புப் புகையூட்டல் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு மக்களின் பங்களிப்பும் தேவையான ஒன்றாகும் என்று பிரதேச சபை தெரிவித்தது. (ம-311-4)

## நிர்வாக அலுவலர்கள் இல்லை கடமைகள் முடங்கும் நிலை

வலி.வடக்கு, ஜன.20

தீவகப் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர் பிரிவுகளில் நிர்வாக அலுவலர் பதவிகள் வெற்றிடமாகவே உள்ளன.

இதனால் அலுவலகக் கடமைகள் பாதிப்படைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

இந்தப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார் எனவும் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் தரம் ஒன்றைச் சேர்ந்த அலுவலர்கள் மூலம் இந்த வெற்றிடங்கள் நிரப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

வேலணை, காரைநகர் பிரதேச செயலகங்கள், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவுகள் ஆகியவற்றிலேயே இந்த வெற்றிடங்கள் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## விவசாய நிலங்களில் கடற்படை முகாம்கள்

**மண்டைதீவு மக்கள் விசனம்**

**நிலம் இருந்தும் இன்னொருவரிடம் தொழிலுக்காக தங்கிவாழும் சூழ்நிலையில் மக்கள் உள்ளனர்.**

யாழ்ப்பாணம், ஜன.20

மண்டைதீவு முதலாம் வட்டாரத்தில் உள்ள முதல் தரமான விவசாய நிலங்களில் கடற்படையினர் முகாம்களை அமைத்துள்ளனர்

இதனால் அந்தப் பகுதி விவசாயிகள் 21 வருடங்கள் கழித்தும் தமது சொந்தக் காணிகளில் பயிர்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமல் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர் என்றும் கவலை தெரிவிக்கின்றனர்.

பயறு, உழுந்து, கௌப்பி போன்ற உப உணவுப் பயிர்களையும், மிளகாய், வெங்காயம், மரக்கறி போன்றவற்றையும், பணப் பயிரான புகையிலையையும் செய்கை பண்ணுவதற்கு ஏதுவான பல ஏக்கர் காணிகளில் கடற்படையினர் தமக்கான தளத்தை அமைத்துள்ளனர்.

அந்தப் பகுதி விவசாயிக்ள் மத்தியில் இது பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதிகரித்த பொருளாதார சுமைகளுக்கு முகம் கொடுக்க முடியாது தொடர்ந்தும் வாடகை வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும் தங்கி வாழ்வது ஒருபுறமிருக்க, மறுபுறம் சொந்தமாய் விவசாயத்தை மேற்கொள்ளக் கூடிய தகுதி இருந்தும், நிலம் இருந்தும் இன்னொருவரிடம் தொழிலுக்காக தங்கிவாழும் சூழ்நிலையில் அவர்கள் உள்ளனர்.

கடந்த சில நாளுக்கு முன்னர் மண்டைதீவின் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த ஒரு பகுதி வீடுகள் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இது போன்று தமது விவ சாய நிலங்களையும் விரை வில் மீட்டுத்தர சம்பந்தப்பட் டவர்கள்நடவடிக்கைஎடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-ரி-)

## நுளம்பு பெருக வழி வகுத்தால் வழக்கு

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேசிய நுளம்பு ஒழிப்பு வாரச் செயற்பாடுகளில் வீதியோரங்களில் குப்பை கொட்டியோர், நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான கொள்கலன்களை வைத்திருந்தவர்கள் ஆகியோருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றது.

வீடுவீடாகச்செல்லும்குழுவினர் நுளம்பு பெருக்கத்துக்கு வழிவகுப்போர் எனக் கருதும் பொதுமக்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து வருகின்றனர். இவர்களுக்கான வழக்குகள் அடுத்த வாரம் நீதிமன்றில் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இன்று வரணிப் பகுதியிலும் நாளை கொடிகாமப் பகுதியிலும் நாளை மறுதினம் உசன் மிருசுவில் பகுதியிலும் நடைபெறவுள்ள நுளம்பு ஒழிப்பு வார செயற்பாடுகளுக்கு அப் பகுதி மக்களை ஒத் [illegible] ஒலிபெருக்கி மூலம் அறிவிப்புவிடுத்துள்ளனர். (ம-207)

## பண்ணையில் புதிய கட்டம்

வடமாகாணசுகாதார அமைச்சுக்கெனப் பண்ணையில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பண்ணை காசநோய் வைத்தியசாலை வளாகத்தில் இந்த புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

மூன்று மாடிகளை கொண்டு அமைக்கப்பட்ட இப்புதிய கட்டடத்தொகுதியில்தற்போது இரண்டுமாடி அமைக்கப்பட்டு நிறைவு பெற்றுள்ளன.

இப் புதிய கட்டடத்தில் வடமாகாண சுகாதார அமைச்சு மற்றும் வடமாகாண சுகாதாரத் திணைக்களம் போன்றவற்றின் செயற்பாடுகள் விரைவில் ஆரம்பிக்கப் படும் என்று கூறப்பட்டுள்ளது.

தற்போது இந்த அமைச்சு மற்றும் திணைக்களம் யாழ். மாட்டீன் வீதியில் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது. இது இவ்வாறிருக்க இந்த புதிய கட்டடத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இந்தக் கட்டடத்தின் மூன்றாவது மாடியில்வடமாகாண ஆயுள்வேதத் திணைக்களம் செயற்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரணாலயத்தில் மூண்டது தீ!

நுவரெலியா, ஜன.20

நுவரெலியா, அக்கரபத்தனை, போபத்தெல சரணாலயத்தில் நேற்று முன்தினம் காலை தீவிபத்து ஏற்பட்டதாக மாவட்ட இடர் முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ஏரந்தன ஹேமவர்தன தெரிவித்தார். வனப்பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்களும், பொலிஸாரும் கூட்டாக இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். (ச)

## பல்கலைக்கழக மாணவர்கள் ஐவருக்கு பிணை

**இனந்தெரியாத நபர்களால் மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களே கைதாகி பிணையில் விடுதலை.**

பலாங்கொடை, ஜன.20

சிறைவைக்கப்பட்டிருந்த சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 5 மாணவர்களும் ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பலாங்கொடை நீதிவான் முன்னிலையில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டு பின் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி இரவு 10.15 மணிக்கு சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் வைத்து நான்கு மாணவர்கள் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் செயற்பட்ட மாணவர்கள் ஐவரே கைதுசெய்யப்பட்டு தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சட்டவிரோத கடைகள் உடைப்பு

தியத்தலாவை, ஜன. 20

தியத்தலாவையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த வர்த்தக நிலையங்கள் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தியத்தலாவை பொல வீதியில் இரு மருங்கிலும், சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த சுமார் 20 வர்த்தக நிலையங்களும், லொத்தர் கூடாரங்களும் உடைத்து அகற்றப்பட்டுள்ளன.

தியத்தலாவை பிரதான வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களும் உடைத்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

# போரால் மூடிக்கிடந்த பாடசாலைகள் திறப்பு

### கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் தகவல்

மட்டக்களப்பு, ஜன.20

போர் சூழ்நிலை காரணமாக மூடப்பட்டிருந்த இரு தமிழ் பாடசாலைகள் கடந்த வாரம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அம்பாறை கல்வி வலயத்துக்குட்பட்ட அம்பாறை தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் திருகோணமலை கல்வி வலயத்திற்குட்பட்ட முதலிகுளம் தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே இவ்வாறு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பிரபாத் விதானகே தெரிவித்தார்.

இன்னும் சில தினங்களுக்குள் திருகோணமலை வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட மொரவெவ வடக்கு வித்தியாலயம் மற்றும் சரண ஜயந்திபுர வித்தியாலயம் ஆகியனவும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காகத் திறந்து வைக்கப்படவுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

கடந்தகால போர் சூழ்நிலை காரணமாகவும், கிழக்கு மாகாணத்தில் மாணவர்களின் வரவின்மை காரணமாகவும் 27 பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. தற்போதும் சில பாடசாலைகளைத் திறப்பதில் பலவிதமான சிக்கல்நிலை காணப்படுகிறது.

இதனால் அவற்றையும் படிப்படியாகத் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



மும்முரமாக நடைபெற்றுவரும் திருகோணமலை மாவட்டத்தின் பெரும்போக நெல் அறுவடை.

## மீளவும் ஹிங்குராண சீனித் தொழிற்சாலை

அம்பாறை,ஜன.20

நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த அம்பாறை ஹிங்குராண சீனித்தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் மீண்டும் எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பிக்கவுள்ளதாக கல்லோயா பெருந்தோட்டக் கம்பனியின் நிறைவேற்று அதிகாரி காமினி ரட்னாயக்கா தெரிவித்தார்.

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் இந்தத் தொழிற்சாலை புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்தத் தொழிற்சாலையில் சீனியைச் சுத்திகரிப்பது முதல் சீனி உற்பத்தியினை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இந்தத் தொழிற்சாலையினால் நாளொன்றுக்கு 160 மெற்றிக்தொன் சீனியைச் உற்பத்தி செய்ய முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத்தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதன் மூலம் 1100 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கமுடியும் என்று அவர் தெரிவித்தார். (ச)

## பதில் முதலமைச்சர் பதவியேற்றார்



கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம். எஸ். உதுமாலெப்பை கிழக்கு மாகாண பதில் முதலமைச்சராக ஆளுநர் ஓய்வு பெற்ற ரியல் அட் மிரல் மொஹான் விஜேயவிக்ரம முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் டென்மார்க் நாட்டுக்கு இருவாரகால சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளதாலேயே மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை பதில் முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங)

## வர்த்தக நிலையங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை

கண்டி,ஜன.20

பாதுகாப்பு அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கண்டி மாநகர சபை என்பன கூட்டாக இணைந்து, கண்டி நகரின் குறுக்கு வீதிகளில், சட்டவிரோதமாக - இடையூறு ஏற்படுத்தும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனைத்து தற்காலிக கடைகளையும் அகற்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன என்று கண்டி நகர ஆணையாளர் சந்தன தென்னக்கோன் தெரிவித்தார்.

இதற்கமைய கண்டி, காசல் ஒழுங்கை மற்றும் அலியாகிய மாவத்தை ஆகிய பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை கடைகள் அகற்றப்பட்டன என்று அவர் தெரிவித்தார்.

நகரிலுள்ள அனைத்து குறுக்கு வீதிகளையும் அவசர நிலைமையின்போது பயன்படுத்தக்கூடிய வகையில் தயார் நிலையில் வைத்திருக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## சப்ரகமுவ பல்கலை வழமைக்குத் திரும்பியது

இரத்தினபுரி,ஜன.20

சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர்கள் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பல்கலைக்கழக விரிவுரைகள் மற்றும் பரீட்சை நடவடிக்கைகள் வழமைபோல் நடைபெறுகின்றன என்று விரிவுரையாளர்கள் சங்கத்தின் தலைவர் கலாநிதி ஏ. டபிள்யூ விஜேரத்ன தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் பிரதம மாணவ ஆலோசகரின் வீட்டின் மீது மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து சப்ரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தினர் தொழிற்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுத்தனர் என்று அவர் தெரிவித்தார்.

தற்போது அந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய சில மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## பண்டிகைக் காலங்களில் மதுவுக்கே அதிக பணம்

மஸ்கெலியா, ஜன. 20

மலையக மக்கள் தமது பண்டிகை நாள்களின்போது மதுபானத்துக்கே அதிகளவிலான பணத்தை செலவு செய்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த தீபாவளியின் போது நுவரெலியா மாவட்டத்தில் மட்டும் சுமார் 3 கோடி ரூபாவுக்கு மதுபானம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது மிகவும் வருந்தத்தக்க விடயமாகும் என்று மலையக நலன்விரும்பிகள் தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று இம்முறை தைப்பொங்கல் தினத்தன்று மஸ்கெலியாவிலுள்ள மதுபான சாலைகளில் சுமார் 70 லட்சம் ரூபாவுக்கு மதுபானம் விற்பனை செய்யப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது. பெருந்தோட்டப் பகுதியில் திரும்பும் திக்கெல்லாம் மதுபானசாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

இதன்காரணமாக 19 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் முதல் முதியோர் வரை தமது உழைப்பின் பெரும்பகுதி பணத்தை மதுபானத்துக்கே செலவிடுகின்றனர்.

அதேவேளை, நாளுக்கு நாள் குடும்ப வன்முறைகளும் அதிகரித்து வருவதால் தோட்டத்துப் பெண்கள் பொலிஸ் நிலையங்களை நாடிச்செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

எனவே, உடலை வருத்தி உழைக்கும் மலையக மக்கள் மதுப்பழக்கத்திலிருந்து [illegible] லாக உள்ளது. (ச)

## கிழக்கு மாகாணத்தில் மக்களுக்கிடையே இனமுறுகலை ஏற்படுத்த சதி முயற்சி

**விவேகானந்தரின் உருவச்சிலை உடைக்கப்பட்டமை காட்டுமிராண்டித்தனமான செயலாகும் என்று கல்முனை மாநகரசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் குற்றச்சாட்டுகிறார்.**

மண்டூர், ஜன.20

கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் இடம்பெறும் சிலை உடைப்பு சம்பவங்களின் மூலம் அங்கு வாழ்கின்ற தமிழ்,சிங்கள, முஸ்லிம் மக்களுக்கிடையே ஓர் இனமுறுகலை ஏற்படுத்தி, மீண்டும் சமூகங்களுக்கிடையே பிளவை ஏற்படுத்தக்கூடிய ஒரு சதி முயற்சி இடம்பெறுகின்றது என்று கல்முனை மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் அழகரெத்தினம் வியக்கோன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் சிலை உடைப்புச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. அதிலும் குறிப்பாக, மட்டக்களப்பு, ஆரையம்பதியில் சுவாமி விவேகானந்தரின் உருவச்சிலை உடைக்கப்பட்டமை மிகவும் காட்டுமிராண்டித்தனமான செயலாகும்.

இந்தச் செயற்பாட்டைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கான தண்டனையை வழங்கவேண்டிய பொறுப்பு அரசையே சாரும். அவ்வாறு உரியவர்கள் தண்டிக்கப்படாவிடின் இவ்வாறான செயற்பாடுகள் மேலும் தொடர்வதற்கு வழியேற்படும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவல் உடை அணியும் பொலிஸார்!

## 13 ஆண்டுகளாக இடைப்பட்டிகள் வழங்கப்படவில்லை. 1700 உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிரமத்தில்

பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த நாடு முழுவதுமுள்ள பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் 1700 பேர் வரையிலான உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மூன்றாண்டு காலமாக உத்தியோகபூர்வ உடைகள் கிடைக்கவில்லை. இதனால் கடமையாற்றுவதில் பல சிரமங்களுக்கு உள்ளாக வேண்டி நேர்ந்துள்ளது எனப் பாதிக்கப்பட்ட பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை உத்தியோகபூர்வ உடைக்கென வழங்கப்படும் இடைப்பட்டிகள் 13 ஆண்டுகளாக வழங்கப்படவில்லையெனவும் சில சந்தர்ப்பங்களில் அவற்றைப் பிறரிடம் இரவலாகப் பெற்றுத் தமது கடமையை நிறைவேற்ற வேண்டி நேர்வதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

1998 ஆம் ஆண்டில் உதவிப் பொலிஸார் சேவைக்கு இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு காலப்போக்கில் அவர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளனர். காக்கி நிற நீண்ட காற்சட்டையும் வெள்ளை நீல நிற மேற்சட்டையுமே அவர்களது உத்தியோகபூர்வ உடையாகும்.

ஆனாலும் இவர்களுள் பெருமளவிலானோர் இரவல் உடைகளை அணியும் இக்கட்டான நிலையிலும், தமது செலவில் உத்தியோகபூர்வ உடைகளைத் தைப்பித்து அணிந்து பணியாற்ற வேண்டி நேர்வதாகவும் தெரிவிக் கின்றனர். இது சம்பந்தமாக ஊடகங்களுக்கோ பொறுப்புள்ள தரப்பினருக்கோ தெரியப்படுத்த வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. எனினும் கடிதம் மூலம் ஜனாதிபதிக்குத் தெரியப் படுத்தியுள்ளோம் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண கருத்துத் தெரிவிக்கையில், கடந்த 2009 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வ உடைகள் வழங்கப்பட்டுள்ள 2010 ஆம் ஆண்டில் சில தொகுதிகள் குறைவாக வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் தேவையான உத்தியோகபூர்வ உடைகள் வழங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (ந-22)

# வடக்குக்கான ரயில் பாதையை நேராக அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.20

வடக்கிற்கான ரயில்ப் பாதை அமைக்கும் திட்டத்தின் போது இந்தப் பாதை நேரான பாதையாக அமைக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வவுனியாவில் இருந்து காங்கேசன் துறைக்குச் செல்லும் ரயில் பாதையில் அனேகமான இடங்களில் வளைவுகள் காணப்படுகின்றன.

தற்போது அந்த வளைவுகள் சீர்செய்யப்பட்டு நேரிய பாதையாகவே அமைப்பதற்கான முழு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக ' இன்ரசிற்றி' அதிவேக ரயில் பாதையூடாக அதிவேகத்தில் பயணத்தை மேற்கொள்வதற்கு வசதியாக இந்தப் பாதை அமைக்கப்படவுள்ளது.

குறிப்பாக கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படும் இன்ரசிற்றி ரயில் நான்கு மணி நேரத்தில் வவுனியாவை சென்றடைகின்றது.

இதன் காரணத்தினால் ஓமந்தையில் இருந்து காங்கேசன் துறை வரைக்குமான ரயில் பாதையை வளைவு இன்றி நேரிய பாதையாக சீர்செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ந-17)

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் 2011 இல் 95 ஆயிரம் பேர் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜன.20

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடந்த வருடம் 95 ஆயிரத்து இருநூற்று தொன்னூற்று ஒன்பது பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை கடந்த வருடம் தனியார் கட்டடம் ஒன்றில் தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலயத்துக்கு முன்னால் இயங்கி வந்த நிலையில் அதிகளவான பொதுமக்கள் சிகிச்சை பெற்று வந்தனர். கடந்த வருடம் சிகிச்சை பெற்று வந்தோரில் வெளிநோயாளர் பிரிவில் 51 ஆயிரத்து 22 பேரும், விடுதியில் தங்கி நின்று சிகிச்சை பெற்றவர்கள் ஆறாயிரத்து 913 பேரும், கிளினிக் பிரிவில் சிகிச்சை பெற்றோர் 36 ஆயிரத்து 254 பேரும், நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றவர்கள் ஆயிரத்து 110 பேரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்த வருடத்தை விட இந்த வருடம் அதிகளவான பொதுமக்கள் சிகிச்சை பெறு வதற்கான வசதிகளுடன் வைத்தியசாலை பழைய இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளதால் பொதுமக்கள் நன்மை அடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-36)

# அபராதம்

யாழ்ப்பாணம, ஜன.20

சாரதி அனுமதிப் பத்திரமின்றி ஓட்டோவைச் செலுத்திச் சென்ற குற்றத்துக்காக கொழும்புத்துறையைச் சேர்ந்தவர் யாழ்.நீதிமன்றில் இரண்டாயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தினார்.

யாழ்.ஈச்சமோட்டைப் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோதே யாழ்.பொலிஸார் இவருக்கு எதிராக வழக்குத் தொடுத்திருந்தனர். நீதிமன்றில் சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு இந்த அபராதத்தை விதித்தார் நீதவான் மா.கணேசராஜா. (ம-4)

# போசாக்கு நிகழ்ச்சித் திட்ட ஆரம்ப நிகழ்வு அல்லாரையிலும்

பாடசாலைகளுக்கான போசாக்கு நிகழ்ச்சித்திட்ட நிகழ்வுகள் தென்மராட்சி கல்விவலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பாடசாலைகளுக்கான போசாக்குத் திட்ட ஆரம்ப நிகழ்வு நேற்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட அதே வேளை அல்லாரை அ.த.க பாடசாலையிலும் நடத்தப்பட்டது.

வித்தியாலய அதிபர் திருமதி க.யோகநாதன் தலைமையில். நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வுக்கு ஏனைய பாடசாலை அதிபர்கள் மற்றும் பொதுமக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ந-207)

# வன்னி மக்களுக்கு புலம்பெயர் தமிழர்களே உதவ வேண்டும்

## கனேடியப் படைப்பாளிகள் கழகம்

வன்னியில் வாழ்வாதாரங்களை இழந்து இடைத்தங்கல் கொட்டில் களில் அல்லல்படும் எமது மக்களது அவலத்தை எண்ணிப் பார்த்து, அவர்களின் வாழ்வாதரத்தை வழமை நிலைக்குக் கொண்டுவர நாம் முன்னிற்க வேண்டும் என்று கனேடியப் படைப்பாளிகள் கழகத்தின் தலைவர் தங்கவேலு நக்கீரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு வன்னி மக்களைக் கை விட்டு விட்டது. புலம் பெயர் தமிழர்களே இவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்றும் பொங்கல் விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசியபோது அவர் கேட்டுக் கொண்டார்.

கனேடியப் படைப்பாளிகள் கழகத் தால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ்ப் புத்தாண்டு நிகழ்வு மற்றும் தைப் பொங்கல் நிகழ்வில், வன்னி மக்களுக்கு முன்மாதிரியாக மேற் கொள்ளப்பட்ட நிதி சேகரிப்பின்படி சுமார் 1,500 டொலர்கள் அந்த நிகழ்விலேயே சேர்க்கப்பட்டு கனடா மறுவாழ்வுக் கழகத்திடம் வழங்கப்பட்டது.

> இலங்கை அரசு வன்னி மக்களைக் கை விட்டுவிட்டது. புலம்பெயர் தமிழர்கள்தான் இவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும்.

நாம் எமது விசேட தினங்களை கொண் டாடும் போது அல்லலுறும் எமது மக்களின் வாழ்வாதாரத் துக்கும் உதவி புரிய வேண்டும் என்பதை இனிமேல் தொடர்ச்சியாக கடைப் பிடிக்கும் முன்மாதிரியை தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் தொடர்ந்து கடைப் பிடிக்கும் -என்றார்.

கனேடியத் தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் இந்த விழாவை அனைத்துலக தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தோடு இணைந்து நடத்தியிருந்தது. இந்த நிகழ்வில் கனடாத் தமிழர் இணையம், கனடா மறுவாழ்வு அமைப்பு, தமிழர் தொலைக் காட்சி, நாடுகடந்த தமிழீழ அரசு, தமிழர் புனர் வாழ்வுக்கழகம் ஆகியவற்றின் பலரும் ஒன்றுபட்டுக் கலந்து சிறப்பித்தனர். (வ)

# சஞ்சிகை தொடர்பான கலந்துரையாடல்

பளை, ஜன.20

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினர் பிரதேசம் தொடர்பான ஆக்கங்களைக் கொண்ட காலாண்டு சஞ்சிகையினை வெளியிடவுள்ளனர். இதற்கான ஆக்கங்கள் மற்றும் படைப்புகளைப் பெறுவது தொடர்பான ஆலோசனைக் கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் சபையின் தவிசாளர் எவ்.டி.அன்ரன் தலைமையில் நடைபெறும்.


31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் சி. புவனேந்திரராசா



மலர்வு : 11-05-1951
உதிர்வு : 21-12-2011

பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளி விளக்கே
மாதம் ஒன்று கடந்தாலும்
மாறாது உங்கள் நினைவு

பிரிவால் வாடும் குடும்பத்தினர்.

விபுலானந்தர் வீதி,
மாதகல்.
(C\7889) (6,10)

பணியாளர்கள் தேவை

படித்த சிட்டை எழுதுனர்,
களஞ்சியக்காப்பாளர் தேவை.
தொடர்புகளுக்கு
வெங்கடேஸ்வரா
125A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ் நகரில் புதிய உதயம்

வாகன உரிமையாளர்களுக்கு உங்களுடைய செலவினங்களை குறைக்கும் முகமாக
1. ரயர் தேய்வனவை குறைத்தல்
2. சில்லுகள் துருப்பிடித்தலைத் தடுக்கும்
3. சொகுசு பயணம்
4. காற்றுக்குறையாமல் இருக்கும்
5. எரிபொருள் மீதி
6. நீண்ட காலப் பாவனை
என்பவற்றிற்கு ''நைதரசன்'' வாயு நிரப்புவதற்கு இன்றே நாடுங்கள் ராஜன் உமையாள் எரிபொருள் நிரப்பு நிலையம்.

இல.21, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(13230) (6,7,10)

NEW ERA ACADEMY

English Elocution, Speech and Drama BRITISH
Pre Diploma & Diploma
courses in English Elocution teaching
from New Era Academy - London
We provide training, teaching materials and resources to prepare your students from as young as 4 years of age for British examinations in English Elocution.
FREE TEACHER TRAINING SEMINAR
And
Introduction to English Elocution, Speech and Drama for children
BY
Nilrukshi Foenander
LVCM/FVCM/ALCM/TEYL/TEIL/DIP.TEFSL/TESL/ATEFSL/ATESL/LTEFSL/LTESL

Principal of C.J.International School Kelaniya and examinations directress of C.J.Overseas Academy for Teacher Training and Technology studies and an observer examiner at the Institute of Western Music and Speech. Nilrukshi is currently writing for Pre and Primary Diploma in General Teaching TESOL USA.

21 JANUARY 2012


| | |
|---|---|
| Teacher Training seminar: | 10.00 to 12 .00 |
| Introduction to English Elocution, Speech & Drama: | 1.00 to 3.00 |

spectra skills
19, Stanley Road, Jaffna. Tel: 021 222 1422 or 1423
(13241) (6,10) Email: Jaffna@spectraskills.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன விபத்து; 40பேர் காயம்

## ஜேர்மனியில் விபரீதம்



விபத்தின் போது அங்கிருந்த வாயு ஏற்றப்பட்ட சிலிண்டர்கள் வெடித்துச் சிதறின. தொழிற் சாலையில் பரிசோதனைக் கூடம் உட்படப் பல பகுதிகள் தீப் பிடித்து எரிந்தன.

பெர்லின் ,ஜன.20

ஜேர்மனியில் இரசாயன தொழிற்சாலை ஒன்றில் ஏற் பட்ட திடீர் விபத்தில் 40 பேர் படுகாயமடைந்தனர். மேலும் பலர் சுவாசம் தொடர் பான நோய்களுக்கு ஆளாகி யுள்ளனர்.

ஜேர்மனியின் புரூல் நகரில் கடந்த செவ்வாய்க் கிழமை இந்த இரசாயன தொழிற்சாலை விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

புரூல் நகரில் ஜேர்மனி யின் மிக முக்கியமான இரசா யனத் தொழிற்சாலைகள் பல அமைந்துள்ளன. அவற்றில் ஒரு தொழிற்சாலை குளோ ரின் வாயு தொடர்பான பரி சோதனையில் ஈடுபட்டிருந் தது. இந்தத் தொழிற்சாலை யில் சோடியம் குளோரைட், ஹைட்ரேகுளோரிக் அமிலம் போன்ற இரசாயனங்களை இணைத்து மேற்கொள்ளப் பட்ட சோதனையில் எதிர்பா ராத விதமாக வாயுக்கசிவு உண்டானது.

இதனால் அங்கிருந்த வாயு ஏற்றப்பட்ட சிலிண்டர் கள் வெடித்துச் சிதறின. இதன்போது தொழிற்சாலை யில் பரிசோதனைக்கூடம் உட்படப் பல பகுதிகள் தீப் பிடித்து எரிந்தன. விபத்து ந டந்தபோது தொழிற்சாலை யின் உள்ளே 300 பேர் பணி யாற்றிக் கொண்டிருந்தனர்.

விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்கு விரைந்த தீயணைப்புப் படையினர், தொழிற்சாலையின் ஏனைய பகுதிகளுக்கும் தீ பரவவி டாது தடுத்தனர். கட்டடத்துக் குள் சிக்குண்டவர்களையும் மீட்டெடுத்து வைத்திய சாலை யில் அனுமதித்தனர்.

இந்த விபத்தில் ஒரு தீயணைப்புப் படைவீரர் உட் பட 40 பேர் கடுமையான கா யங்களுடன் வைத்தியசாலை களில் சிகிச்சை பெற்று வரு கின்றனர். அத்துடன் விபத் தின்போது வெளியேறிய குளோரின் வாயுவைச் சுவா சித்த 16 பேரும் பாதிப்ப டைந்த நிலையில் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

தற்போது தொழிற்சாலை யின் வாயுக்கசிவு கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டுள்ளது, இதனால் தொழிற்சாலையைச் சூழ வுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் தமக்குப்பாதிப்பு ஏற் பட்டுவிடுமோ என்று அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று ஜேர்மன் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (ங)

# யாகூவில் இருந்து 'யங்' விலகினார்




நியூயோர்க், ஜன.20

உலகின் முன்னணி இணையத்தளங்களில் ஒன்றான யாகூ நிறுவனத்தின் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் அதன் இணை நிறுவுநரான ஜெர்ரி யங் (வயது- 43)விலகியுள்ளார்.

இவர் யாகூ இணையத் தள நிறுவனத்தை தனது நண்பரா ன டேவிட் ஃபலோவுடன் இணைந்து 1995ஆம் ஆண்டு நிறுவியிருந்தார்.

'யங்கின்' பதவி விலகல் புதன்கிழமையிலிருந்து நடை முறைக்கு வருவதாக யாகூ நிறுவனம் அறிவித்துள்ளது. இயக்குநர்கள் குழுமத்தின் உறுப்பினர் பதவி, யாகூ நிறுவனம் பங்குகள் வைத்துள்ள யாகூ ஜப்பான் கூட்டு நிறு வனம், அலிபாபா குழுமம் ஆகியவற்றின் குழுமப் பதவி என்பன போன்ற அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் யங் விலகியுள்ளார்.

1995ஆம் ஆண்டிலிருந்து யாகூவின் இயக்குநர்களில் ஒருவராக யங் இருந்து வந்தார். 2007 ஜூன் மாதம் முதல் 2009 ஜனவரி வரை நிறுவனத்தின் செயல் அதிகாரியாகவும் பதவி வகித்துள்ளார். அப்போது 4750 கோடி அமெரிக்க டொலருக்கு யாகூவை வாங்க மைக்ரோ சொஃப்ட் நிறுவனம் விருப்பம் தெரிவித்த போது அதனை யங் நிராகரித்திருந்தார்.

யாகூவின் முதன்மைச் செயல் அதிகாரியாக ஸ்கொட் தோம்ஸன் நியமிக்கப்பட்ட இரண்டாவது வாரத்தில் யங் பதவி விலகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ங)

# ஆப்கானிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல்



காபூல், ஜன.20

ஆப்கானிஸ்தான் நாட்டின் ஹெல்மண்ட் மாகாணத்தில் உள்ள கஜாகி மாவட்டத்தில் நடைபெற்ற தற்கொலைப் படைத் தாக் குதலில் 7 பொலிஸ்காரர் உட்படப் பொதுமக்கள் 2 பேர் பலியாகியுள்ளனர்.

கஜாகி மாவட்டத்தில் பொலிஸ் வாகனத்தின் மீது குறிவைத்து நண்பகலில் நடத்தப்பட்ட இந்தத் தாக்கு தலில் மேலும் 2 பொலிஸ் காரர்களும் பொதுமக்கள் 6 பேரும் காயம் அடைந்துள்ள னர் என மாகாண ஆளுநரின் செய்தித் தொடர்பாளர் தாவுத் அஹமாதி தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, மீண்டும் இரண்டு மணி நேரத்தில் நடி அலி மாவட்டத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடி குண்டு ஒன்றுதானியங்கி இயக்கத்தின் மூலம் வெடித் ததில் உள்ளூர் புலனாய்வு அதிகாரி, இரண்டு மெய்க் காப்பாளர்கள் மற்றும் ஒருவர் பலியாகியுள்ளனர் என அவர் மேலும் கூறியுள்ளார்.

இரண்டாவது தாக்கு தலுக்குத் தலிபான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. முதலில் நடந்த தாக்குதலில் இஸ்லாமிய இயக்கத்தின் தனித்தன்மை தெரிவதாக சந்தேகம் எழுந்துள்ளது. (ந)

# கொலையுண்ட ஊடகவியலாளர்



வொய்ஸ் ஒவ் அமெரிக்க வானொலியின் ஊடகவியலாளர் ஒருவர் பாகிஸ்தானில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வடமேற்குப் பாகிஸ்தான் ஷப்காதர் நகரில் வசித்து வந்த முகாராம் கான் அதிப் என்ற ஊடகவியலாளரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். அவர் வீட்டின் அருகில் உள்ள மசூதியில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த போது துப்பாக்கி ஏந்திய இருவர் திடீரென அங்கு வந்து அவரைச் சுட்டனர். இதில் காயமடைந்த அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இந்தக் கொலைக்கு தலிபான்களே காரணம் என்று கூறப்படுகிறன. இந்தக் கொலைச் சம்பவத்துக்கு ஊடக வியலாளர் அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன. பாகிஸ்தானில் கடந்த வருடம் மட்டும் 10 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ங)

# இயந்திரங்கள் இனிமேல் சிகரெட் விற்கமாட்டா

சிகரெட் விற்கும் இயந் திரங்களுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் முதல் தடை செய்யப்படும் என்று அயர் லாந்து நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் எட்வின் பூட்ஸ் அறிவித்துள்ளார்.

இந்த சிகரெட் விற்பனை யால் 16 வயதிற்கும் குறைந்த சிறுவர்களும் புகை பிடிக்கத் தொடங்கிவிட்டனர். இப்பழக்கம் இவர்களின் உடல்நலத்துக்கு மிகவும் கேடு விளைவிப்பதாகும். எனவே இந்த விற்பனை முறையை நிறுத்திவிட அரசு முடிவு செய்துள்ளது.

இந்த சிகரெட்டுகளை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் அங்குள்ள சிறு வர்களும் புகைப்பழக்கத் துக்கு அடிமைப்படும் பரி தாபநிலை ஏற்படும்.

பிரிட் டிஷ் தீவுகளுக்குள் இவற்றை விற்காமல் ஏற்று மதி செய்ய வாய்ப்பு இருப் பதால் அதுகுறித்து சிந்திக்க வேண்டும் சட்டசபை உறுப் பினரான ஜிம் வெல்ஸ் தெரி வித்தார்.

அல்ஸ்ட்டெர் என்ற புற்று நோய் அமைப்பு நடத்திய ஆய்வின்படி புகைப் பழக் கத்தால் நுரையீரல் புற்று நோய், இதயநோய் மற்றும் ஆஸ்துமா போன்ற பல்வேறு நோய்கள் உருவாகும் என்ப தால் வருடத்திற்கு 2700 பேர் உயிரிழக்கின்றனர் என்று தெரிவித்துள்ளது.

புகைப் பழக்கத்துக்கு ஆளானவர்களில் பாதிப்பேர் உயிர் கொல்லி நோயால் மரணமடைகின்றனர்.

எனவே இந்நாட்டில் இளைஞர்கள் நடுவயதில் மரணமடைவதைத் தடுக்க வும், அவர்கள் நீண்டநாள் ஆரோக்கியமாக வாழவும், உழைக்கவும் வேண்டிய நடவடிக்கைகளை சுகாதாரத் துறை எடுத்து வருகிறது. (ங)

## அமெரிக்காவில் ஆலோசனை

வாஷிங்டன் ,ஜன.20

மியன்மார் மற்றும் கொரிய தீபகற்பத்தின் நில வரங்கள் உள்ளிட்ட பல் வேறு விவகாரங்கள் குறித்து அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய மூன்று நாடுகளும் நேற்றுமுன்தினம் வாஷிங்டனில் விவாதித் தன.

வடகொரியாவில் புதிய அதிபராக கிம் ஜோங் பதவி யேற்ற பின்னர் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் குறித் தும் அதுதொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற் றியும் இதன்போது ஆராயப் பட்டன. (ந)

# தேர்தலில் குதித்தார் ஆங் சான் சூகி

சுயாங்கூன்,ஜன.20

மியன்மாரில் நடைபெற இருக்கும் இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்காக, அந்தநாட்டின் ஜனநாயகத் தலைவர் ஆங் சான் சூகி, நேற்று வேட்பு மனு தாக்கல் செய்தார்.

மியான்மர் அரசு, அரசி யல் கைதிகளை விடுவித் தல், அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல், பழங்குடியி னர் உடனான மோதலை நிறுத்தி வைத்தல் என சமீப காலமாக பல்வேறு ஜன நாயக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இதன் மூலம் அமெரிக்கா உள் ளிட்ட நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை நீக்கலாம் என அரசு கருதுகிறது.

இந்த நிலையில், நாடாளு மன்றின் 48 இடங்களுக்கான இடைத்தேர்தல் ஏப்ரலில் நடக்க உள்ளது. அதில் போட்டியிடுவதற்கு ஆங் சான் சூகிக்கு அந்நாட்டு அரசு அனுமதித்துள்ளது. முதற்கட்டமாக, அவரின் தேசிய ஜனநாயக லீக் கட்சி, தேர்தல் குழுவில் பதிவு [illegible] கத் தற்போது, யாங்கூன் அருகில் உள்ள காவ்மு என்ற



தொகுதியில் போட்டியிடு வதற்காக, நேற்று அவர் தன் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

[illegible] அவர் அதி [illegible] செய்தி வெளி யிடவில்லை என்றாலும் கட்சியின் மூத்த பிரமுகர் வின் டெயின் அளித்த பேட்டி யில் கட்சியின் முதல் நபராக சூகி தன் வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்றார். மொத்தமுள்ள 48 இடங் களில், 40 இடங்களுக்கு சூகி யின் கட்சி வேட்பாளர்களை நிறுத்ததிட்டமிட்டுள்ளது.(ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானின் எண்ணெய்க்கு பதிலாக சவூதி உற்பத்தியை அதிகரிக்கும்

## எண்ணெய் அமைச்சர் தகவல்



எம்மால் ஒருநாளைக்கு உடனடியாக 11.4, 11.8 மில்லியன் பெரல் எண்ணெய்யை உற்பத்தி செய்ய முடியும் என்றார் நைமி.

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் சவூதி அரேபியா அதனை நிவர்த்தி செய்யும் வகையில் எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கும் என அந்த நாட்டின் எண்ணெய் அமைச்சர் அலி அல் நைமி குறிப்பிட்டுள்ளார். அவர் சி. என். என். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எம்மால் ஒருநாளைக்கு உடனடியாக 11.4, 11.8 மில்லியன் பெரல் எண்ணெய்யையும் உற்பத்தி செய்ய முடியும் என்று தெரிவித்தார்.

தமது எண்ணெய்க்குப் பதிலாக எண்ணெய் உற்பத்தி செய்தால் கடும் விளைவைச் சந்திக்க வேண்டிவரும். அத்துடன் தமது எண்ணெய்க்கு தடை விதித்தால் வளைகுடா எண்ணெய்க் கப்பல்கள் செல்லும் ஹோர்முஸ் நீரிணையையும் மூடுவதாக ஈரான் ஏற்கனவே எச்சரித்திருந்த நிலையிலேயே சவூதி எண்ணெய் அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஈரான் எண்ணெய்க்குத் தடைவிதிக்கப்படும் பட்சத்தில் அது நாளொன்றுக்கு ஏற்றுமதி செய்யும் 2.2 மில்லியன் பெரல்களை உங்களால் ஈடுசெய்ய முடியுமா ? என அலி அல் நைமியிடம் கேட்டதற்கு 'எமது பாவனையாளர்களின் தேவைக்கு ஏற்ப நாம் எண்ணெய் உற்பத்தி செய்வோம். அதில் மாத்திரம் தான் நாம் கவனம் செலுத்துவோம்.' மாறாக யார் உற்பத்தியை நிறுத்தினார்கள் என்பதைப் பார்க்க மாட்டோம். யாருக்கு மேலும் தேவை என்பதைத் தான் பார்ப்போம் என்றார்.

அதேபோன்று மசகு எண்ணெய்யின் விலையை சர்வதேச சந்தையில் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ந)

## கடும் போட்டி



வாஷிங்டன், ஜன.20

அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு முந்தைய கருத்துக் கணிப்பில் தற்போதைய அதிபர் பராக் ஒபாமாவுக்கும், குடியரசுக் கட்சியைச் சேர்ந்த மிட் ரோம்னிக்கும் இடையே கடும் போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனநாயகக் கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அதிபராக 2008ஆம் ஆண்டு பொறுப்பேற்றவர் பராக் ஒபாமா. இப்போது அடுத்து வரும் பொதுத் தேர்தலில் அதிபர் பதவிக்கு அந்தக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து குடியரசுக் கட்சியிலிருந்து பலர் போட்டியிட உள்ளனர். இது தொடர்பாக சிஎன்என்/ ஓஆர்சி அமைப்பு கருத்துக் கணிப்பு நடத்தியது.

அதில் முன்னாள் மசாசூசெட்ஸ் மாகாண ஆளுநர் மிட் ரோம்னி, குடியரசுக் கட்சியின் சார்பில் அதிபர் பதவிக்குப் போட்டியிட உள்ளார். இவர்கள் இருவருக்கும் இடையிலான போட்டி கடுமையாக இருக்கும் என்று கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது. (ந)

## வீடியோவில் பதிவான டயானாவின் ஆவி



லண்டன், ஜன. 20

சீனாவைச் சேர்ந்த எழுத்தாளர் மைக்கேல் ஜோகன் என்பவர் பிரிட்டனில் கிளாஸ்கோ நகரில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்தைச் சுற்றிப் பார்த்து அங்குள்ள காட்சிகளை வீடியோப் படம் பிடித்தார். அந்தப் படத்தில் உள்ள கண்ணாடி ஒன்றில் இளவரசி டயானாவின் உருவம் தெரிவது போல பதிவாகி உள்ளது. அவர் முதலில் படம் எடுக்கும் போது உருவம் கண்ணாடியில் தெரியவில்லை. ஆனால் படத்தை மீண்டும் பார்த்தபோதுதான் அந்த உருவம் தெரிந்தது. இது டயானாவின் ஆவியின் படம் என்று அவர் கூறுகிறார். இந்தப் படத்தை யார் வேண்டுமானாலும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும் அவர் கூறியுள்ளார். தற்போது கண்ணாடியை பார்க்கும் போது சாதாரணமாகவே தெரிகிறது. வீடியோவில் மட்டும் டயானாவின் உருவப்படம் தெரிந்தது எப்படி? என்பது மர்மமாக உள்ளது. (ந)

## அல்ஜீரிய நாட்டவர் பிரான்ஸில் கைது

அல்ஜீரிய அரசியல் அகதியாக சுவிற்சர்லாந்தில் வாழ்ந்து வந்த மௌலத் தீனா என்பவரை பிரான்ஸ் அரசு அல்ஜீரிய தீவிரவாதி என்று கைது செய்துள்ளது. மௌலத் தீனா அல்ஜீரியாவில் சில போராட்டத்தில் தீவிரமாகக் கலந்து கொண்டார். அதனால் அவர்மீது தீவிரவாதி முத்திரை குத்தப்பட்டது. இதன் அடிப்படையில் பிரான்ஸ் அரசு கைது செய்ததாக செய்தி தொடர்பாளர் மைக்கேல் ரோமிக் தெரிவித்தார்.

## தூதர் வருகையை ரத்து செய்த பாகிஸ்தான்

தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்குவது குறித்து அரசுடன் ஆலோசனை நடத்த அமெரிக்க சிறப்பு தூதராக மார்க் கிராஸ்மேனை, பாகிஸ்தானுக்கு அனுப்ப அதிபர் ஒபாமா அரசு அறிவித்தது. இதனை பாகிஸ்தான் ரத்து செய்துள்ளது.

அவர் மத்திய கிழக்கு நாடுகள், ஆப்கானிஸ்தான் தலைவர்களுடன் பேச்சு நடத்தி விட்டு, பாகிஸ்தானுக்கு செல்வதாக இருந்தது. பாகிஸ்தான் அரசு தரப்பில் கிராஸ்மேனுடன் பேச பயணத் திட்டத்துக்கு அனுமதி அளிக்குமாறு பாகிஸ்தானிடம் அமெரிக்கா கேட்டது. ஆனால், அமெரிக்கத் தூதரை காத்திருக்குமாறு பாகிஸ்தான் அரசு தகவல் அனுப்பியதாக வாஷிங்டனில் வெளியுறவுத்துறைச் செய்தித் தொடர்பாளர் மார்க் டோனர் நேற்று தெரிவித்தார். (ந)


AFTER GCE O/L & A/L WHAT NEXT?

STUDY IN UK
Spot Admission!

காலம் 22nd & 23rd of January 2012 : 10.00a.m. - 1.00p.m.

இடம் Exponet (Branch Office)
No. 197 Arasady Road, Jaffna

உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்

கடந்த வருட இறுதியில் விசா கிடைத்து பயணமான மாணவர்களில் சிலர்




GCE(O/L) தகைமை போதுமானது

பதிவுகளுக்கு

Colombo-011 7 555511/14 Fax-011 7 555517
Jaffna-021 7538395 / 021 2227230

EXPONET Overseas Consultants

Head Office : 379 - ½, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197 Arasady Road, Jaffna.
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
London Branch : 56, The Gardens Harrow Middlesex, HA1 4EY, UK.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெ.விவகாரம்: நக்கீரன் தரப்பு பகிரங்க மன்னிப்பு

சென்னை, ஜன.20

முதலமைச்சர் ஜெயலலிதா குறித்து சர்ச்சைக்குரிய செய்தி வெளியிட்டதாக தொடரப்பட்ட அவதூறு வழக்கில் நக்கீரன் கோபால் தரப்பு சென்னை உயர்நீதிமன்றத்தில் மன்னிப்புக் கேட்டது.

நக்கீரன் இதழில் கடந்த வாரம் முதலமைச்சர் ஜெயலலிதா குறித்து ஒரு சர்ச்சைக்குரிய செய்தி வெளியிடப்பட்டது. இதனால் பிரச்சினை எழுந்தது. நக்கீரன் அலுவலகம் அடித்து நொறுக்கப்பட்டது. இந்த நிலையில் நக்கீரன் இதழின் ஆசிரியர் கோபால், இணை ஆசிரியர் காமராஜ் ஆகியோருக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் முதல்வர் அவமதிப்பு வழக்குத் தொடர்ந்தார்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது நக்கீரன் கோபால் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக கடந்த இதழின் முதல் பக்கத்தில் செய்தி வெளியிடப்பட்டதும் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்து, இந்த வழக்கு முடிவுக்கு வந்துள்ளது.

## சென்னையில் இலங்கையின் சுதந்திரதின நிகழ்வு

கொழும்பு, ஜன 20

இலங்கையின் 64 ஆவது சுதந்திர தின விழா தமிழகத்திலும் நடத்த மகாபோதி சபையும், தென்னிந்தியாவில் அமைந்துள்ள இலங்கை உதவித் தூதரகமும் ஏற்பாடு செய்துவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சென்னையில் இடம்பெறவுள்ள இலங்கையின் சுதந்திர தின விழாவை முன்னிட்டு கோலாகல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ள சுதந்திரதின விழாவில் இந்தியாவுக்கான இலங்கையின் துணைத் தூதர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தி, மதத் தலைவர்கள் மற்றும் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொண்டு நிறுவனங்களிடம் விசாரணை

அணுமின்நிலைய போராட்டத்திற்கு வெளி நாட்டுப் பணம் வந்ததாக கூறப் பட்ட விவகாரம் தொடர்பாக தூத்துக்குடி தொண்டு நிறுவனங்களின் வரவு செலவுக் கணக்குகளை மத்திய உள்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்துகின்றனர்.

கூடங்குளம் அணுமின் நிலைய பிரச்சினையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின்சார்பில்இயங்கி வரும் தொண்டு நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து பணம் வந்ததாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அணுமின் நிலைய எதிர்ப்பாளர்களின் தொண்டு நிறுவனங்களின் வரவு, செலவு கணக்குகளை ஆய்வு செய்ய முடிவு எடுக்கப்பட்டது.

# தமிழருக்கு எதிரானதே ஆளும் காங்கிரஸ் அரசு

## சாடுகிறார் நெடுமாறன்

சென்னை, ஜன.20

இந்தியாவில் மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு தமிழர்களுக்கு எதிரானது என்று உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்தார்.

தஞ்சாவூரில் நடைபெற்ற தமிழர் கலை இலக்கிய விழாவின் நிறைவு நாளில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் ஒரு கோடி சிங்கள வர்கள் வாழ்கின்றனர். ஈழப் போருக்கு முன்னதாக அங்கு 45 லட்சம் தமிழர்கள் இருந்தனர். அவர்களில் 3 லட்சம் பேர் கொல்லப்பட்டு விட்டனர். 5 லட்சம் தமிழர்கள் வெளிநாடுகளுக்கு குடி பெயர்ந்துள்ளனர். இன்னும் 5 லட்சம் தமிழர்கள் இலங்கையிலேயே அகதிகளாக, சிங்களவர்களின் கொடுமைகளை அனுபவித்து வருகின்றனர்.

தற்போது ஈழத்தில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை குறைவடைந்து விட்டது. தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளில் சிங்களவர்கள் குடிபெயர்ந்து, அங்கிருந்த தமிழ் அடையாளங்களை அழித்து வருகின் றனர்.

ஈழத்திலிருந்து 20 மைல் தொலைவில் உள்ள தமிழகத்தில் 7 கோடி தமிழர்கள் உள்ளனர். இருந்தும், ஈழப் போருக்கு எதிராகத் தமிழகத்தில் எழுந்த எதிர்ப்புகள், போராட்டங்கள் குறித்து இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ பயம் கொள்ளவில்லை.

ஏழு கோடித் தமிழர்களின் கொந்தளிப்புகள் ராஜபக்ஷவுக்கு பயத்தை ஏற்படுத்தாதற்குக் காரணம்



இந்திய அரசும், அதற்கு வால்பிடித்து வந்த முந்தைய தி.மு.க. அரசும் தான். தமிழர்களின்குரல்களை இந்திய அரசு மதிக்காததற்கும், அன்றைய தி.மு.க. அரசு தான் காரணம்.

தமிழர்கள் வரலாற்றில் மாறாத அவமானக் கறையாக இந்த நிகழ்வுகள் அமைந்து விட்டன. இந்தக் கறையைத் துடைத்தெறிய, தமிழர்களுக்கு எதிரான அரசுகளையும், கட்சிகளையும் அடை யாளம் கண்டு ஒதுக்க வேண்டும் என்று நாம் சபதமேற்க வேண்டும். - என்றார் அவர். (வ)

# 7 குழந்தைகள் திடீர் சாவு மே.வங்கத்தில் பதற்றம்

மேற்கு வங்க மாநிலத்தில் கடந்த இரண்டு திகதிகளுக்குள் ஏழு குழந்தைகள் உயிரிழந்துள்ளமை அங்கு பெரும் பதற்றம் நிலவியது.

மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள மால்டா மாவட்டத்தில் உள்ள அரசு வைத்தியசாலையில் பல்வேறு சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பிறந்த மூன்று மணி நேர குழந்தை முதல் மூன்று வயது குழந்தைகள் வரை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ள விடயம் அந்த மாநிலத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து மேற்கு வங்க மாநில சுகாதாரத்துறை அமைச்சர் சந்த்ரிமா பட்டாச்சார்யா தெரிவித்ததாவது:

உயிரிழந்துள்ள ஏழு குழந்தைகளில் ஒரு குழந்தை மட்டுமே அரசு வைத்தியசாலையில் பிறந்தது என்றும் மற்ற குழந்தைகள் நோய்கள் குறித்து பரிசோத னைக்காக வந்தவை என்று தெரிவித்துள்ளார்.

மேலும் பீகார், உத்தரகண்ட் போன்ற மாநிலங்களில் பிறக்கும் உடல் எடை குறைவான குழந்கைள் இங்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

இந்த பிரச்சினைக்கு முன்பு, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் மால்டா வைத்தியசாலை யில் எட்டுக் குழந்தைகள் உயிரிழந்தனர். (வ)

# பி.பி.சி.மறுப்பு

டொப் கியர் என்ற நிகழ்ச்சியின் மூலமாக இந்தியாவை அவமதிக்கும் நோக்கத்துடன் நாம் செயற்படவில்லை என்று பி.பி.சி. மறுத்துள்ளது.

பிரிட்டன் அரசுக்குச் சொந்தமானபி.பி.சி.தொலைக்காட்சியில் 'டொப் கியர்' என்ற நிகழ்ச்சியின் மூலமாக உலக நாடுகளில் வலம் வந்து தனது கருத்துகளை தெரிவிப்பவர் ஜெர்மி கிளார்க்சன். இந்த டொப் கியர் நிகழ்ச்சி அண்மையில் இந்தியாவில் நடைபெற்றது. அப்போது ஒரு காரில் கழிவறை படம் வரைந்து, செல்லும் வழியெல்லாம் மக்களிடம் அதை காட்டியபடி ஜெர்மி சென்றார்.

அப்போது அவர் இந்தியா முழுக்க கழிவறை இல்லாததது போல துர்நாற்றம் இருக்கிறது. இங்கு வருபவர்கள் வெளியில் ஓட வேண்டியுள்ளது - என்றார். ரயில்களில் பனர் கட்டி அதில் உங்களுக்கு பிரிட்டன் தான் ஏற்றது, ஆங்கில உணவுகளை உண்ணுங்கள் என்றும் எழுதியுள்ளார். இந்தநிகழ்ச்சி பி.பி.சி.யில் ஒளிபரப்பானதும் லண்டனில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு வந்தன. பி.பி.சி. அலுவலகத்துக்கும் கண்டனக் கடிதங்கள் குவிந்தன. இதையடுத்து இந்தியாவை அவமதித்த செயலுக்கு பி.பி.சி. மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று பிரிட்டனில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் வலியுறுத்தப்பட்டது.

> டொப் கியர் என்ற நிகழ்ச்சியின் மூலமாக இந்தியாவை அவமதிக்கும் நோக்கத்துடன் நாம் செயற்படவில்லை.

இதற்கு நேற்று முன்தினம் மறுப்புத் தெரிவித்த பி.பி.சி. இந்தியர்களை அவமதிக்கும் நோக்கத்தில் அந்த நிகழ்ச்சி இல்லை.

இந்தியாவின் சிறப்புகள், அழகிய இடங்கள், கலாசாரம் பற்றியும் நிகழ்ச்சியில் பல காட்சிகள் உள்ளன. எனவே வருத்தம் தெரி விக்க தேவையில்லை என்று தெரிவித்தது. (வ)



மேற்கு வங்க மாநிலத்துக்கு வருகை தந்த பிரதமரின் ஆலோசகர் டி.கே.ஏ.நாயர், கொல்கத்தாவில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவரும் முதல்வருமான மம்தா பானர்ஜியைச் சந்தித்துப் பேசினார்.

## முல்லைப்பெரியாறு விவகாரம்: பிரதமர் முன்னிலையில் பேசித் தீர்க்க வேண்டும்

### வயலார் ரவி



முல்லைப்பெரியாறு அணைப் பிரச்சினைக்கு 2 மாநில முதலமைச்சர்களும் பிரதமர் மன்மோகன்சிங் முன்னிலையில் பேசி தீர்வு காண வேண்டும் என்று வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான மத்திய அமைச்சர் வயலார் ரவி தெரிவித்தார்.

தேசிய ரீதியிலான இளைஞர்கள் மற்றும் இடம்பெயர்தல் குறித்த 2 தினங்கள் கருத்தரங்கம் ஸ்ரீபெரும்புதூர் ராஜீவ்காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிலையத்தில் நடைபெற்றது.

இந்த கருத்தரங்கில் சிறப்பு அழைப் பாளராக வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான மத்திய அமைச்சர் வயலார் ரவி கலந்து கொண்டு பேசியதாவது:

இன்று தமிழ்நாட்டில் பேசப்படும் மிகப்பெரிய பிரச்சினை முல்லைப் பெரியாறு அணை பற்றியது ஆகும். இந்த பிரச்சினை குறித்து தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் கேரள முதலமைச்சர் உம்மன் சாண்டி ஆகியோர் பிரதமர் மன்மோகன் சிங் முன்னிலையில் அமர்ந்து பேசி நடத்தி தீர்வு காண வேண்டும். - என்றார் அவர்.

> முல்லைப் பெரியாறு அணை பிரச்சினைக்கு 2 மாநில முதலமைச்சர்களும் மன்மோகன் சிங் முன்னிலையில் பேசி தீர்வு காண வேண்டும்

## சிலைகளுக்கு மூடுவிழா உத்தரவில் மாற்றமில்லை

டில்லி, ஜன.20

உத்தரப்பிரதேசத்தில் தேர்தல் முடியும்வரை, யானை சிலைகளை துணி போட்டு மூடும் உத்தரவை மறுபரிசீலனை செய்ய முடியாது என்று தேர்தல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தில் ஆளும் பகுஜன் சமாஜ் கட்சியின் சின்னமான யானை, பல இடங்களில் பிரமாண்ட சிலைகளாக வைக்கப்பட்டுள்ளன. இந்த மாநிலத்தில் சட்டசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால், இந்த யானைச் சிலைகளை, துணி போட்டு மூடும்படி, தேர்தல் ஆணையம் உத்தர விட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது, மாயாவதியின் சிலைகளையும் மறைக்கும் படி, தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையத்தின் இந்த உத்தரவு, தலித்துகளுக்கு எதிரானது. ஜாதிய பாகுபாட்டோடு தேர்தல் ஆணையம் நடந்து கொள்வதாக, உத்தரப்பிரதேச முதல்வர் மாயாவதி, தேர்தல் ஆணையத்தை குறை கூறியிருந்தார். இது குறித்து, தலைமை தேர்தல் ஆணையம் வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது:

மூத்த தலைவர் ஒருவர், தேர்தல் ஆணையத்தின் செயலை விமர்சிப்பது கவலையளிக்கிறது. பிரபல தலைவரே இவ்வாறு பேசினால் நாம் என்ன செய்ய முடியும்.

தேர்தல் விதி முறைப்படி அரசு அலுவலகங்களில் உள்ள பிரதமரின் படங்களைக் கூட மறைக்கும் படி உத்தரவிட்டுள்ளோம். யானை சிலைகளை மூடும்படி, நாங்கள் உத்தரவிட்ட முடிவை மாற் றிக்கொள்ள முடியாது. - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## புதுச்சேரி வந்தார் பிரான்ஸ் அமைச்சர்


தானே புயலால் சேதம் அடைந்துள்ள பகுதிகளை பார்வையிடுவதற்காக பிரான்ஸ் நாட்டின் அமைச்சர் ஈடோவ்ரத் கோர்ட்டியல் இரண்டு நாள் பயணமாக இந்திய மாநிலம் புதுச்சேரிக்கு வந்தார்.

புதுச்சேரி மாநில முதல்வர் ரங்கசாமியின் வேண்டுகோளுக்கு இணங்க தானே புயலால் புதுச்சேரியில் ஏற்பட்டுள்ள சேதமதிப்புகளை நேரில் பார்வையிட்டு நிதியுதவி வழங்குவதற்காக அவர் வருகை தந்துள்ளதாக அரசு தரப்புத் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்பு பிரான்ஸ் நாட்டுத் தூதர் பிரான் கோயிஸ் ரிச்சர் மற்றும் பிரான்ஸ் அதிகாரிகள் ஆகியோர் தமிழகம் மற்றும் புதுச்சேரி எல்லைப்பகுதியில் அமைந்துள்ள கோட்டக்குப்பம் பகுதியில் ஆய்வுப் பணியை மேற் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித ரோமத்தைவிட மெலிதான மின் கம்பிகள்




ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கணினி ஞ்ஞானிகள் மனித ரோமத்தை விட பத்தா ரம் மடங்கு மெலிதான மின் கம்பிகளை உரு ாக்குவதில் வெற்றி கண்டுள்ளனர்.

கணினிகள் நாளுக்கு நாள் சிறிதாகி ருகின்றன எனினும் அவற்றின் செயற்றிறன் ளுக்குநாள் அதிகரித்து வருகிறது. கணினி ல் பயன்படுத்தப்படும் உட்கூறுகளும் றியதாகிக் கொண்டே வருகின்றன.

அதிக மின்சாரத்தைப் பயன் படுத்தாத, அதிக வெப்பத்தை வெளியிடாத, அதிகம் மின் விர யம் செய்யாத கணினி உட் பொருள்களை உருவாக்குவ தென்பது ஆராய்ச்சியாளர்க ளுக்கு சிக்கல் நிறைந்த விடய மாகவே இருந்து வந்துள்ளது.

அந்தச் சிக்கலைத் தீர்ப்ப தில் பெரியதொரு முன்னேற்றம் கண்டிருப்பதாக நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தெரி வித்துள்ளனர்.

நான்கு அணுக்கள் மட் டுமே அகலமும் ஒரு அணு மட் டுமே உயரமும் கொண்ட நுண் ணிய மின் கம்பிகளை இவர்கள் உருவாக்கிச் சாதனை படைத் துள்ளனர்.

இவை சிலிக்கன் அணுக்க ளுடன் பொஸ்பரஸ் அணுக்க ளைக் கலந்து இந்த நுண் கம்பி உருவாக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு செய்யும்போது, கம்பியின் மின் கடத்தும் மையப்பகுதி பாதுகாக்கப்படும் அதே நேரம் கடத்தப்படும் மின்சாரம் அதிகம் விரயமும் ஆவதில்லை.

குவாண்டம் கணினிகள் என்று சொல்லப் படுகின்ற அதிவேகத் திறன் கொண்ட அடுத்த தலைமுறைகளைக் கணினிகளை உருவாக்கு வதற்கு இந்த நுண்கம்பிகள் மிக அவசியமாகத் தேவைப்படும்.

# நடனமாடும் 'ரோபோ'




உலகின் மிக பிரமாண்டமான வீட்டு உபயோகப் பொருள்களின் கண்காட்சி அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்றது.

இதில் உலகம் முழுவதிலும் இருந்து 3,000 இற்கும் அதிகமான நிறுவனங்கள் தங்களது கண்டுபிடிப்புகளை அறிமுகம் செய்தன.

இதில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது ரோபோ அல்ட்ரா பாஸ் என்ற ரோபோ தான்.

இந்த ரோபோ வியட்னாமைச் சேர்ந்த டோஸி ரோபோ டிக்ஸ் நிறுவனத்தின் புத்தம் புதிய கண்டுபிடிப்பாகும்.

இந்த ரோபோவில் ஸ்பீக்கர் இணைக்கப்பட்டுள்ளது. பாட்டு கேட்டபடியே ரோபோ நடனமாடவும் செய்கிறது.

# படங்களை தனியாக பிரித்தெடுக்க

கணினியில் தற்போது பல்வேறு கோப்புக்கள் அனைத்தும் அலுவலக போர்மட்டுகளிலேயே உருவாக்கப்படுகின்றன.

மேலும் எம்.எஸ். அலுவலக மென் பொருளைப் பயன்படுத்தியே உருவாக் கப்படுகின் றன.

இணையத்தில் நாம் ஒரு தகவலைத் தேடிச் செல்லும்போது பல கோப் புகள் வேர்ட், எக்சல், பவர் பொயின்ட் போர் மட்டுகளில் இருக்கும். அவ்வாறு உள்ள கோப்பு கள் படங்களுடன் மட் டுமே இருக்கும்.

இவற்றைத் தனியாக பிரித்தெடுப்பதற்கு Image Extraction Wizard என்னும் மென்பொருள் உதவி புரிகிறது. இதன் மூலம் படங்களைத் தனி யாகப் பிரித்தெடுக்க முடியும்.

உதாரணமாக நாம் ஒரு வேர்ட் டாக்கிமெண்டை எடுத்துக் கொள்வோம், அதில் கொடுக்கப்பட் டுள்ள படங்களை மட்டும் தனியே பிரித்தெடுக்க வேண்டுமெனில் தனித் தனிப்படங்களாகத் தெரிவு செய்து மட்டுமே சேமிக்க முடியும்.

அதற்குப் பதிலாக எல்லாப் படங்களையும் ஒரே சமயத்தில் பிரித்தெ டுக்கவும் முடியும். அதற்கு உதவும் மென் பொருள் தான் இந்த Image Extraction Wizard.

மென்பொருளை இணையத்தில் இருந்து பதிவிறக்கி உங்கள் கணினியில் நிறுவிக்கொள்ளவும். பின் ஒரு முறை கணி னியை மறுதொடக்கம் செய்துவிட்டு பின் இந்த அப்ளிகேஷனை ஒப்பின் செய்யவும். பின் குறிப் பிட்ட அலுவலக பேமற் றைத் தெரிவு செய்து, அடுத்து எந்த இடத்தில் சேமிக்க வேண்டும் என்ப தையும் தெரிவு செய்து கொண்டு, அடுத்து Next என்னும் பொத்தானை அழுத்தவும்.


நீங்கள் குறிப்பிட்ட இடத்தில் அந்தப் படங் கள் சேமிக்கப்பட்டுவி டும். இதே போல் எல்லா விதமான அலுவலக கோப் புகளில் உள்ள படங்களை யும் தனியே பிரித்தெடுத் துக்கொள்ள முடியும்.

# விண்டோஸ் இயங்குதளத்திலும் Facebook Messenger




இந்த மென்பொருளானது browser இல் பேஸ் க்கைத் திறக்காது நேரடியாகவே நண்பர்களுடன் பேஸ்புக் சமூக வலைத்தளமானது அன்ரோயிட், பிளக் பெரி, ஐ போன்களுக்கு வெளியிட்டது போன்று தற் பொழுது விண்டோஸ் இயங்கு தளத்திலும் தனி ாக பயன்படுத்துவதற்குரிய Facebook Messenger ஐ வெளியிட்டுள்ளது. இது Gtalk, Yahoo messengerஐ போன்று காணப்படினும் அவற்றிலும் அதிகமான வசதிகளைக் கொண்டுள்ளது.

# இணைய வசதி இல்லாத தொலைபேசியிலும் 'பேஸ்புக்'




உங்களிடம் இணைய வசதியற்ற மிகப் பழைய கைத்தொலைபேசி இருக் கின்றதா?

கவலையை விடுங் கள். இனிமேல் அவற்றி லும் உங்கள் பேஸ்புக் கணக்கை லொகின் செய்ய லாம். பேஸ்புக் இந்தியா இதற்கான வசதியை உருவாக்கியுள்ளது.

இவற்றைச் செயற்படுத்த உங்கள் கைத்தொலைபேசியிலிருந்து *325 என்று டைப் செய்து டயல் செய்து விட வேண்டும். அல்லது *fbk என்று டயல் செய்ய வேண்டும்.

இதற்கென உங்கள் தொலைபேசி யில் இணைய உலாவி மற்றும் தரவுகள் போன்றவை இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. முதலில் *325 என டயல் செய்யுங்கள் பின்னர் பேஸ்புக் கணக்கின் பயனாளர் பெயர், கடவுச்சொல் தந்து லொகின் செய்தல் வேண்டும்.

அதன் பின்னர் இலக்கங்களின் அடிப்படையில் பேஸ்புக்கை கையாள முடியும். சொட்டிங்க், புதிய நண்பர் களை அனுமதித்தல், மற்றும் ஏனைய வற்றையும் செய்யலாம்.

இதற்காக ஒரு நாளைக்கு ஒரு ரூபா கட்டணம் அறவிடப்படுகின்றது. மேலும் Airtel, Aircel, Idea,Tata Docomo போன்றவையும் இந்தச் சேவையை வழங்குகின்றன.

# பழைய செல்போனுக்கு பணம் தரும் ஏ.ரி.எம்!




எங்களுக்குத் தெரிந்ததெல்லாம் ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணத்தை இலகுவாக எடுக்கலாம் என்பது மட்டும் தான். ஆனால் அமெரிக்காவில் இதை யெல்லாம் விட ஒரு படி தாண்டிப் போய் ஏ.ரி.எம் மூலம் இன்னொரு புதிய விடயத்தையும் சாதித்துள் ளனர். ஆம், உங்களிடம் இருக்கும் பழைய செல்போனை ஏ.ரி.எம் இல் செலுத்தி அதற்குரிய பணத்தை உட னேயே பெற்றுக்கொள்ளலாம்.

செல்போன் மட்டுமில்லை பழைய mp3 பிளேயர்கள், ஐ போன் போன்ற வற்றுக்கும் பணத்தைப் பெற முடி யும். அமெரிக்காவில் உள்ள பிரபல நகரான Las Vegas இல் இடம்பெற்ற சர்வதேச எலக்ரோனிக் வாடிக்கையா ளர் கண்காட்சியில்தான் குறித்த ஏ.ரி.எம் இயந்திரம் அறிமுகப்படுத் தப்பட்டது. தொடு திரையுடன் கூடிய ஏ.ரி.எம் இயந்திரத்தின் முன்பக்கத் தில் செல்போனை வைத்தால் அதனை ஸ்கான் செய்து அதன் விலையை எளிதாக மதிப்பிட்டு விடும்.

இது ஒரு சூழல் பாதுகாப்புத் திட் டமாகவும் நோக்கப்படுகின்றது. பல் வேறு செல்போன் நிறுவனங்களுட னும் தொடர்புபட்டிருப் பதால் ஏ.ரி.எம் மையங்கள் மூலம் சேகரிக்கப்படும் பழைய செல்போன்கள் மீள் சுழற்சிக்கு உள்ளாவது எளிதாக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றுத் தெரிதலா? பட்டுத் தெரிதலா?

மனித உறவுகளில் ஏற்படும் குழப்பங்களுக்கு மூல காரணிகளாக இருப்பவை அறிவும் உணர்வும். சிலர் வாழ்வில் இவையிரண்டின் வழிநடத்துதலில் எதற்கு, எப்போது, எந்த அளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனப் புரிந்துகொள்ளாமல் வாழ்வதால் உறவுகளை மேம்படுத்துவதற்கு மாறாக , மேலும் பல சிக்கல்களை உருவாக்கி வைத்துத் தவிப்பதைப் பார்க்கிறோம்.

அடிப்படை அறிவு பட்டுத் தெரிதலில் ஆரம்பிக்கிறது. உதாரணத்துக்கு ஒரு குழந்தை தவறைச் செய்து பட்டுத் தெரிந்து கொள்கிறது. எடுத்துக்காட்டாக விளக்கை காணும் குழந்தை ஒளியைக் கண்ணால் கண்டு கலவரப்பட்டு கையால் தொடப்போய் விளக்கு சுடுகிறது என்பதைப் பட்டுத் தெரிந்து கொள்கிறது.

கண்ணுக்கு அழகெல்லாம் தொடலுக்கு அழகல்ல என்று தெரிந்து கொள்கிறது. இந்த உண்மை உணர்வைப் பாடமாக்கித் தன் அறிவுக்கு வழங்குகிறது.

கற்றுத் தெரிதலா? பட்டுத் தெரிதலா? என்று எதைப் பெரியது எனக் கணக்கிடுவதைவிட பட்டது கற்றலுக்கு வருகிறது என்றோ அல்லது பட்டது பாடமாகிறது என்றோ புரிந்து கொள்வது முறையானதாக இருக்குமல்லவா?

**அறிவா? உணர்ச்சியா?**

அறிவு பெரிதா அல்லது உணர்ச்சி முக்கியமானதா என்ற கேள்வி நமக்குள் எழாமலில்லை. உண்மையில் அறிவின் சக்தியைவிட உணர்ச்சியின் சக்தியே பெரியது.

உலகில் உயிரெல்லாம் அன்பென்ற உணர்ச்சியாலே உந்தப்படுகின்றன. உருவாக்கப்படுகின்றன என்பதை நாம் சற்றுப் புரிந்து கொள்ள வேண்டும். அறிவுக்கு எல்லை உண்டு. ஆனால் உணர்ச்சிக்கு எல்லை இல்லை. அது அலைபோல் தொடர்ந்து இயங்கக் கூடியது.

உணர்ச்சி அலைபோல் தொடர்ந்து இயங்கக் கூடியது என்ற அதே வேளையில் உணர்ச்சி என்பது ஒரு தொற்று நோய் போன்றதாகும். ஒருவரது சிரிப்புப் பலரையும் சிரிக்க வைக்கும். அவ்வாறே ஒருவரது கோபம் பலரையும் பாதிக்கும்.

ஆனால் அறிவு சிறு தியானம் போன்றது. சற்று மனதுக்குள் சென்று வந்தால் தான் அது புரியும்.

உணர்ச்சி உடனடியானது. ஆனால் அறிவு மற்றொன்றின் ஊடாகப் பயணம் செய்யக் கூடியது என்றும் சொல்லலாம்.

அழுகை, சிரிப்பு, கோபம், சோகம், மகிழ்ச்சி என உணர்ச்சியின் பல்வேறு கோணங்களை நாம் மதிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொன்றின் நோக்கமாகவும் முடிவாகவும் மனநிறைவாகவும் அமைதி மட்டுமே இருக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அமைதியைத் தேடும் ஓட்டமே ஒவ்வொரு உணர்ச்சிப் பரிமாணத்தின் முடிவு.

கோபம், தாபம், அழுகை, சோகம், அங்கலாய்ப்பு, ஆதங்கம் இவையெல்லாம் 'தெளிவு' என்னும் மகா உணர்ச்சியின் வேலைக்காரர்கள். அமைதியை அடையும் வரை இந்த உணர்ச்சிகளுக்கு ஓய்வே கிடையாது.

அறிவு தெளிவைக் கொடுக்கிறது. அறிவு தெளிவைக் கொடுத்தாலும் உணர்ச்சிகளுக்குப் பின் பிறக்கின்ற தெளிவே உண்மையான தெளிவு.

இதற்காகவே நாள்கள், வயது, அனுபவம், வாழ்க்கை எல்லாம் இயங்குகிறது. இந்தத் தெளிவில்தான் அறிவும் உணர்ச்சியும் சங்கமிக்கின்றன.

குழம்பிய நிலையில் கூட நாம் தெளிவாக இருக்க முடியும். எப்படித் தெரியுமா?

*''நான் குழம்பிப் போயிருக்கிறேன்''*
*''நான் கோபமாய் இருக்கிறேன்''*
*''நான் சந்தேகத்தில் இருக்கிறேன்''*

என்று நாம் உணர்ந்தால் மிக விரைவில் நாம் தெளிவை அடைந்து விடலாம்.

தெளிவு என்பது உண்மையை உண்மையாகக் காட்டும். அதன் மூலம் ஓர் உள்ளார்ந்த மகிழ்ச்சி கிடைக்கும்.

அறிவு மற்றும் உணர்ச்சிகளால் குழப்பங்களும் கோபம் போன்ற உணர்ச்சிப் பெருக்கும் ஏற்படும் போது நிதானிப்பதுதான் சாலச் சிறந்தது.

*குழப்பத்திலும்,*
*கோபத்திலும்,*
*சந்தேகத்திலும்,*
*வேகமாகச் செயல்படாதே!*
*நின்று நிதானி; நின்று நீ தியானி!*

பாவை

# மாணவர்களுக்குக் கல்வியை பெற்றோர் திணிக்கக் கூடாது

## வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஜன.20

சிறிய பாடசாலைகளில் கல்வி கற்பதை, மாணவர்களாயினும் சரி பெற்றோர்களாயினும் சரி ஒரு குறையாகக் கருதக் கூடாது என வலி. வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் சி.ஹரிகரன் தெரிவித்தார்.

காங்கேசன்துறை நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலயத்தில் தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஹரிகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவிக்கையில்:

பெரிய பாடசாலைகளில் 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் காணப்படுவார். இங்கு 10 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் காணப்படுகின்றார்.

ஆகவே இங்கு கற்கின்ற மாணவர் ஒவ்வொருவர் மீதும் ஆசிரியர் தனிக் கவனமெடுத்துக் கற்பிப்பார். இதனால் மாணவர்கள் தலைமைப் பண்புகளை நிறையவே பெறுவர்.

இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்று ஒரு முதுமொழி உண்டு. 3-6 வயது வரையான காலப்பகுதியில் மாணவர்களின் ஞாபக சக்தி - சிந்தனை ஆற்றல் - அதிகமாகச் செயற்படுகின்ற காலப் பகுதியாகும். இந்தக் காலத்திலே அவர்கள் சரியான கல்வியை - அறிவைப் பெற்றார்களாயின் எதிர்காலத்தில் சிறந்த ஒரு நற்பிரஜைகளாகத் திகழ முடியும்.

பெற்றோர்கள் மாணவர்களுக்குக் கல்வியைத் திணிக்கக் கூடாது. பாடசாலைக்கு அனுப்பினால் ஆசிரியர்கள் கவனிப்பார்கள் என்று எண்ணிப் பெற்றோர்கள் அக்கறையற்றவர்களாக இருக்கக் கூடாது. பிள்ளைகளின் பயிற்சிப் புத்தகங்களைப் பார்வையிட்டு கல்வி நிலையை அறிய வேண்டும். கிழமையில் ஒரு தடவையாவது பாடசாலைக்குச் சென்று வகுப்பாசிரியரிடம் தனது பிள்ளையின் கல்வி தொடர்பாகக் கேட்டறிந்து கொள்ள வேண்டும். அதேபோன்று ஆசிரியர்களும் மகிழ்வான கற்பித்தலின் மூலமே மாணவர்களுக்குக் கல்வியைப் புகட்ட வேண்டும். மாணவர்களுக்கு நற் பழக்கவழக்கங்கள் ஆரம்ப வகுப்புக்களிலேயே ஊட்டப்பட வேண்டும்.

நவீன விஞ்ஞான யுகத்தில் ஆங்கிலக் கல்வி, கணினிக் கல்வி என்பனவும் அவசியமாகின்றன. சிறுவயதிலேயே நீங்கள் அவற்றைப் பெறுவதனூடாக எதிர்காலத்தில் சிறந்த - பூரண - அறிவுள்ளவர்களாகத் திகழ முடியும்.- என்றார். (எ



கைதடி பராசக்தி பாலர் பகல் இல்லத்தில் கல்வி பயின்று தரம் 1 இற்குச் செல்லும் மாணவர்களால் வெளியிடப்பட்ட மாணவர் ஆக்க சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய ஆரம்பப் பிரிவு ஆசிரியர் திருமதி த.சூரியகுமாரன் சஞ்சிகையை வெளியிட்டு வைக்க அருகில் ஆசிரியர்கள் இருக்கின்றனர். (எ,

## புதிய நிர்வாகிகள் தெரிவு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலய இளைஞர் கழகம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

வித்தியாலய அதிபர் வே. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக இளைஞர் நாடாளுமன்ற தென்மராட்சி உறுப்பினர் எஸ்.ரி. விமல் மாவட்ட சம்மேளன அமைப்பாளர் ச.மதியழகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில்.

தலைவர் - பி.பிந்துஷன், செயலாளர் - பா.செந்தமிழன், பொருளாளர் - ர.லுவேக், அமைப்பாளர் - கு.கஜீபன், விளையாட்டு - து.டிலக்ஸன், கலாசாரம் - மு.கவித்திரன், தொழில்முயற்சி - தா.சாந்தரூபி, ஊடகம் - சி.ஷலக்ஸனா, தேசிய சேவை - த.வினுஜா, கல்வி - செ.மயூரிகா, பொறுப்பாசிரியர் - வை. பிறேம்குமார். (எ-207)

## சிசு உதான

மக்கள் வங்கி சாவகச்சேரி கிளையில் கடந்த திங்கட்கிழமை 150 க்கும் அதிகமான தரம் 1 மாணவர்கள் சிசு உதான கணக்கை ஆரம்பித்துள்ளனர்.

தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா தினமான கடந்த திங்கட்கிழமை வங்கி உத்தியோகத்தர்கள் பத்துக்கும் மேற்பட்டோர் பாடசாலைகளுக்குச் சென்றவேளையில் பெற்றோர்களால் தமது பிள்ளை களின் பெயரில் சிசு உதான கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன.

கணக்கை ஆரம்பித்த மாணவர்கள் பெயரில் வைப்பிலிடப்பட்ட தொகைக்குச் சமமான தொகை வங்கியால் வைப்பிலிடப்பட்டது. அத்துடன் இந்த மாணவர்களுக்கு விசேட பரிசில்களையும் வழங்கிய தாக வங்கிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தெரிவித்தார். (எ-207)

## வயலோரம் விவசாய வானொலி நிகழ்ச்சி

விவசாயம் தொடர்பான புதிய தொழில் நுட்பத் தகவல்களை வழங்கும் 'வயலோரம் விவசாய வானொலி நிகழ்ச்சி' ஆனது யாழ். எவ்.எம்.இன் மெகா அலைவரிசையில் பிரதி புதன் தோறும் இரவு 7 மணி தொடக்கம் 7.30 மணிவரை ஒலிபரப்பாகி வருகிறது. இந்த நிகழ்ச்சியில் விவசாயம் தொடர்பான தகவல்கள் [illegible] திணைக்கள உத்தியோகத்தர்களால் வழங்கப்படுகின்றன. (எ)

# கல்வியியற் கல்லூரியை நாடும் மாணவரின் தொகை அதிகரிப்பு

## பீடாதிபதி க.பேணாட் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன.20

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்வதைவிட கல்வியியற் கல்லூரிகளுக்குச் செல்வதையே பெரிதும் விரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது என வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி க.பேணாட் தெரிவித்தார்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்குப் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

தற்போது ஒரு வருடத்திலோ அல்லது ஆறு மாதங்களிலோ வேலை வாய்ப்புக் கிடைத்துவிடும் என்பதால் மாணவர்கள் கல்வியியல் கல்லூரியை விரும்புகின்றனர். பல்கலைக்கழகத்துக்குச் செல்பவர்கள் பட்டப்படிப்பு முடிந்தவுடன் வேலைக்காக உண்ணாவிரதத்திலும் பகிஷ்கரிப்பிலும் ஈடுபடும் நிலையேற்பட்டுள்ளது.

இதன் காரணமாகக் கல்வியியல் கல்லூரியைத் தெரிவு செய்வதால் பலர் இன்று ஆசிரியர்களாக உருவாகியுள்ளனர்.

இம்முறை 66 ஆயிரம் விண்ணப்பங்கள் கல்வியியல் கல்லூரிக்குக் கிடைத்தன. அதில் 6000 இற்கும் மேற்பட்டவை தமிழ் மொழி மூல விண்ணப்பங்கள் ஆகும். 24 பயிற்சி நெறிகளைக் கொண்ட 5 தமிழ் மொழி மூல தேசிய கல்வி யல் கல்லூரிகளுக்கும் பெரும் சிரம துக்கு மத்தியில் மாணவர்களை தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட் வர்கள் சிலர் இடைநடுவில் ப வேறு காரணங்களுக்காக நின் விடுகின்ற நிலைமையும் உண் இது ஏனைய மாணவர்களின் சந்தர் பத்தைக் கெடுக்கும் நிலையாகும்

இன்றைய கால கட்டத்தி கல்வியியல் கல்லூரிகளுக்கா கேள்வி அதிகரித்துள்ள நிலையி மாணவர்கள் தமக்குக் கிடைத் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அ னூடாகப் பயனடைய வேண்டும்.

இம்முறை வவுனியா தேசி கல்வியியல் கல்லூரிக்குத் தெரி செய்யப்பட்ட 175 பேரில் 34 பே பதிவை மேற்கொள்ளவில்லை. அ களுக்காகக் காத்திருக்க முடியா நிலையால் நாம் ஏனைய மாண களுக்கு சந்தர்ப்பத்தை வழங் னோம். வவுனியா தேசிய கல்வி யற் கல்லூரி பெரிய சவால்களுக் முகம் கொடுத்தே இன்று இவ் றான நிலைக்கு வந்துள்ளது.

வளமான ஆசிரியர்கள் உள் இந்தக் கல்லூரியில் கற்கும் கால களை மாணவர்கள் பயனுள்ளத ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற

இந்த நிகழ்வுக்கு ஓய்வு பெற் அதிபர் ஜெயதரன் சிறப்பு விருந் னராகக் கலந்துகொண்டார். உ பீடாதிபதிகள், ஆசிரிய கல்வியிய ளர்கள், புதிய மாணவர்களின் பெ றோர்கள் கலந்து கொண்டனர். (எ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377, 021-2262395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார்:0232223311

## கேட்போம் கேள்வி

உப உணவுப் பொருள்கள் சிலவற்றின் வரிகளை அண்மையில் அரசு திடீரென அதிகரித்தது. பருப்பு, சீனி, பாம் எண்ணெய், பூண்டு, மீன் ஆகியவற்றுக்கான இறக்குமதி வரிகளே அதிகரிக்கப்பட்டன.

''கட்டுப்பாடுகள் இன்றி அதிகரித்துச் செல்லும் அரச செலவை ஈடுசெய்வதற்காகவே அரசு இந்தத் திடீர் அதிகரிப்பைச் செய்துள்ளது'' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டி உள்ளார். சாதாரண மக்கள் மீது வரிச் சுமையைத் திணித்து, அரசு அதில் குளிர்காய்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திஸ்ஸவின் குற்றச்சாட்டுக்களில் உண்மை இல்லாமல் இல்லை. இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னரான 63 வருடங்களில் மிகப் பெரிய அமைச்சரவையை இந்த அரசே கொண்டுள்ளது. வெள்ளை யானையைக் கட்டித் தீனி போடுவது போன்று இந்த அமைச்சரவைக்குச் செலவு செய்து கொண்டிருக்கிறார் மஹிந்த.

அமைச்சுக்களுக்கான செலவு ஒரு பக்கம் என்றால் அமைச்சர்களும் தங்கள் பங்கிற்கு மேலும் மேலும் செலவு செய்து கொண்டே இருக்கிறார்கள். அது பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. வீண் விரயங்களைக் குறைக்கவும் நடவடிக்கை எடுப்பதில்லை.

ஓரிரு நாள்களின் முன்னர் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா யாழ்ப்பாணம் வந்த போது கூடவே இரண்டு அமைச்சர்களும் கொழும்பிலிருந்து வந்தார்கள். இந்திய நிதி உதவியில் கட்டப்பட்ட வீடுகளைக் கையளிப்பதற்காகவும் இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சைக்கிள்களைக் கையளிப்பதற்காகவுமே கிருஷ்ணா கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் வந்தார். அவருடன் கூடவே வெளிவிவகார அமைச்சர் பீரிஸும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் ஏன் வந்தார்கள் என்று தெரியவில்லை.

சில நாள்களின் முன்னர் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க யாழ்ப்பாணம் வந்தார். மூன்று நாள்கள் இங்கு தங்கியிருந்த அவருக்கும் பரிவாரங்களுக்குமான செலவு பல லட்சங்கள். இத்தனையைச் செலவிட்ட அந்தப் பயணத்தின் மூலம் கண்ட அடைவு என்ன என்பது அமைச்சருக்காவது தெரியுமா என்று தெரியவில்லை. நேற்றுக் காலை பருத்தித்துறையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொள்வதற்காகக் கல்வி அமைச்சர் வந்திருந்தார்.

மக்களின் வரிப் பணம் இப்படி அமைச்சர்களின் ஆடம்பர விழாக்களிலேயே கழிகின்றது. போதாதற்கு அமைச்சர்கள் அங்கும் இங்கும் பறக்க ஹெலியைப் பயன்படுத்துவதன் மூலம் மட்டும் ஆண்டுக்குக் குறைந்தது 20 கோடி ரூபா செலவாகின்றதாம். அப்படி இருந்தாலும் அதைக் குறைக்க முடியாது என்கிறார் பிரதமர். ''ஒரே நேரத்தில் வடக்கிலும் தெற்கிலும் நிகழ்ச்சிகள் நடக்கும். வரமுடியாது எனக் கூறமுடியாது. நடப்பு ஆண்டில் இத்தகைய பயணங்கள் மேலும்கூடும். அதனைக் குறைக்க முடியாது'' என்று பிரதமர் பொறுப்பற்ற விதமாகச் சொல்லியிருக்கிறார்.

அமைச்சர்கள்தான் இப்படி என்றால் வடக்கில் உள்ள அதிகாரிகளும் சளைத்தவர்கள் அல்லர். அபிவிருத்தித் திட்டங்களுக்கு என்று ஒதுக்கப்படும் நிதியில் இருந்து அல்லது மக்களிடம் இருந்து மேலதிக நிதியை வறுகியாவது திறப்பு விழாக்களையும் அடிக்கல் நடும் நிகழ்வுகளையும் நடத்த அவர்களும் தவறுவதில்லை.

இப்படி மக்கள் பணத்தை வாரி இறைப்பதால் என்ன பயன் என்பது பற்றி யாரும் சிந்திப்பதில்லை. மக்களும் அது பற்றிக் கேட்பதில்லை. ஏதோ நடப்பதெல்லாம் அரச பணத்தில்தானே என்ற போக்கில் இருந்து விடுகிறார்கள். பின்னர் பொருள்கள் விலையேறியதும், பெற்றோல் விலை ஏறியதும் கொதித்துக் கொந்தளிக்கிறார்கள். அரசைத் திட்டித் தீர்க்கிறார்கள். அதில் என்ன பயன் இருக்கப் போகிறது. நடக்கிறபோதே ''எங்கள் பணத்தை ஏன் இப்படி வீணாகச் செலவழிக்கிறாய்?'' என்று சட்டையைப் பிடித்து நாங்கள் கேட்கவேண்டும். அப்போதாவது திருந்துகிறார்களா என்று பார்க்கலாம்.

# கனவாகும் 'பாதை'

தீவான்

> **“ நயினாதீவு - குறிகாட்டுவான் பாதைச் சேவைக்கு மக்கள் நீண்ட நாள்களாகக் கோரிக்கை விடுத்து வந்தபோதும் அண்மைக் காலமாகவே அதிகாரிகளாலும் அரசியல்வாதிகளாலும் இந்தக் கோரிக்கை உணரப்பட்டது. ஆனால் 'பாதை' சேவை பற்றிய எல்லாக் கனவுகளும் கலைந்து மக்கள் விரக்தியடைந்திருக்கிறார்கள். மீண்டும் ஒருமுறை தாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்று அவர்கள் குமுறுகிறார்கள்.**

நயினாதீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையிலான புதிய 'பாதை' சேவைக்கான பணிகள் 2011 ஜூலை 10ஆம் நாள் சுபமுகூர்த்த வேளையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெரும் ஆரவாரங்கள், ஆர்ப்பாட்டங்களுடன் அரச தரப்பினர் இதற்கான பணிகளை ஆரம்பித்து வைத்தனர்.

''இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் ஜனாதிபதி மாண்புமிகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற குறிகாட்டுவான் - நயினாதீவு பாதைப் படகுக்கான இறங்குதுறை நிர்மாணப் பணி பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ டக்ளஸ் தேவாணந்தா வின் அழைப்பின் பேரில் பொருளா தார அபிவிருத்தி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ பஸில் அவர்களினால் 2011ம் ஆண்டு ஆடி மாதம் 10ம் நாள் சுபமுகூர்த்த வேளையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது'' என்று எழுதி நட்டு வைத்த விளம்பரப் பலகை மட்டும் இன்றும் உப்புக் காற்றில் ஊதிப் பெருத்துக் கிடக்கிறதே தவிர, வேறு ஒன்றும் கடந்த 6 மாதங்களில் நடந்ததாகக் காணோம்.

இந்த விளம்பரப் பலகையை நட்டு வைத்தவர்களான துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கும் பின்னர் என்ன ஆனது என்று தெரியவில்லை.

தேர்தல் காலங்களில் இது பற்றி மேடை மேடையாக முழங்கினார்கள். மக்களும் நம்பினார்கள், தீவுப் பகுதிகளில் அரசுக்கு வாக்குகளும் விழுந்தன.

நயினாதீவு - குறிகாட்டுவான் 'பாதை' சேவை நயினாதீவு மக்களின் நீண்டகாலக் கனவு. பல காலமாக இதற்கான கோரிக்கைகளை அவர்கள் விடுத்து வந்தார்கள். இந்தச் சேவை கிடைத்தால் நயினாதீவு மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்ற நம்பிக்கையும் நிலவி வந்தது.

இன்றோ எல்லாக் கனவுகளும் கலைந்து மக்கள் விரக்தியடைந்திருக்கிறார்கள். மீண்டும் ஒருமுறை தாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்று அவர்கள் குமுறுகிறார்கள்.

நயினாதீவு - குறிகாட்டுவான் பாதைச் சேவைக்கு மக்கள் நீண்ட நாள்களாகக் கோரிக்கை விடுத்து வந்தபோதும் அண்மைக் காலமாகவே அதிகாரிகளாலும் அரசியல்வாதிகளாலும் இந்தக் கோரிக்கை உணரப்பட்டது. 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் அது நிறைவேற்றித் தரப்படும் என்று கூறப்பட்டது. அதற்கமைய திருகோணமலையில் இருந்து பாதைக்கான பாகங்கள் பல குறிகாட்டுவானுக்குக் கொண்டு வரப்பட்டன.

அந்தப் பாகங்கள் வந்து சேர்ந்து சுமார் இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. 'பாதை'யைப் பொருத்துவதற்குத் தேவையான முயற்சிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை மேற்கொள்ளவில்லை. 2010ஆம் ஆண்டு நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய உற்சவத்துக்கு வந்த மக்கள், அடுத்த ஆண்டுத் திருவிழாவுக்குள் 'பாதை' சேவை ஆரம்பிக்கப்பட்டுவிடும் என்று நம்பினார்கள். ஆனால் அது நடைபெறவே இல்லை.

கொண்டு வந்து போட்ட 'பாதையின்' பாகங்கள், குறிகாட்டுவான் பேச்சியம்பாள் ஆலயத்துக்கு அருகே கிடந்து துருப்பிடிக்கின்றன. இந்தப் 'பாதை' சேவையை ஆரம்பிக்க விடாமல் தடுப்பதில் ஒருசாரார் மும்முரமாக இருக்கின்றனர் என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி இருந்தன.

பத்திரிகைகளில் அடிக்கடி 'பாதை' பற்றிய எதிர்மறைச் செய்திகள் வெளிவந்ததைத் தொடர்ந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். அலுவலகம் கொழும்பிலிருந்து அதிகாரிகளை வரவழைத்தது.

அவர்கள் குறிகாட்டுவானுக்கு வந்து, துருப்பிடித்துக்கிடந்த 'பாதை' பாகங்களை நிமிர்த்தி, தட்டிச் சுத்தம் செய்து வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். பின்னர், பாகங்கள் துருப்பிடித்துப் போயுள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

''இதற்குக் கொழும்பிலிருந்து ஏன் அதிகாரிகள் வரவேண்டும். வீதியில் செல்லும்போது பார்த்தாலேயே இந்த விடயம் தெரிகிறதே?'' என்று கேட்கிறார்கள் மக்கள்.

சேவையை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததாகவும் ஆனால், ஒப்பந்தகாரர் அதனைச் செய்து முடிக்காமல் காலதாமதப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்றும்கூடத் தகவல்கள் கசிந்தன. கடைசியில் எல்லாம் முடிந்து இப்போது 'பாதை' சேவைக்கான முயற்சிகளே கைவிடப்பட்டு விட்டன போல் தோன்றுகின்றது.

ஆடி அடங்கும் வாழ்க்கையைப் போல், பேசி அடங்கிய விடயமாகிப் போய்விட்டது நயினாதீவு - குறிகாட்டுவான் 'பாதை' சேவை.

இந்தத் திட்டம் நயினாதீவுக்குக் கட்டாயம் தேவை. அந்தப் பகுதிக்கு உரிய, உகந்த அபிவிருத்தித் திட்டம் இது. எந்தத் திட்டத்தையும் மேடைகளில் முழங்கினால் மட்டும் போதாது, கடதாசிகளில் மட்டும் வைத்திருந்தால் போதாது அவற்றைச் செயற்படுத்தவேண்டும். அதிகாரிகளும் திட்டத்தைச் செயற்படுத்துவதில் உணர்வுடன் அக்கறை செலுத்த வேண்டும்.

அமைச்சர்கள், அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதாக விளம்பரப் பலகைகளை நட்டு வைத்து மக்களை ஏமாற்றக்கூடாது. ஏதோ செய்கிறோம் என்று காட்டுவதற்காக உழுத்துப்போன பொருள்களைக் கொண்டு வந்து கொட்டி மக்களை மடையர்கள் ஆக்க முனையக் கூடாது.



''விரைவில் இடம்பெறும்'' என்று காலத்துக்கும் கூறிக் கொண்டிருக்காமல் தரமான உரிய உதிரிப்பாகங்களைக் கொண்டு வந்து விரைவில் வேலையை முடிக்க வேண்டும். இல்லையேல் அடுத்த தேர்தலில் நயினாதீவில் இருந்து அரசுக்கு ஓரேயொரு வாக்குக் கூடக் கிடைக்காது. ஜனாதிபதிக்கும் இது சமர்ப்பணம். ✱

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காலக்கூம்பில் ஈழத் தமிழர்கள்


டாக்டர்.சி.எஸ்.யமுனானந்தா

ஒரு பொருள் ஒளியின் வேகத்தினை அணுகும்போது அதன் சட்டத்தில் உள்ள கடிகாரத்தில் நேரமாற்றம் பூஜ்ஜியத்தினை அணுகும். பௌதிக வெளியில் இதனை விளங்குவது கடினமும் சாத்தியமற்றதுமாகும். ஆனால், உயிரியல் தொகுதியில் எமது ஞாபகத்துக்கு இதனைப் பிரயோகிக்கலாம்.

இதனை Tensor Theory for Memory என 1993ஆம் ஆண்டு இலங்கை PSSL இன் வருடாந்த ஆய்வு மாநாட்டில் பிரஸ்தாபித்து இருந்தேன். அன்றைய காலத்தில் கணினித் தொழில்நுட்ப விருத்தியோ , இணையத்தள அறிமுகமோ இருக்கவில்லை. ஆனால் இன்று இணைய வெளியில் நேரமும் தூரமும் பூஜ்ஜிய இடைவெளியில் அமைக்கப்பட்டுள்ளது. பல இணைய வலைப்பூக்களும் இணைய வலைப் பூங்காக்களும் அபரிமிதமாக முன்னேறிவிட்டன. இவை அல்பேர்ட் ஐன்ஸ்ரீனின் சார்புக் கோட்பாட்டினை நடைமுறையில் விளக்குவதற்கு உதாரணமாக, அதாவது Tensor Theory for Memoryஇற்கு உதாரணமாக அமைகின்றன.

இதனை எளிதில் விளங்கப்படுத்தக் கூடிய சம்பவமே அண்மையில் உலகின் நிஜத்தைக் காட்டிய விக்கிலீக்ஸின் இணைய வலையமைப்பு தடங்களின் வெளியீடு. அதில் பூஜ்ஜிய நேரத்தில், பூஜ்ஜிய தூரத்தில் உலகில் நடைபெற்ற சம்பவங்கள் வெளிப்படுத்தப்பட்டு கண நிமிடத்தில் உள்ளது. மனித மூளையும் இவ்வாறான ஞாபக சக்திக்கு உட்பட்டதே. அதனையே Tensor Theory for Memory என நான் 1993ஆம் ஆண்டு விவரித்தும் இருந்தேன். ஆனால் அன்றைய காலத்தில் எனது தேற்றம் எனது சமூகத்துக்குப் பொருத்தமானதாகவோ, தேவையானதாகவோ தெரியவில்லை. ஆனால் இன்றைய காலத்தில் மிகவும் இன்றியமையாதது.

சாதாரண வாழ்க்கையினை நியூட்டனின் இயக்க விதிப்படி விளக்கும் தத்துவங்கள் சென்ற நூற்றாண்டுக்கு உரியவை. உதாரணமாக ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு. மற்றும் எளிய இசை இயக்கம் என்பவற்றினை எமது வாழ்வின் உதாரணங்களாகப் பல எழுத்தாளர்கள் விமர்சகர்கள் கைக்கொள்வது உண்டு. ஆனால், நாம் இன்று ஐன்ஸ்டீன் சார்புக்கோட்பாட்டின் அடிப்படையில் எமது வாழ்வியலை ஒப்பிடக்கூடிய நிலையினை இன்றைய இணைய வெளி ஏற்படுத்தி உள்ளது. இணைய வெளியில் ஈழத் தமிழர்களது காலக் கூம்பினைக் கருதும்போது எமது அரசியல் பிரக்ஞை சுவர்ணப்பட்சிபோல அபிலாசைகளை நோக்கி வட்டமிடும் என்பது நிச்சயம்.




# ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்

தானா

மானுட வாழ்வில் உதவி அவசியப்படுவோருக்கு தத்தம் வசதி வாய்ப்புக்களின் அடிப்படையில் முடிந்த உதவிகளை வழங்குவது ஒரு நற்பண்பு.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் வரை எமது சமூகத்தின் மத்தியில் நிலவிய கலை, கலாசாரப் பண்பாடுகள் பெரும்பாலும் ஆலயங்களை மையப்படுத்தியே முன்னெடுக்கப்பட்டன; வளர்ச்சி கண்டன. அவை வரலாற்றுப் பதிவுகள்.

இறை நம்பிக்கையின் அடிப்படையில் சமூகத்தால் வகுக்கப்பட்ட வாழ்வு நெறிக் கட்டுப்பாடுகளுக்கு அமைய வாழ்வதே இறை ஆசீர்வாதத்தை ஈட்ட வழி வகுக்கும் என்ற நம்பிக்கையுடனான வாழ்க்கை நடைமுறையே நம் முன்னோர்களால் கடைக்கொள்ளப்பட்டது.

எமது நாட்டின் இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாம் என்ற பிரதான நான்கு மதப் பிரிவுகளும் மனித நேயத்தை மையப்படுத்தி, சக மனிதர்கள் மீதான அன்பை வலியுறுத்தும் அடிப்படைக் கோட்பாடுகளை அத்திபாரமாகக் கொண்டவை. கண்ணுக்குப் புலப்படாத இறைவனின் கருணையும் ஆசியுமே வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளையும் நன்மை தீமைகளையும் நிர்ணயிப்பவை என்பதே மதங்களின் கொள்கை, கோட்பாடுகளின் அடிப்படை.

ஆத்மா அழிவில்லாதது. அதன் பிறப்புக்கள் ஒன்று மாறி ஒன்று தொடரும் என்பது இந்து மத அடிப்படைத் தத்துவம்.

சமூகத்தால் வகுக்கப்பட்ட நல்லவை என்பதற்குப் புறம்பாகச் செயற்பட்டு, நடைமுறைக்கு அமையாத, முரண்பாடான வாழ்க்கை நடைமுறை அவரவரது பாவ கர்மத்தைப் பொறுத்தது என்பதும் அந்தக் கர்ம வினை தொடரும் பிறப்புக்களிலும் ஆத்மாவைத் தொடரும் என்பதும் இந்து மத நம்பிக்கை.

இந்து மதம் காலத்தால் பழமை வாய்ந்தது. அதற்கு மிக முந்தைய காலத்தைக் கணக்கில்கொள்ளாது, கடந்த சில நூற்றாண்டு காலத்தை எடுத்துக்கொண்டால், தமிழ்ச் சமூகத்தின்இருப்பும்இயக்கமும் பெருமளவில் இந்து ஆலயங்களைப் பின்புலமாகக் கொண்டே அமைந்திருந்தன.

ஆலயங்களைப் பின்னணியாகக் கொண்டே தமிழர் தம் கலை, கலாசாரப் பண்பாடுகள் வளர்த்தெடுக்கப்பட்டன, பேணப்பட்டன. மக்களை அரவணைத்து ஆதரவளித்ததும் இதே கோயில்களே.


ஆலயங்கள் இவ்வாறு சமூக நிலைக்களங்களாகத் திகழ்ந்ததனாலேயே மன்னர்களும் செல்வந்தர்களும் ஆலயத்துக்கென சொத்துக்களையும் நிலபுலன்களையும் எழுதி வைத்தார்கள். அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மூலம் ஆலயங்களின் மூலமான சமூக சேவைகள் தடைப்படக்கூடா என்பதே அவர்களின் நோக்கம்.

சமூகத்தின் பொது மேம்பாடுக்கான திட்டமிடல்களும் தீர்மானம் மேற்கொள்ளலும் ஆலயங்களை மையப்படுத்தியே அன்று நடந்தன. அந்தப் பகுதி மக்களுக்கான மைய இணைப்பிடமாகவும் வழிப்படுத்தும் இடமாகவும் ஆலயங்கள் திகழ்ந்தன.

அன்று நிலவிய பொருளாதார நிலை - சிலர் பணக்காரர்களாகவும் பலர் ஏழைகளாகவும் இருந்த நிலைமை - இதற்குப் பெரிதும் உதவியது என்றாலும், ஆலயங்கள் தமிழ்ப் பண்பாட்டு மையங்களாக விளங்கின என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஏற்றத் தாழ்வுகளும் சாதியப் பிளவுகளும் நிறைந்திருந்தாலும் அவர்களை ஒருங்கிணைக்கும் மையமாக ஆலயங்கள் திகழ்ந்தன.

பின்னாளில் ஆலயங்களில் ஏற்பட்ட குளறுபடிகள், ஒடுக்குமுறைகள், பிற்படுத்தல்கள் எல்லாம் சேர்ந்து மக்கள் ஆலயங்களில் இருந்து அன்னியப்பட்டுப் போகும்



நிலைமை ஏற்பட்டது. சமூகத்துக்கு ஒரு கோயில், சாதிக்கொரு ஆலயம் என்றவாறாக எல்லாமும் சிதறிப் போயின.

காலப் போக்கில் ஆலயங்கள் வெறும் சமயச் சடங்குகள் நடக்கும் இடங்களாக மாறிப்போயின. அதிலும் கடைசி 30 ஆண்டுகளில் ஆலயங்களில் பூசை நடந்தால் அதுவே பெரும் புண்ணியம் என்கிற நிலையாகி விட்டது.

இன்றோ எமது ஆலயங்களையும் அவற்றின் புனிதத்தையும் நேர்த்தியான வர்த்தக நிலையங்களை நிர்வகிப்பதுபோன்று கையாள்வதற்கு நாம் பழகிக் கொண்டுள்ளோம்.

[illegible] 'வசந்தம்' ஆலயங்களில் மட்டுமே வீசுகின்றது. அரச நிதி உதவி, வெளிநாடுகளில் இருந்து வரும் எம்மவர்களின் நிதி உதவி என்று பணம் கொட்டுகிறது. ஆலயங்கள் புதுப் பொலிவு பெற்றுள்ளன, கட்டடங்கள் பெருத்துள்ளன. சிறியது முதல் பெரியது வரையான எல்லா ஆலயங்களிலுமே இந்த நிலையைக் காணலாம்.

பல ஆலயங்கள் இன்று கல்யாண மண்டபங்களை அமைத்துக் கொண்டிருக்கின்றன. அவ்வாறே இறைவனுக்கான நகைகளும் பல லட்சங்களில் வழங்கப்படுகின்றன.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, ஆலயங்கள் இந்தப் பணத்தில் ஒரு பகுதியையாவது சமூக நோக்கம் கருதிச் செலவிட்டால் என்ன என்று எண்ணம் எழுகிறது. ஒரு சில ஆலயங்கள் இப்படிச் சேவையைப் பெரும் எடுப்பில் செய்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், ஊர் தோறும் இருக்கும் ஒவ்வொரு ஆலயமுமே இந்த, விடயத்தில் கவனம் செலுத்தினால் என்ன?

பொருளாதார ரீதியிலும் மனோநிலை ரீதியிலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களை அரவணைத்து ஆதரிக்கும் இல்லங்களாக ஒவ்வொரு ஆலயமுமே மாறுவதற்கு என்ன தடை இருக்கிறது? கலை, கலாசார பண்பாட்டை வளர்க்கும் மையங்களாக ஆலயங்கள் மீண்டெழுவதற்கு யார் தடையாக இருக்கிறார்கள்?

''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணுங்கள்'' என்ற முதுமொழியை மெய்ப்பிக்கும் வகையில் நாம் இந்த ஆலயங்களைச் செயற்படுத்த வேண்டும்.

மாறாக, இன்றைய எமது ஆலயப் போக்குகள் தொடர்ந்தால் அவை பெருத்த பக்தி, நிதி நிறுவனங்களாக மட்டுமே மாறிப் போய்விடும்.

ஆலயத்தை வளப்படுத்த வேண்டாம் என்பது எனது கருத்தல்ல, ஒவ்வொரு ஆலயத்தின் வளர்ச்சியும் அந்தச் சமூகத்தின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதாக மாற வேண்டும் என்பதுதான் எனது ஆதங்கம்.

இருக்கிற ஆலயக் கட்டடத்தை மேலும் மேலும் பெருப்பிப்பதாலும் தேரின் எண்ணிக்கையைக் அதிகரித்துச் செல்வதாலும் சமூகத்தில் என்ன முன்னேற்றங்களைக் கண்டுவிடப்போகிறோம்? திருவிழாக்களின் போது 10 கூட்டம் மேளம் பிடிப்பதால் அந்த ஊரில் உள்ளவர்களுக்கு என்ன நன்மை கிடைத்துவிடப் போகிறது?

இத்தகைய போக்குகள் தானே இன்றைய இளைஞர்களை ஆலயங்களை நாட விடாமல் செய்கிறது. பழசுகளின் பழம்பெருமைக்குரிய இடமாகவும், காசு படைத்தவர்களின் கௌரவப் போட்டிக்குரிய இடமாகவும்தானே இளைஞர்கள் இன்று ஆலயங்களை அடையாளப்படுத்துகிறார்கள். பின்னர் எப்படி அவர்கள் ஆலயங்களுக்கு வருவார்கள்?

முன்னுதாரணமாக இருக்க வேண்டிய மூத்தவர்களான நாங்களே இப்படி இருக்கும்போது இளைஞர்களின் போக்குப் பற்றி நாம் எப்படிக் குறைகூற முடியும்? அவர்களுக்கு சமூக அக்கறையே கிடையாது என்று எப்படி அவர்களை நோக்கி விரல் சுட்ட முடியும்? அந்தப் போக்கை அவர்கள் எங்களிடம் இருந்துதானே கற்றுக்கொண்டார்கள்.

திட்டமிட்டு ஈழத் தமிழினத்தின் பொருளாதார மேம்பாட்டை நலிவுற வைக்க முயலும் ஆட்சியாளர்களாலும் எதிர்பாராது வந்து எம்மை ஆட்டிப் படைத்து நலிவுற வைக்கும் இயற்கையாலும் ஒருபோதும் அழித்து விட முடியாது. எம்மிடம் நிலைத்து நிற்கும் அருஞ்சொத்து கல்வி மட்டுமே.

எத்தகைய இடர் வரினும் தமது கல்விச் செல்வத்தை இழந்துவிடாது தொடர்ந்து நிலைநாட்டி வருபவர்கள் எமது இளைஞர்களே! தலையில் குண்டு விழுந்தாலும் இடையில் ரவைகள் பாய்ந்தாலும் படிப்பிலேயே குறியாய் இருந்து இதோ இன்றும் சாதனை படைத்து நிற்கும் அவர்களை அரவணைத்து, பாராட்டி எந்த ஆலயம் ஊக்கப்படுத்தியது?

எங்கோ இருந்து வருபவனும், எதிரியும்கூட இதையெல்லாம் செய்கிறான். ஆனால் ஆலயங்களில் காசைக் கொட்டிச் செலவிடும் எமக்கு மட்டும் அதைச் செய்ய மனமில்லை.

மாணவர்களைத் தட்டிக் கொடுத்து அவர்களைக் கல்வியில் ஊக்குவிக்க வேண்டியது முன்னெப்போதையும்விட இப்போது நாம் அதிகம் செய்ய வேண்டியது.

கடைசியாக ஒன்று, கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழியைக் கொண்ட தமிழ் இனத்துக்கு கோயில்கள் திரும்பவும் என்ன செய்தன என்பதை கவனியுங்கள் என்பதுதான் எனது வேண்டுகோள், வலியுறுத்தல் எல்லாம்.

பசித்தவனுக்கு உணவு கொடுங்கள், உதவி தேவைப்படுபவனுக்கு உதவிகளை வழங்குங்கள், ஆலயங்களை அனுக்கிரகம் கொண்ட இல்லங்கள் ஆக்குங்கள்.

இவ்வாறான நற்காரியங்களைச் செய்யும் இந்து ஆலயங்கள் இங்கு இல்லாமல் இல்லை. ஆனால் அவை சொற்பம். அந்தப் பணிகள் பரவவேண்டும். எல்லா ஆலயங்களும் இத்தகைய பணிகளில் இறங்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றுள்ள போதே தூற்றிக்கொள்வோம்

பொலிஸ், நீதிமன்றம், சிறைச்சாலை போன்ற துயரங்களை வாழ்வில் சந்திக்க நேரவில்லை என்றால் நாம் குற்றவாளிகள் இல்லை என்று நினைத்துக்கொள்ளவேண்டாம். சில சந்தர்ப்பங்களில் நாம் பொலிஸை ஏமாற்றியிருப்போம். நீதிமன்றத்தின் தீர்ப்பை விட நம்மைப் பற்றிய எமது தீர்ப்பு முக்கியமானது. நமது ஒழுக்கம் நமக்குத் தெரியும். தவறுகளை ஒத்துக் கொள்ளாதவன் திருந்தவே முடியாது.

செத்த பிறகு தவறுகளைத் திருத்திக் கொள்ளமுடியாது. அடுத்த பிறவியில் அதற்கான தண்டனைதான் கிடைக்குமே ஒழிய,தவறைத் திருத்திக் கொள்ள வழி கிடையாது. எனவே இந்தப் பிறவியின் தவறை இந்தப் பிறவியிலேயே திருத்துவது அவசியம். சுவாசம் உடம்பில் ஓடிக்கொண்டிருக்கும்போதே தவறுகளைத் திருத்திக்கொள்ளவேண்டும். இது குறித்தே '' காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்'' என்றனர்.

விவசாயிகள் காற்றடிக்கும் போதே நெல் மணிகளை மேலிருந்து கீழே கொட்ட, தூசு தும்பு போன்ற குப்பைகளைக் காற்று அடித்துச் செல்லும். அது வெளிப்பொருள். ' உன் மூச்சுக்காற்று உள்ளபோதே உன் தவறுகளைத் தூற்று' என்பது உட்பொருள். ' பதவியில் இருக்கும் போதே பணம் சேர்க்கக் கற்றுக்கொள்' என்ற கலியுக அர்த்தமல்ல.

இப்படி பல பழமொழிகளைப் பாழாக்கிய பெருமை நமக்குண்டு. 'மோதிரக் கையால் குட்டுப்படு' என்று ஒரு பழமொழி. மோதிரம் போட்ட கையால் குட்டினால் வலிக்காதா? அவமானப்பட்டாலும் பணக்காரன்மூலம் அவமானப்படுவது பெருமையா? அதன் பொருளே வேறு. எளியவரிடம் - வலிமை அற்றவரிடம் வெற்றி பெறுவதைவிட வலிமையானவரிடம் தோற்பது புகழ் தான்.மோதிரக் கை என்றால்மோதிரம் அணிந்த கை என்ற பொருள் தவறு. ' மோதுகிற கை' அதாவது வலிமையான கை .மோதுகிறது பலம் இல்லாத கையோடு மோதாதே என்பது அதன்பொருள்.

இன்னும் பல பழமொழிகள் விபரீதமாகவே ஆகிவிட்டன. சோழியன் குடுமி சும்மா ஆடுமா? என்பர். இது தவறு. தலையில் பாரம் சுமப்பவர்கள் தலையில் துணியை வட்டமாகச் சுற்றி வைப்பார்கள். அது சும்மாடு எனப்படும். அதைத் தலையில் வைத்துப் பாரத்தை மேலே வைத்தால் பாரம் தெரியாது. அந்தச் சும்மாடு இல்லாமல் குடுமியையே சுருட்டி வைத்தாலும் பாரம் உறுத்தவே செய்யும்.அதனால் 'சோழியன் குடுமி சும்மா ஆடுமா'' என்பதுதான் உண்மைப் பழமொழி.

அவசரமாகப் பேசும் சிலர் '' மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே' என்று பழமொழி அறிவுரை சொல்வார்கள். மண் குதிரைக்கப் பதிலாக மண் யானை செய்து ஆற்றில் இறங்கினாலும் ஆபத்து ஆபத்துத்தான். அதன் உண்மை வடிவம் 'மண் குதிரையை ' என்பதல்ல, மண் குதிரை என்பது குவித்து வைப்பது குதிர் எனப்படும்.

நெற்குதிர் உதாரணம். ஆற்றில் சில இடங்களில் மண் குவிந்து மேடு போல இருக்கும். மேடு என்று அதில் கால் வைத்தால் அவ்வளவு தான்.கரைந்து உள்ளே கொண்டு விடும். மரணம் நிச்சயம்.இப்படித்தான் ...'' குறி வைக்கத் தைக்கும் ராமசரம் '' என்பதைக் குருவிக்குத் தக்க ராமேஸ்வரம் என்று சன சமூகம் மாற்றியே விட்டது.

பழமொழிகளைவேம் வேகமா மாற்றும் சனசமூகம், பழைய வாழ்க்கையை மாற்றாமல் விட்டது தான்சோக சரித்திரம். சந்தர்ப்பம் கிடைக்கும்போது தன்னைத் திருத்திக் கொள்ளாமல் விட்டு விட்டு. மறுபடி மறுபடி பிறந்து மேலும் மேலும் பாவங்களைச் செய்து எப்படித்தான் கரையேறுவது. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பது போல், நல்ல மனிதர்கள் ஒரு வார்த்தையில் திருந்தியது உண்டு.

அவர் ஒரு முரடர். அவரைத் திருத்துவதற்காகவே அரண்மனையில் வேலை வாங்கிக்கொடுத்துத் திருமணமும் செய்து வைத்தார் அவர் தந்தை. அரண்மனையில் இருக்கப் பிடிக்காமல் மனைவியைத் தேடி ஓடி வந்தார் அவர். வழியெல்லாம் மழை. கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. மனைவிமீது அவ்வளவு ஆசை.

அவள் தாய் வீடு சென்றிருந்தாள். இருளில் தடுமாறி ஆற்றைக் கடந்து அவள் வீட்டுக்கு அருகிலிருந்த மரத்தில் ஏறி மாடியை அடைந்து கதவைத் தட்டினார் அந்த முரடர். திருடர் என்றே வீட்டில் எல்லோரும் பயந்தனர். விளக்கை நீட்டிப் பார்த்த அவர் மனைவிக்குப் பகீர் என்றது.


''இந்த மழையில் ஆற்றை எப்படிக் கடந்தீர்கள்?'' பதறினாள். '' ஒரு கட்டையைப் பிடித்துக்கொண்டு..'' பதில். விளக்கை நீட்டினாள். அது கட்டையல்ல.... பிணம். '' மாடிக்கு எப்படி வந்தீர்கள்?.'' கேள்வி பாய்ந்தது. ''ஆலமரத்தில் தொங்கிய விழுதைப் பிடித்தபடி.'' பதில் தவழ்ந்தது. '' ஆலமரமா?.. விழுதா...'' பதறியபடி விளக்கை நீட்டினாள். மரத்தில் மலைப்பாம்பு தொங்கியது '' அப்படி என்ன அவசரம்?'' மனைவியின் கேள்வி. '' உன் மேல் எனக்கு அவ்வளவு ஆசை..'' முரடரின் பதில் . '' ஈஸ்வரா! அழிந்து போகும் இந்த உடம்பின் மீது இவ்வளவு ஆசையா? இந்த மூர்க்கத்தனத்தை ராமநாமத்தின் மீது செலுத்தக்கூடாதா?''



ஒரே நேரத்தில் வானத்திலும் அவர் இதயத்திலும் மின்னல் வெட்டியது! துளசிதாஸர் என்ற அமரகவி - ராம பக்தர் ஜனனம். காற்றுள்ள போதே தூற்றிக்கொண்டார்.

சுகி. சிவம்

# கோட்டையில் சமர்கள் பல நடந்தும் அசையாத முனியப்பர்



1658இல் கோட்டையைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் இதனைப் புதுப்பித்து ஐங்கோண வடிவில் அழகுற அமைத்தனர். இது பாதுகாப்பு அரணாகவும் ஆட்சி நிர்வாக நடவடிக்கையின் மையமாகவும் இருந்தமையால் அக்கால மக்கள் இதனை இராச வாசல் என அழைத்தனர்.

இந்த இராவாசலுக்குள் இருந்து அகற்றப்பட்ட ஆலயத்தின் விக்கிரம் மற்றும் பண்டங்கள் அகழி ஓரமாக கோட்டைக்கு வெளியே உள்ள நிலப்பகுதியில் வைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. அந்தப் பகுதிக்குச் சென்றுவரும் மக்கள் அவற்றை நேர்த்தியாக வைத்து வழிபடத் தொடங்கினர். முனியப்பர் என்னும் நாமத்துடன் சிறுகுடில் அமைத்து பொங்கல் படையல் பூசை வழிபாடுகளுடன் பராமரித்து வரலாயினர்.

அரசநிலத்தில் ஆலயம் அமைந்திருந்தமையால் எவரும் உரிமைபாராட்டாது பொதுப் பராமரிப்பில் ஆலயம் வளர்ச்சி பெற்றது. முனியப்பரின் திருநாமமும் வேண்டுதல் சித்திகளும் எங்கும் பரவலாயிற்று. கோட்டை முனியப்பர் என்ற பெயர் கோட்டாலே எல்லோரும் பயபக்தியுடன் மண்டியிட்டு வணங்குவர். பணம் படைத்த செவ்வந்தர் முதல் பாமரர் வரையும் நீதிபதிமார், அரச உத்தியோகத்தர் அனைவரும் தலை வணங்கி அருள்வேண்டி மன்றாடும் ஸ்தலமாக விளங்குகிறது.

> தெய்வபக்தி அற்றவர்களையும், தெய்வ நிந்தனை செய்வோரையும் எச்சரித்துக் கண்டித்து அவர்களுக்கு ஏற்ற வகையில் மெய்யுணர்வு உண்டாக்கி மக்களைத் தம்பால் ஈர்த்து வருகின்றார் முனியப்பர்.

அந்தக் காலத்தில் நகரப்பகுதியில் திருட்டுக்கள் முறைகேடான செயல்களில் ஈடுபடுவோருக்கு பல உருவங்களில்தோன்றி அவற்றை தடுத்து நிறுத்தி குற்றவாளிகளை திருத்திய பல சம்பவங்கள் நடைபெற்றதாக முன்னோர் வாய்மொழியாக அறியமுடிகிறது.

இவ்வாறு திக்கெட்டும் அறியப்பட்ட முனியப்பர் ஆலயத்தை நாடி தினமும் பக்தர்கள் வந்ததன் பொருட்டு நித்திய பூசைகள் ஆலய கட்டுமானங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. 1916ஆம் ஆண்டு முதல் கணபதி கந்தையா என்பவரின் பராமரிப்பில் பூசைகள், திருப்பணிகள் இடம்பெற்றதாக ஆதன உறுதிகளில் இருந்து அறிய முடிகிறது. அரச நிலத்தில் அமைந்திருந்தமையால் அரச நிர்வாகிகளால் இந்த நியமனம் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

1931ஆம் ஆண்டு அவ்விடத்தில் ஆலயத்தை வைத்திருக்கவும் புனருத்தாரணம் செய்யவும் குத்தகை அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது. க.கந்தையா விடாமுயற்சியும் பல செல்வந்தர்கள், அடியார்களின் பேருதவியால் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சி பெறலாயிற்று. மெய்யடியார்களின் முனீஸ்வரன் மேல் கொண்ட நம்பிக்கையும், அவரது அற்புதங்கள் பிணக்குகளை தீர்க்கும் வல்லமை இலங்கை முழுவதும் பரவியது. யாழ்ப்பாணம் வருவோர் முனியப்பர் ஆலயத்தைத் தரிசித்துச் செல்லும் வழமை தோன்றியது. 1979 ஆம் ஆண்டு தத்துவ உறுதிச் சாசனத்தின் வழியாக அரசால் இந்தப் பகுதி கோயிலுக்குச் சொந்தமானது என எழுதிக் கொடுக்கப்பட்டது.முனியப்பர் ஒரு நீதிபதியாகவும் செயலாற்றுகிறார் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஏனெனில் இந்த ஆலயத்துக்கு அண்மையில் அமைந்துள்ள யாழ் நீதிமன்றத்துக்கு வரும் சிறுபிணக்குகள், குடும்பத் தகராறுகள், திருட்டுக்கள் என்பன நீதிபதியின் அனுமதியுடன் ஆலயத்தின் முன்னால் சத்தியம் செய்து தீர்த்துவைக்கும் முறை பலகாலமாக நடைபெற்று வந்துள்ளது.

அத்துடன் காணாமற் போன பொருள்கள் மற்றும் சூழ்ச்சி, மறைவான திட்டங்களை வெளிப்படுத்தித் தருமாறு நேர்த்திக்கடன் வைத்து முனியப்பர் கோயிலின் சுவருக்கு வெள்ளையடித்தால் அனைத்தும் வெளியாகும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் நிலவியது. இவ்வாறு பல வரங்களைப் பெற்றவர்களின் பேராதரவுடன் பெருங்கோயிலாக விளங்குவதுடன் 25 தினங்கள் அலங்கார உற்சவத் திருவிழாவையும் கொண்டாடி வருகின்றது.

கோட்டை முனியப்பர் சுவாமிகள் வீரபத்திர முகூர்த்தமும், சிவ முகூர்த்தமும் அமையப் பெற்றவர். தல விருட்சமாக அரச மரம் விளங்குகிறது. இத்தல விருட்சம் 70 ஆண்டுகள் பழைமை மிக்கது.

ஆரம்பப் பூசகரும் பரிபாலகருமான கணபதி கந்தையாவைத் தொடர்ந்து கந்தையா இராசசிங்கம் அவரது மருமகனான ம.ஞானசேகரம் ஆகியோர் 3 தலைமுறையாக ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்றனர். பரிபாலகரைத் தலைவராகக் கொண்ட 15 உறுப்பினர்கள் அடங்கிய நிர்வாக சபையால் ஆலயம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

இராஜகோபுரப்பணிகள் 1974 இல் இடம்பெற்றன. முகப்பு மண்டபமும், அன்னதான மண்டபமும் 2006 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் அரச உதவியுடன் அமைக்கப்பட்டது. கோட்டைச் சூழலில் பலமுறை பெரும் சமர், குண்டு வீச்சுக்கள் இடம்பெற்ற போதும் முனியப்பர் ஆலயம் பெரும் சேதத்துக்கு உட்படாது காப்பாற்றப்பட்டமை முனீஸ்வரனின் அற்புதச் செயல்களின் வெளிப்பாடாகும்.

தினசரி 3காலப் பூசைகளுடன் வருடப்பிறப்பு, சித்திராப் பௌர்ணமி, மாசிமகம், ஆவணி ஓணம், நவராத்திரி, பொங்கல் போன்ற தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெற்று வருகின்றது.

வருடாந்த அலங்கார உற்சவம் ஆனிமாத புனர்பூசத்தை முதல் நாளாகக் கொண்டு 25 தினங்கள் நடைபெற்று ரதபவனியுடன் நிறைவு பெறும்.

''முன்னவனே கோட்டை முனியப்பர் யாழ் நகரில் மன்னும் பரனே மகாதேவா பொன்னும் பதமும் கலையாகவும் பாலிப்பாய் என்றன்

யேசுதாஸ்

இதயம் தனிலே இருந்து'' - என்று பணிந்து போற்றி அடியார்கள் அருள் பெற்றுய்வர்.

ஆலயத்துக்கு உறுதுணையாக 2ஆம் குறுக்குத் தெருவில் இயங்கிவரும் அறநெறிப் பாடசாலையில் 25மாணவர்கள் அறநெறி பயின்று வருகின்றனர். இவர்கள் ஆலய நிகழ்வுகளில் பங்குபற்றுவதுடன் சித்திரம், பொது அறிவு, சமயப் போட்டிகளிலும் பங்குபற்றி வருகின்றனர்.

தெய்வபக்தி அற்றவர்களையும், தெய்வ நிந்தனை செய்வோரையும் எச்சரித்துக் கண்டித்து அவர்களுக்கு ஏற்ற வகையில் மெய்யுணர்வு உண்டாக்கி மக்களைத் தம்பால் ஈர்த்து வருகின்றார். சக்திமிக்க யாழ் முனீஸ்வரர் தம்மை வேண்டி வணங்குகின்ற மெய்யடியார்களின் வினைகள், விக்கினங்களை அழித்து சிறப்பாக வாழவைக்கிறார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவசக் கல்வி முறைமையை இல்லாதொழிக்க அரசு முயற்சி



தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதனை அரசு பிரதான இலக்காகக் கொண்டுள்ளது என்று ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டுகிறார்.

கொழும்பு,ஜன.20

நாட்டின் இலவசக் கல்வி முறைமையை இல்லாதொழிக்க அரசு முயற்சித்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

பல்கலைக்கழகங்கள் மட்டுமன்றி இலவசக் கல்வி முறைமையையும் அரசு உதாசீனம் செய்து வருகின்றது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதனை அரசு பிரதான இலக்காகக் கொண்டுள்ளது. எனவே, பல்கலைக்கழகங்களில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு அரசு தீர்வுத் திட்டங்களை முன்வைக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

பௌதிக வளப்பற்றாக் குறை, மாணவர்களுக்கான வசதிகள், விரிவுரையாளர்களின் சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட சகல காரணிகளையும் அரசும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

துறைமுகங்கள், மின்சார உற்பத்தி நிலையங்கள், வீதிகள், பெருந்தெருக்களை அமைக்க முடியுமாயின் பல்கலைக்கழகங்களை ஏன் அபிவிருத்தி செய்ய முடியாது என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ச)

## வைத்தியபீடத்தைத் திறக்க ஜனாதிபதி "தலையீடு" அவசியம்

### மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.20

காலவரையறையின்றி மூடப்பட்டுள்ள ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்தை மீண்டும் திறக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலையிட வேண்டும் என்று ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் வைத்திய பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வைத்திய பீடம் மூடப்பட்டுள்ளதால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அந்த ஒன்றியத்தின் செயற்குழு உறுப்பினர் சம்பத் குமார தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் பிரச்சினையை தீர்க்கும் நோக்கில் பேச்சு நடத்த சந்தர்ப்பம் கோரப்பட்டபோதும் பல்கலைக்கழக உபவேந்தர் அதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் இப்பிரச்சினைக்கு ஜனாதிபதி தலையிட வேண்டும் என எதிர்பார்ப்பதாக அவர் கூறியுள்ளார்.

ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்திலுள்ள 1,063 மாணவர்களின் எதிர்காலம் தற்போது கேள்விக்குறியாகியுள்ளதென மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ச)

## தொழிற்சங்க நடவடிக்கையில் அரச வைத்தியர்கள்

கொழும்பு,ஜன.20

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணிபுரியும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அனைத்து வைத்தியர்களும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணிவரை 24 மணிநேர தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளனர்.

இலங்கை வைத்திய சபைக்கான புதிய நியமனங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் சந்திம எப்பிடகடுவ தெரிவித்தார். (ச)

## இராணுவம் அமைக்கும் தனியான அரச நிறுவனம்

தனியான ஒரு நிறுவனமொன்றை அமைத்து இந்தப் பணிகளை மேற்கொள்ளுமாறு இராணுவத்துக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு,ஜன.20

நாட்டின் அபிவிருத்தி மற்றும் கட்டுமானப் பணிகளில் பங்கேற்கும்நோக்கில் இராணுவம் தனியான நிறுவனம் ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது என்று இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசின் விலை மனுக்கோரல் விதிமுறைகளைப் பின்பற்றக்கூடிய வகையில் இந்த நிறுவனம் இயங்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனியான ஒரு நிறுவனமொன்றை அமைத்து இந்தப் பணிகளை மேற்கொள்ளுமாறு இராணுவத்துக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியதாக அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறான ஒரு நிறுவனத்தை அமைப்பது குறித்து திட்டங்களை முன்வைக்கும்நோக்கில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இராணுவத்திற்குள் இது ஒரு தனி அலகாக அல்லது தனி நிறுவனமாக இயங்கக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு இராணுவத்தினர் அளித்த பங்களிப்பின் மூலம் சுமார் 300 மில்லியன் ரூபாவை அரசுக்குச் சேமித்து கொடுத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வீதி அமைப்பு, கட்டட நிர்மாணம் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் இராணுவத்தினர் பங்களிப்பு வழங்கி வருவதாக அவர் தெரிவித்தார். (ச)



அம்பாறை மாவட்டத்தின் சவளக்கடை பொலிஸ் அணி வகுப்பு மரியாதை நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இந்தநிகழ்வில் அம்பாறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரேமலால் ரணகல கலந்துகொண்டு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கின்றார்.

## ஆஸி. எருதுகள் கொழும்புக்கு

கொழும்பு, ஜன.20

நாட்டை பால் உற்பத்தியில் தன்னிறைவு அடையச்செய்யும் நோக்குடன் ஆஸ்திரேலியாவிலிருந்து சுமார் மூன்றுகோடி ரூபா செலவில் இறக்குமதி செய்யப்பட்ட ஜோர்சி இனத்தைச் சேர்ந்த 10 எருதுகள் அண்மையில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கின.

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் ஆலோசனைப்படி இறக்குமதி செய்யப்பட்ட இந்த எருதுகள் மூலம் இலங்கையில் ஜோர்சி இனக் கால்நடைகளைப் பெருக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய ஜோர்சி இன கால்நடைகள் இலங்கையின் கால நிலைக்கு மிகவும் பொருத்தமானதாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.(ச)

## மாணவர் மீதான அடக்குமுறைக்கு கண்டனம்

இந்த நாட்டின் எதிர்காலம் மாணவர் சமூதாயத்திடமே தங்கியுள்ளது என்கிறார் சரத் பொன்சேகா.

கொழும்பு,ஜன.20

பல்கலைக்கழக மாணவர்கள் மீது பிரயோகிக்கப்படும் அடக்குமுறைகள் கண்டிக்கப்பட வேண்டியவை என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகளில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்த போது இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டின் எதிர்காலம் மாணவர் சமுதாயத்திடமே தங்கியுள்ளது என்று அவர் தெரிவித்தார். பல்கலைக்கழக மாணவர்கள் மீது இராணுவத்தினரோ, பொலிஸாரோ தாக்குதல் நடத்தக் கூடாது என்று அவர் தெரிவித்தார். (ச)

## ஜனவரி 25 'கறுப்பு ஜனவரி'யாகப் பிரகடனம்




கொழும்பு, ஜன.20

ஊடக அடக்கு முறைகளுக்கு எதிராக போராட்டம் ஒன்றை ஒழுங்குசெய்து குரல் கொடுக்கும் நோக்கில் ஊடகங்களின் சம்மேளனமானது எதிர்வரும் 25ஆம் திகதியை ''கறுப்பு ஜனவரி''யாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இதுவரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், கடத்தல்கள், கொலைகள் என்பனவற்றுக்கு இதுவரையில் அரசினால் எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையிலேயே இந்தப் பிரகடனத்தை மேற்கொண்டதாக சுனின் ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

லசந்த விக்கிரமசிங்கவின் கொலை, பிரகீத் எக்னாலிகொடவின் கடத்தல், சிரச ஊடகம் மீதான தாக்குதல் போன்றவை ஜனவரி மாதத்திலேயே இடம்பெற்றன. இதன்காரணமாகவே எதிர்வரும் 25 ஆம் திகதியை 'கறுப்பு ஜனவரி'யாக பிரகடனப் படுத்தியதாக அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக பிற்பகல் 2.30 மணிக்கு அனைத்து ஊடகங்களும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளும் என்று அவர் தெரிவித்தார். (ச)

## கல்கிசை விபத்துக் குறித்து விசாரணை அறிக்கையை கோருகிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஜன.20

கல்கிசைப் பகுதியில் நேற்றுமுன்தினம் தனியார் பஸ் ஒன்றுடன் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வான்மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் போது அவர்களது பாதுகாப்பு குறித்து கூடிய கவனம் செலுத்துமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கல்கிசையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் 9 மாணவர்கள் காயமடைந்தனர்.

இவ்வாறு காயமடைந்தவர்களில் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவிலும், நான்கு மாணவர்கள் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சைப் பிரிவிலும் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமி அந்தாதி நூலைப் பெறலாம்

சுழிபுரம், ஜன.20

அபிராமி அந்தாதி நூலைப் பஜனைச் சபையினர் இலவசமாக அனைவருக்கும் வழங்கி வருகின்றனர். நூலைத் தபாலில் பெற விரும்புவோர் செயலாளர், 'பஜ னைச் சபை, சுழிபுரம்' என்னும் முகவரிக்கு பதினைந்து ரூபா பெறுமதியான தபால் முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

வருடந்தோறும் அபிராமியந்தாதிப் பாடல் அச்சிட்டு வழங்கும் தொண்டை மேற்படி பஜனை சபையினர் தவறாது மேற்கொண்டு வருகின்றனர். (வ-28)

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம், ஜன.20

சுழிபுரம் மேற்கு துர்க்கை அம்பாள் ஆலய அலங்காரத் திரு விழா, கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின் றது. தினமும் அபிடேக ஆராதனை கள் நடைபெற்று சுவாமி வீதியுலா இடம் பெறுகின்றது. எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் சங்காபி ஷேகம் நடைபெற்றுத் திருவிழா நிறைவு பெறும். (வ-28)

* * *

அபிராமிப்பட்டர் தினம் தை அமாவாசை தினமான நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை நடை பெற வுள்ளது. வழக்கம்பரை முத்து மாரி அம்பாள் ஆலயம், சுழிபுரம் பத்திர காளி அம்பாள் ஆலயம், சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலயம் ஆகிய வற்றில் பிற்பகல் 4மணிமுதல் அபி ஷேக பூசைகள் நடைபெற்று அபிராமியந்தாதி நூறு பாடல் களும் ஓதப்பட்டு அம்பாள் வீதியுலா வரும் நிகழ்வு இடம் பெறும். (வ-28)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 13 ★ 03 ★ 1965



உதிர்வு 21 ★ 12 ★ 2011

### அமரர் சண்முகநாதன் மனோரஞ்சன்

கடந்த 21.12.2011 அன்று ஜேர்மனியில் சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி, தந்தி மூலம் அனு தாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (20.01.2012) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையி லும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
தாவடி.

(சி/7879 (45-7-6)

குடும்பத்தினர்.

## கடை விற்பனைக்கு

யாழ். மணிக்கூட்டு கோபுரம் வீதி, விக்டோரியா வீதிச் சந்திக்கு எதிராக புதிதாக கட்டப்பட்டுள்ள கடை 15'x 60'(900 Sq) விற்பனைக்குண்டு. மேல் மாடி கட்டக் கூடிய அனுமதியும் உண்டு

தொடர்பு: 0770 575454 - 077 7749174

(சி/7937) (6-7-45)

## வேலைக்கு ஆள்கள் தேவை

விற்பனைப் பிரதிநிதி
(Sales Rep - DSI) சிட்டை எழுதுநர்,
சேல்ஸ்மன்
சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
270, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:021 222 2403

## தவறிவிட்டது


கைதடி மத்தி வளர்மதி வீதியைச் சேர்ந்த கட்டையன் தயாளன் என்பவருடைய தேசிய அடை யாள அட்டை (681320059V), வாகன சாரதி அனு மதிப்பத்திரம், தொழில் அடையாள அட்டை உட்பட ஆவணங்கள் சிலவற்றுடன் கூடிய பேர்ஸ் ஒன்று ஒருதொகைப் பணத்துடன் நேற்று பிற்பகல் 2 மணி யளவில் செம்மணி வீதியிலிருந்து கச்சேரி நல்லூர் ஊடாக ஆஸ்பத்திரி வீதியால் யாழ்நகர் வரும் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்: தகுந்த சன்மானம் வழங்கப்படும்

தொ.பேசி: 077 6155443

க. தயாளன்
வளர்மதி சாலை, கைதடி மத்தி,
கைதடி.

(13276) (6-745)

## ஓராண்டு நினைவலைகள்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் கனகசபை கார்த்திகேசு

மலர்வு 20.12.1930

உதிர்வு 31.01.2011

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எமது குடும்பத் தலைவரின் துயரில் பங்குகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றியைக் கூறுகின்றோம். அத்தோடு நாளை (21.01.2012) சனிக்கிழமை அன்னா ரின் நாவற்குழி இல்லத்தில் நடை பெறும் ஆண்டுத் திதி ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்குகொண்டு மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு பாசத்துடன் அழைக்கின்றோம்.

"ஓயாத விம்மலுக்குள் ஓராண்டு சென்றதே ஐயா!"

பாராண்ட மன்னவன் நீ எங்கள்
பஞ்சமுக நெஞ்சினிலே
சீர் கொண்ட சிந்தையால் எம்மை
சிறப்புறவே வாழ வைத்து
பார் கொண்ட யாக்கை துறந்து
பேர்கொண்ட காசிநாதன் காலடியைப் பற்றினீரோ
வாழ்வில் வாழ்வெடுத்து வாரீரோ ஐயா
வாழ்வாங்கு வாழ்வதற்கு வாடுகின்றோம்

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

- மனைவி, பிள்ளைகள்.
சிவகுமாரன் (சிவா- மகன்)
0774562379
நாவற்குழி மேற்கு,
கைதடி.

## தேவை

### தொழில் மேற்பார்வையாளர்

முன் அனுபவம் வாய்ந்த 45 - 55 வயதுக் குட்பட்ட தொழில் மேற்பார்வையாளர் (Work Supervisor) தேவை. கட்டட வேலைகள் தொடர்பான அனுபவம் விரும்பத்தக்கது. 31.01.2012 ஆம் திகதிக்கு முன்னர் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பம், இரு நற்சான்றிதழ்களுடன் எமது கல்லூரி அலு வலகத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

அதிபர்,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/7878) (2-6-7)

## நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை யாழ்ப்பாணம் பிரதேச காரியாலயம் வடக்கின் துரித எழுச்சி திட்டம் - ENREP)

### பதவி விண்ணப்பம்
### பொறியியல் உதவியாளர் பதவி (சிவில்)

வடமாகாணத்தில் உள்ள முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ். மாவட் டங்களில் வடக்கின் துரித மீள் எழுச்சி திட்டத்தின் கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நீர் வழங்கல் திட்டத்திற்கான பொறியியல் உதவியாளர் பதவிக்குரிய (சிவில்) விண்ணப்பங்கள் கீழ்வரும் தகைமையுடைய வர்களிடம் இருந்து கோரப்படு கின்றன.

1. இலங்கை பிரஜையாயிருத்தல் வேண்டும்
2. NDT/HNDE (Civil) NDES of NAB/ தொழில்நுட்பவியலாளர் டிப்ளோமா - இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அல்லது அதற்கு சமமான வேறு தகைமைகள்.

   அல்லது

   NCT பரீட்சைகள் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ் என முன்பு அறியப்பட்ட (Certificate in Technology) தகை மையுடன் தொழில் நுட்பவியலாளராக ஐந்து வருட முன் அனுப வம் (உரிய பிரிவில் அரச, கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப் பட்ட தனியார் ஸ்தாபனத்தில்)
3. விண்ணப்பதாரிகள் நேர்முறை தெரிவின் மூலம் தெரிவு செய்யப் படுவர்.
4. நியமனங்கள் ஒப்பந்த அடிப்படையில் 09 மாதங்களுக்கு வழங்கப் படும் மற்றும் திருப்திகரமான நடவடிக்கையின் அடிப்படையில் மீள் நியமனம் செய்யப்படுவர்.
5. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்

விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிவரக்கோவையுடன் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை 27.01.2012 ஆம் திகதிக்கு முன்னராக அனுப்பி வைக்கலாம்.

திட்ட முகாமையாளர்,
வடக்கின் துரித எழுச்சி திட்டம்,
நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை,
யாழ்ப்பாணம்.

(சி/7874) (45-7-9)

## பவிசாரு பூங்கனிச் சோலை

**PaveeSharu Poongani Solai**

311/1, பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம். பதிவு இலக்கம்: SA/JFA/02677

தொ.இல.
021 222 8199
071 847 5629
077 397 6203.

விதைச் சட்டத்துக்கு அமைவாக பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஆகும்.

பழ மரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 kgகொய்யா | ரெட்லேடி பப்பாசி | மாதுளை | ஒட்டுப்பலா |
| ஒட்டு மா | ஒட்டுத்தேசி | ஒட்டுகயூ | கஜு* |
| விலும்பிலி | ரம்புட்டான் | தேசி | ஒட்டுநெல்லி |
| ஒட்டுத்தோடை | (விபிலிய சுவிட்) | | |

அலங்காரத்தாவரங்கள்

| | | | |
|---|---|---|---|
| செவ்வரத்தை | குறோட்டன் | பாம் வகைகள் | |
| றோஸ் | பாரிஜாதம் | ஐந்தூரியம் | |
| சைபிரஸ் | அலகேரியா | நித்தியகல்யாணி | |
| நந்தியாவட்டை | சைபிரஸ் | இந்தியன் மடு | மல்லிகை |

மூலிகைகள்

| | | |
|---|---|---|
| இந்தியன் புதினா | கற்பூரவள்ளி | கருவேப்பிலை |
| கோப்பி | மிளகு | கராம்பு |
| கறுவா | ஜாதிக்கா | வெற்றிலை |
| துளசி | கொறுக்காப்புளி | கொக்கோ |

பயன்தரு மரங்கள்

| | | |
|---|---|---|
| ஈரப்பலா | கமுகு | தென்னை |
| செவ்விளனி | தேக்கு | மகோகனி |
| சந்திரவேம்பு | ஜம்பு | சமண்டலை |

*மற்றும் பல மரக்கறி நாற்றுக்களும், சகலவிதமான இயற்கை உரம், காய்கறி விதைகளும், பிளாஸ்ரிக், சிமெந்து சாடிகளும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தங்கள் ஆதரவால் உயர்ந்து நிற்கும் எமது நிறுவனம் வாடிக்கையாளர்களின் பேராதரவை நாடி நிற்கின்றோம்.*

இம்முறை எமது நிறுவனத்தின் புதிய அறிமுகமாக கலன்டிஸ் வாழை, அன்னாசி, பேப்பின் ஆக் ஐந்தூரியம் என்பன விற்பனைக்கு வருகின்றன. எமது நிறுவனத்தில் ஓடர்களை பதிவு செய்தவர்கள் அன்றைய தினம் கன்றுகளை விசேடமாக அமைக்கப்பட்ட எமது காட்சிக் கூடத்தில் இல.209 இல் பெற்றுக் கொள்ளலாம். மற்றையவர்களும் தங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்.

கலன்டிஸ் இலைவாழை: உயரம் குறைவானது, நோய்த்தாக்கம் அற்றது. கூடிய வருமானம். ஒரே நேரத்தில் அறுவடை.

(சி/7875) (2-10-7-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் ஓரளவு மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும். ஏனைய மூன்று மாவட்டங்களிலும் தெளிவான வானமாக இருக்கும்.

# நல்லூர் பிரதேசத்தில் இன்று டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், ஜன.20

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட வீடுகள் மற்றும் பொது இடங்களில் டெங்கு ஒழிப்பு பணிகள் இன்று நல்லூர் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படவுள்ளன என பிரதேச சபைத் தலைவர் க.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சுகாதாரப் பரிசோதகரின் வழிகாட்டலின் கீழ் நல்லூர் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட உள்ளனர். இதன் போது உத்தியோகத்தர்களும் சுகாதாரப் பரிசோதகர்களும் இணைந்து ஒவ்வொரு வீடாகச் சென்று மக்களுக்கு விழிப்புணர்வுக் டெங்கு நோய்க்குரிய அறிகுறிகள், அதன் விளைவுகள் பற்றி கருத்தரங்குகள் மூலம், விளக்கவுள்ளனர்.

அத்துடன் வீடுகளில் தேங்கியிருக்கும் குப்பை கூழங்களையும் அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்காக மேலதிக வாகனங்கள் ஒழுங்குசெய்யப்பட்டு தேங்கிக் கிடக்கும் குப்பைகள் அகற்றப்படவுள்ளன.

எனவே மக்கள் தேவையற்ற குப்பைகள், பிளாஸ்ரிக் பொருள்கள் என்பவற்றை அப்புறப்படுத்தி உதவ வேண்டும். இதற்கு மக்கள் முழுமையான பங்களிப்பை வழங்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ந-311)

## அமைதிக்கு வழி!

ஞானியை சந்தித்த பக்தன் ஒருவன் " சுவாமி! மனம் சாந்தமடைய என்ன செய்ய வேண்டும்? " என்றுகேட்டான்.

" கட்டுஅவிழ்த்து விடப்பட்ட யானை, மரங்களையும், செடிகளையும் வேரோடு பிடுங்கிப் போடுகிறது. ஆனால் பாகன் அங்குசத்தால் அதன் தலையில் குத்தியதும் சாந்தமாகி விடுகின்றது. அதைப்போல அடக்கி ஆளப்படாத மனம் வீண் எண்ணங்களில் அலைபாய்கிறது. விவேகம் என்ற அங்குசத்தால் அதைக் கட்டுப்படுத்தினால் அது அமைதியாகிவிடும்" என்றார் ஞானி.




# வழக்கம்பரை அம்பாளுக்கு அமைக்கப்படும் புதிய தேர்

சுழிபுரம், ஜன.19

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபையினர் ஆனி மாதம் நடைபெறும் மகோற்சவ தேர்த் திருவிழாவை புதிய தேர், புதியதேர் தரிப்பிட மண்டபம், புதிய தேர் முட்டி மண்டபம் ஆகியவற்றை நிறைவாக்கி நடத்தவுள்ளனர்.

புதிய தேர் பொதுமக்கள் அன்பளிப்போடும் தேர் தரிப்பிட மண்டபம் தனியொருவர் உபயமாகவும் தேர் முட்டி மண்டபம் தேரடியில் மடைபோடுவர்கள் உபயமாகவும் நிறைவு செய்யவுள்ளனர். வேலைகள் யாவும் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின் றன. இவற்றை நிறைவுசெய்ய மொத்தமாக ஒருகோடி 50 லட்சம் ரூபா தேவையென திட்டமிட்டுள்ளனர். வெளிநாட்டு அடியவர்களாலும் நிதி திரட்டப்பட்டு சபைக்கு அனுப்பப்படுகின்றது.

திட்டமிட்டபடி சபையினரின் நிதி சேகரிப்பு இந்த மாதம் முதல் நடைபெற்று வருகின்றது. புதிய தேர் மேற்பக்கத் துணிகள் கட்டுவதற்கான தேர் சேலைகள், வாகை மாலைகள் இந்தியாவில் இருந்து எடுத்துவருவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. (ந-28)

## போக்குவரத்தில் தற்காலிக மாற்றம்

தென்மராட்சி, ஜன.20

சாவகச்சேரி நவீன சந்தை முன்பாக அமைக்கப்பட்டு வரும் மதகு வேலை காரணமாகப் போக்குவரத்தில் தற்காலிக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஏ-9 வீதி சாவகச்சேரி நகர்ப் பகுதியில் ஒரு வழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அறிவித் துள்ளனர்.

கொடிகாமத்திலிருந்து வரும் வாகனங்கள் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் தனங்கிளப்பு வீதி சந்தையின் பின்பக்கத்தினூடாகச் செல்ல தனங்கிளப்பு வீதியை ஒரு வழிப் பாதையாக அறிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் கனரக வாகனங்கள் மீசாலை, புத்தூர்ச் சந்தி, வேம்பிராய்ச் சந்தி, கனகன் புளியடிச் சந்தி, நுணாவில் சந்தி ஊடாக யாழ்ப்பாணம் செல்லலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-207)

## பார்வையாளர் அரங்கு திறப்பு விழா

அரியாலை சன சமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள பார்வையாளர் அரங்கத் திறப்பு விழா நிகழ்வு நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது.

கனடாவில்வசிக்கும்க.கனகலிங்கம் என்பவர் அவரது தந்தையார் கோவிந்த பிள்ளை கந்தையாவின் ஞாபகார்த்தமாக பார்வை யாளர்அரங்கை அன்பளிப் புச் செய்துள்ளார். 22 ஆம்திகதி பி.ப.3 மணிக்கு இடம்பெறும் திறப்பு விழாவைத் தொடர்ந்து கோவிந்த பிள்ளை கந்தையாவின் ஞாபகார்த்தமாக இடம் பெற்றகிரிக்கெற் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பும் இடம் பெறும். (ந-135)

## பொங்கல் விழா

வேலணையில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற பொங்கல் திருவிழாவில் 100 பேருக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளனர். முன்னாள் வேலணைப் பிரதேசசபைத் தலைவர் நா.கருணாகரமூர்த்தி தலைமை தாங்கிய இந்த நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்கள் அதிகாரிகள் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந)

## நான்காவது ஆண்டு நினைவலைகள்



அமரர்
அந்தோனிப் பர்னாந்து செபமாலைமுத்து
(பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்)

உதயம்
23★06★1949


மறைவு
20★01★2008

*பப்பா!*
*நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்*
*உங்கள் பசுமையான நினைவுகளில்*
*பாரமான உள்ளத்தோடு நாங்கள்*

இல. 15/1, புது வீதி, கொய்யாத்தோட்டம்.
என்றும் உங்கள் நினைவுகளில் குடும்பத்தினர்

## ஓராண்டு நினைவலைகள்

மண்ணில் 09 ★ 12 ★ 1969
விண்ணில் 31 ★ 01 ★ 2011



அமரர் சண்முகலிங்கம் அரவிந்தன்
திதி: 20.01.2012

அல்லாரையில் பிறந்த – அரவிந்தா
பல்லாண்டு காலம் லண்டனில் வாழ்ந்து
சொல்லாமல் கொள்ளாமல் எங்கு சென்றாய்?
ஓராண்டு சென்றாலும் வற்றாது நம் விழிகள்
ஓம் சாந்தி! சாந்தி!சாந்தி!

அப்பா, அம்மா,
சகோதரர்கள், மனைவி,
மக்கள், மாமி, மைத்துனி
குடும்பத்தினர்.

அல்லாரை வடக்கு,
மீசாலை.
(13050(45-7-6)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 02.12.1977 இல் பிறந்த 7 இல் செவ்வாயுடைய M A பட்டதாரி 70 பாவமுடைய தனியார் துறையில் வேலைசெய்யும் மணமகனுக்கு படித்த மணமகளைத் தேடுகின்றோம்.
தொடர்பு: 077 1171053
(13231)(5-9-45)

## ஒத்து மாறல்

யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஆசிரியர், வவுனியா சித்திர பாட ஆசிரியருடன் ஒத்து மாற விரும்புகிறார்.
தொடர்பு: 077 7174511, 021 321 6731
(13048)(6-45)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணத்தில் இருந்து தெல்லிப்பழை மினிபஸ்சில் பிரயாணம் செய்யும்போது சங்கிலி ஒன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொ.பேசி. 021 3211130, 021 3206861
(13231)(6-9-45)

## வீடு விற்பனைக்கு

யாழ் நகரில், பலாலிவீதி 1/13, 2ஆம் ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 8767947
(13182)(6-45)

## வீடு வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி, ஆடியபாதம் வீதி அருகில் No. 6,பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள வீடு உடன் வாடகைக்கு உண்டு
தொடர்பு: 077 3286295
(13275)(6-7-45)

## வீடு விற்பனைக்கு

குருசோ வீதியில் மேல்மாடி வீடும், 5ஆம் குறுக்குத் தெருவில் 2 அறைகள் கொண்ட வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 021 222 8363, 072 9816327
(13233)(6-9-45)

## கடைவாடகைக்குவிடப்படும்

இல. 615 பரந்தன் வீதி தருமபுரம், தருமபுரம் மகா வித்தியாலயத்திற்கு அருகில் 16 x 32 அடியில் 2 கடைகளும் 11 x 32 அடியில் ஒரு கடையும் கொண்ட கடைத் தொகுதி வாடகைக்கு விடப்படும். அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு முன்னுரிமை
தொடர்புகளுக்கு: 077 0579536
(13099(45-9-6)

## திருமண சேவை

- 82 இல் பிறந்த 2 இல் செவ்வாய் உடைய 11½ பாவமுடைய முகாமைத்துவ உதவியாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
- 81 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 6½ பாவமுடைய அரச சேவையாக பணிபுரியும் மணமகனுக்கு அரச பணிபுரியும் மணமகள் தேவை.
- 82 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 8 ¾ பாவமுடைய B. Sc சேவயர் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 80 இல் பிறந்த செய்வாய் 12 இல், 30 பாவமுடைய MBBS டாக்ரருக்கு டாக்ரர் மணமகள் தேவை.
- 81 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 33¼ பாவமுடைய B. Sc, M.Sc செய்து கொண்டிருக்கும் அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு அரச பணிபுரியும் மணமகள் தேவை.
- 82 இல் பிறந்த 8 இல் செவ்வாய் உடைய 24½ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு அழகான மணமகள் தேவை.
- 89 இல் பிறந்த கதலிக் வேதமுடைய (R.C) அவுஸ்திரேலியாவில் பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு அந்நாட்டிலோ, ஊரிலோ R.C வேதமுடைய மணமகன் தேவை.

தொடர்பு:
கமலக்கண்ணன் திருமணசேவை
மனோன்மணி அம்மன்கோவிலடி,
நல்லூரில் இயங்கிய திருமண சேவை
இல.320, கோயில் வீதி,
நல்லூர் எனும் முகவரியில் இயங்கிவருகின்றது.
T.P 077 6070862
(13234)(45-6-7)

## கீரமலை நகுலேஸ்வரர் ஆலய திருவிழாக்கால கடைகளிற்கான இடத்தினை ஏலத்தில் வழங்கல்

*கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் 29.01.2012 ஆம் திகதி தொடக்கம் 22.02.2012 ஆம் திகதிவரை மகாகும்பா பிஷேகம், அலங்கார உற்சவம், சிவராத்திரி பூசை என்பன நடைபெற இருப்பதனால் திருவிழாக்கால கடைகளிற்கான இடத் தினை ஏலத்தில் விடுவதற்கு எமது சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது கடைகளிற்கான நிலத்தினை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் 26.01.2012 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றலில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள் கின்றேன்.*

சோமசுந்தரன் சுகிர்தன்
தவிசாளர்
வலி. வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (மல்லாகம்)

## ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம், கொக்குவில் கணக்காய்வு

*மேற்படி ஆலயத்தின் 2011 ஆம் நிதியாண்டின் (01.01.2011 தொடக்கம் 31.12.2011 வரையிலான) வரவு - செலவு கணக்கினைப் பரிசோதிப்பதற்கு, பதிவு செய்யப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களிடமிருந்து 26.01.2012 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.*
மேலதிக விவரங்களை ஆலயப் பணிமனையில் ஆலயம் திறந்திருக்கும் நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில்.
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** ஒய்வாக உட்காரக் கூட நேரமில்லாமல் கடுமையாகப் பணியாற்றலாம். ஏமாற்றங்களைத் தவிர்க்க எதிலும் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். உடன்பிறப்புகள் அல்லது குடும்ப உறுப்பினர்களால் உபத்திரவங்களைச் சந்திக்கலாம். திட்டமிட்ட பயணங்களில் திடீரென மாற்றங்கள் செய்யலாம்.

**இடபம்:** நண்பர்களிடம், உறவினர்களிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். குடும்ப உறுப்பினர்களின் தேவையை, விருப்பங்களை பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள். அயலாருடன் மனம் விட்டு பேசுவீர்கள். வெளியூர் பயணங்கள் விரும்பும் விதத்தில் அமையும். உங்களின் கடந்த கால அனுபவங்களைப் பற்றி பெருமையாக பேசுவீர்கள்.

**மிதுனம்:** கனிவாகப் பேசி காரியங்கள் சாதிப்பீர்கள். பொருளாதார நிலைமையில் மேம்பாடு காணலாம். கடன் மிகுதிகளைச் செலுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள். உடல் நலக்குறைவால் சிகிச்சைகளை மேற்கொள்ளலாம். புறம்பேசும் சிலரை அடையாளம் கண்டு கொள்வீர்கள். குரு வழிபாட்டின் மூலம் குதூகலம் கூடும்.

**கடகம்:** மதிப்பு, மரியாதைக்கு பாதிப்பு வரும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். நடப்பதுபோலத் தோன்றிய காரியம் ஒன்று கடைசி நேரத்தில் நடக்காமல் போகலாம். உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். சிலர் மீது தேவையில்லாமல் கோபம் கொள்ளலாம். வாகனங்களை பராமரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். திடீர் செலவு நேரும்.

**சிங்கம்:** சக ஊழியர்கள் அல்லது நண்பர்களுக்காகச் சில செலவுகளைச் செய்யலாம். தேக ஆரோக்கியம் பற்றிய கவலை உண்டாகலாம். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும். ஏதோ ஒரு வழியில் சிறு பணவரவுகளைப் பெறலாம். தொழில் ரீதியான விடயம் ஒன்றில் முடிவு எடுக்க முடியாமல் தவிக்கலாம். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு.

**கன்னி:** எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். பால்ய நண்பர்கள் சிலரைத் தேடிச் சென்று சந்திப்பீர்கள். குடும்ப உறுப்பினர்கள் மீது கொண்டிருந்த கோபதாபங்கள் விலகும். பெண்கள் கடும் வேலைப்பளுவால் அவதிப்படலாம். சக ஊழியர்கள் அல்லது நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

**துலாம்:** எதிலும் அவசரப்பட்டு முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். செய்த வேலை ஒன்றில் திடீரென மாற்றங்கள் செய்யலாம். நீங்கள் போட்டியாக நினைத்துச் செயற்பட்ட ஒருவர் நட்பாக நடந்து கொள்ளலாம். சிலரின் தவறுகளை சுட்டிக் காட்டுவீர்கள். பலமுறை முயற்சித்தும் சில வேலைகள் முடியாமல் தடைப்படலாம்.

**விருச்சிகம்:** நீங்களே சிரமத்தில் இருக்கும்போது, சிலர் உங்களிடம் உதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். உடல் நலம் பற்றிய கவலைகள் அதிகரிக்கும். விருந்தினர்கள் வருகையால் நீங்கள் திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் போகலாம்.

**தனுசு:** சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் சாக்குப்போக்குச் சொல்லி சமாளிக்கலாம். தர்ம, புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும். சோர்வு, சோம்பலால் சில வேலைகளை வசதிக்கு ஏற்றார்போலச் செய்வீர்கள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். பணப்பற்றாக்குறையைச் சந்திக்கலாம்.

**மகரம்:** நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். ஏதோ ஒரு வகையில் பணவரவுகளைப் பெறலாம். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்கள் சிலரின் ரகசியங்களை அறிந்து கொள்வீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும்.

**கும்பம்:** எந்த விடயத்திலும் தன்னம்பிக்கை, துணிச்சலுடன் செயற்படுவீர்கள். உடன்பிறப்புகள் உங்களின் முயற்சிகளுக்குத் தடை போடலாம். அரசியல்வாதிகள் ஓய்வின்றி கடுமையாக அலைய நேரிடலாம். வியாபாரிகள் இருப்புப் பொருள்களால் கூடுதல் ஆதாயம் பெறுவர். புதிய வாய்ப்புகள் தேடி வரும் நாள். தம்பதியர் இடையே அன்யோன்யம் கூடும்.

**மீனம்:** கவனக்குறைவான செயற்பாடுகளால் அவதிகளுக்கு ஆட்படலாம். பிள்ளைகளுக்கு நல்ல யோசனைகள் சொல்லி நல்வழிப் படுத்துவீர்கள். தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். நட்பாகச் செயற்பட்ட சிலரே விரோதமாகச் செயற்படலாம். எதிர்பாராத சம்பவம் நடக்கலாம்.

**நாளை**

தை 07 சனிக்கிழமை 21.01.2012
திதி: திரயோதசி பி.ப. 03.46 வரை
நட்சத்திரம்: மூலம் பி.ப. 04.56 வரை
சுபநேரம்: 03.35 - 05.05 வரை,
ராகு காலம்: 09.35- 11.05 வரை

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 9 | | 1 | 7 | | |
| | 2 | 7 | 5 | | | 9 | | 1 |
| | | | | | | | 6 | 5 |
| 6 | | 3 | | | | | 9 | 2 |
| 1 | 8 | | 4 | 6 | 9 | | 7 | 3 |
| 4 | 5 | | | | | 1 | | 6 |
| 3 | 1 | | | | | | | |
| 2 | | 5 | | | 7 | 8 | 3 | |
| | | 4 | 8 | | 3 | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28
★
01
★
1934



மறைவு
20
★
01
★
2011

### அமரர் வைத்தி சந்தியாப்பிள்ளை

நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில்
இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன்
நித்திய இளைப்பாற்றியை அள்ளித்தரும் ஆண்டவரே
முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் பிரகாசிக்கக் கடவது
எங்கள் அன்பான அப்பாவே
எம்மைப் பிரிந்து ஓர் ஆண்டு கடந்தாலும்
எம் நெஞ்சினில் உம் நினைவுகள் நீங்கவில்லை
எப்போதும் ஓய்வு விடாது
எமக்காக உழைத்த உன்னதமான காலங்கள்
பூமியிலே நீங்கள் வாழ்ந்த காலங்கள்
இனிமையாக எம்மை அரவணைத்து
அறிவுரை கூறிய காலங்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் நெஞ்சை விட்டகலா அப்பா
உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

54/51, அன்னம்மாள் கோயில் லேன்,
பாண்டியன்தாழ்வு,
கொழும்புத்துறை.

(13173 (45-7-6)

இவ்வாண்டும்...
TECHNO WORLD
Studies (Pvt) Ltd
கணினி பயிற்சி நிறுவனம்
நாடளாவியரீதியில் கணினி உயர்கல்விக்காக வழங்கும்
இலவச புலமைப்பரிசில்
FREE
பரீட்சை நாள்
JANUARY
22
ஞாயிற்றுக்கிழமை
COMPUTER SCHOLARSHIP - 2012
கணினிப் பாடநெறிகள் அனைத்திற்கும்....
75% வரை
கட்டணக்கழிவு
பெறும் வாய்ப்பு



- ஒரு மணிநேரம் கொண்ட பல்தேர்வு வினாக்கள்
- பொதுஅறிவு பொது உளச்சார்பினைக் கொண்டது
- 15 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பங்குபெற்றலாம்.
- இப்பரீட்சைக்கு கட்டணம் எதுவும் இல்லை
- கணினி பாடநெறிகள் அனைத்திற்கும் 75% வரை கட்டணக் கழிவு பெறும் வாய்ப்பு

14 ஆவது ஆண்டில்
யாழ்குடா நாட்டில்...
344, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம் 021 4921124
64, பலாலி வீதி, திருநெல்வேலி 021 4922401
397, 4ம்கட்டை யாழ் வீதி, ஆனைக்கோட்டை-மானிப்பாய் 021 4922400
A9 வீதி (வைத்தியசாலைக்கு அருகாமை) சாவகச்சேரி 021 4925114
கண்பொல்லை ஒழுங்கை, கொடிகாமம் வீதி (Science Centre அருகாமையில்) நெல்லியடி-கரவெட்டி 021 4925145
கணினி உலகில் என்றும் உங்கள் நண்பன்
2011 - (O/L) மாணவர்களுக்கு விசேட கழிவுடன் தினமும் கணினி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு மனமே ஆறு!

கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி இருக்கும். வவுனியா பஸ் நிலையம் களைகட்டிக் கொண்டிருந்தது. அடுத்த இரு நாள்கள் விடுமுறை என்பதால் வெளிமாவட்டத்து அரச ஊழியர்களும் தங்கள் வீட்டுக்குச் செல்வதற்காக பஸ்ஸுக்குக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆளாளுக்கு தாங்கள் போகின்ற ஊர்களுக்கு அந்தந்த பஸ்ஸில் ஏறிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். பலர் பஸ்ஸில் வந்து இறங்கிக் கொண்டிருக்கிறார்கள். வவுனியா பஸ் நிலையம் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

ஒவ்வொருவரும் தங்கள் பணியில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் இரு ஆசிரியர்கள் தமக்குள்ளே ஏதோ கோபத்துடன் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் பேசிக்கொள்ளும் போது இருவரிடத்திலும் உணர்வு மேலோங்கி இருவரின் முகங்களும் சிவந்து கொப்பளிக்கின்றன.

அவர்கள் உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதும் அடிக்கடி பயணப்பையை கைகளில் இருந்து மாற்றுவதும், சேட்டு பொக்கற்றினை அடிக்கடி தடவுவதுமாக இருந்தார்கள். எனக்கு விளங்கிவிட்டது அவர்களுக்கு ஏதோ நடந்திருக்கவேண்டும் என்று. அறிவதற்காக அவர்கள் பக்கம் சென்றேன். பக்கத்தில் பஸ்ஸுக்காகக் காத்துக்கொண்டு நிற்கும் சனக்கூட்டத்தை ஒரு பொருட்டாகக் கொள்ளாமல் இருவரும் சத்தம்போட்டுக் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மன்னார், பெரிய பண்டிவிரிச்சான் ம.வி ஆசிரியர்கள் என்பதையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் அறிய முடிந்தது. யாழ்ப்பாணம் செல்வதற்காக பஸ்ஸுக்காகக் காத்துக்கொண்டு நிற்கிறார்கள். ஆனால் இருவரின் கோபமும் இன்னும் குறையவில்லை. கூடிக்கொண்டே போனது.

ஆசிரியர் 1 :- நாங்கள் இருந்த சீற்றில் நடத்துநருக்குத் தெரிந்தவர்களை இருத்தி விட்டு எங்களை வேறு பஸ்ஸில் ஏறும்படி மனிதத் தன்மை கொஞ்சமும் இல்லாத பஸ்ஸின் நடத்துநர் சொன்னானே... அவன். என்ன நினைத்துக் கொண்டான் என்று சொல்ல....

ஆசிரியர் 2 :- பஸ் சீற்றில் பயணப்பையை வைத்துவிட்டு நடத்துநருக்குச் சொல்லி விட்டுத்தான் மதிய உணவினைச் சாப்பிட பஸ்ஸினை விட்டு இறங்கினோம். சாப்பாட்டுக் கடைக்குள் சென்று சாப்பிட்டுவிட்டு வந்து பஸ்ஸில் ஏறின போது, எங்கட சீற்றில் வேறு யாரோ இருக்கினம். அவர்களுக்கும் தெரியும் நாங்கள் இருந்த சீற் என்று. ஆனால் அவர்களும் இறுமாப்போடு இருந்து கொண்டு வெளியே போ என்று சொல்வதைப் போல் பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள் என்றார். அப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது அவர்கள் வேறு ஒரு பஸ்ஸில் வந்து வவுனியாவில் இறக்கி விடப்பட்டனர் என்று.

> எந்த விதத்தில் பயணிகளை ஏமாற்ற முடியுமோ அப்படியெல்லாம் ஏமாற்றிவிடலாம் என்று ஒரு சில பஸ்காரர்கள் நினைத்துக்கொண்டு பஸ் ஓட வந்திருக்கிறார்கள். இதனால் ஒட்டுமொத்த பயணிகளும் பஸ்காரரால் பாதிக்கப்படப் போகிறார்கள்.

ஆசிரியர் 1 :- இதைப் பக்கத்தில் இருக்கிற சீற்காரரிடம் கேட்டால் நடத்துநருக்கு தெரிந்தவர்கள் என்று சொல்லுகினம். அவர்களாவது எமக்குச் சார்பாகக் கதைத்திருக்கலாம். அவர்களும் பேசாமல் இருந்துவிட்டினம்.

ஆசிரியர் 2 :- சாப்பிட்டுவிட்டு நேரத்துக்கு வந்து ஏறவில்லையாம் என்று எங்கள் மீது குற்றம் சுமத்துகிறார்கள். அப்படி நேரம் போனாலும் பஸ்ஸை எடுக்கவில்லைத்தானே என்றார்.

ஆசிரியர் 1 :- நேரக் கணிப்பாளரிடம் முறையிடலாம் என்று போனால் அந்த ஆளும், அந்த பஸ்ஸின் நடத்துநர் போல நிற்கிறார். நாங்கள் சொல்வதைக் கேட்காமல் 'செவிடன் காதில் சங்கு ஊதியது' போல பேசாமல் நிற்கிறார். இதே போல நிறையப் பிரச்சினையை ஒவ்வொரு நாளும் பார்த்திருக்கவேணும். அதுதான் அந்த ஆள் ஒன்றும் பேசாமல் நிற்கிறார்? அல்லது தங்கட பஸ், அதை எப்படி வேண்டுமானாலும் ஓடுவம். ஏறச் சொன்னால் ஏறு, இறங்கச் சொன்னால் இறங்கு என்ற இறுமாப்பில் நிற்கிறாரா என்று ஒன்றுமே புரியவில்லை வந்து விட்டோம் என்றார். பார்த்தியளா பஸ் நடத்துநரும் பொறுப்பில்லாமல் பேசுகிறார் என்றால், நேரக் கணிப்பாளரும் பொறுப்பில்லாமல் பேசுகிறார். இப்படிப் பொறுப்பில்லாத ஆள்கள் இருக்கும் வரை இவர்களது பஸ்ஸில் ஏறும் பயணிகள் கவனமாக இருக்க வேண்டும். நடுக்காட்டில் கூட இறக்கிவிட்டு விட்டுப் போய்விடுவார்கள். - என்றார்.

பிற்பகல் 4.30 மணி ஆகிவிட்டது. யாழ்ப்பாணத்திற்கான பஸ் வருகிறது. அதில் ஏறி இரு ஆசிரியர்களும் அமர்ந்து கொள்கிறார்கள். ஏறி பஸ்ஸின் நடத்துநரையே பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த பஸ் நடத்துநரும் வந்து பஸ்ஸைவிட்டு இறங்கும்படி சொல்வாரோ என்ற பயத்தில் நடத்துநரைப் பார்ப்பது அவர்கள் இருவரின் பார்வையிலும் தெரிகிறது. பஸ் நகர்கிறது. 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் வந்து சேர்கிறது. மன்னாரில் இருந்து வந்த களைப்பும் வவுனியாவில் நடத்துநருடன் சண்டைபோட்ட களைப்பும் சேர்ந்து பஸ்ஸிற்குள் இரு ஆசிரியர்களினது கண்களையும் மூடவைத்தது. யாழ்ப்பாணம் வந்ததே தெரியவில்லை. வேறு வாகனத்தில் ஏறி ஒரு ஆசிரியர் வலிகாமப் பகுதி ஒன்றுக்கும், மற்ற ஆசிரியர் பருத்தித்துறைக்கும் சென்றார்கள். இருவரும் வீட்டுக்குப் போய்ச்சேர இரவு 10 மணி ஆகிவிட்டது.

இந்தப் பயணம் இத்துடன் முடியவில்லை. மீண்டும் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்போகிறது என்பதை நினைக்கும் போதுதான் இரு ஆசிரியர்களின் வயிற்றிலும் புளியைக் கரைத்தது போல் இருந்தது. வெளிமாவட்ட பாடசாலைக்கு பஸ்ஸில் சென்று வருகின்ற ஆசிரியர்களின் நிலைமை எப்படி இருக்கும்? இவர்களுக்கு நடந்தது போல் பல சம்பவங்கள் நடந்திருக்கும். முறைகேடான இடமாற்றங்களால் அவதிப்படும் ஆசிரியர்கள் பிரயாணத்தின் போதும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள்.

ரிக்கெட் எடுப்பதற்காகப் பணத்தைக் கொடுத்துவிட்டு மீதிப் பணத்தைக் கேட்கும் போது, இறங்கும் இடம் வரும் போது தரலாம் என்று சொல்லும் நடத்துநர்கள் மீதிப் பணத்தைக் கொடுக்கப் பின்னடிப்பார்கள். கடந்த 25 ஆம் திகதி வவுனியாவில் இருந்து ஒரு

**கோப்பாய் சண்முகம்**
கதையோடு செய்தி

தாயும் இரு மகளும் யாழ்ப்பாணம் வந்தார்கள். பணத்தை வாங்கிய பஸ் நடத்துநர், மீதிப் பணத்தைக் கொடுக்காமல் யாழ்ப்பாணம் வந்தும் அதனைக் கொடுக்கப் பின்னடித்தார். ஒருவாறு அந்தத் தாய் விடாப்பிடியாக நின்று மீதிப் பணத்தை வாங்கி கோப்பாய்ப் பகுதி ஒன்றில் இருக்கும் தனது தாய் வீட்டுக்கு வந்தார்.


இப்படியாக எந்த விதத்தில் பயணிகளை ஏமாற்ற முடியுமோ அப்படியெல்லாம் ஏமாற்றிவிடலாம் என்று ஒரு சில பஸ்காரர்கள் நினைத்துக் கொண்டு பஸ் ஓட வந்திருக்கிறார்கள். இதனால் ஒட்டுமொத்த பயணிகளும் பஸ்காரரால் பாதிக்கப்பட்டே வருகின்றனர்.


# 19 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் இ.ச.பேரம்பலம்

(வாரிவளவு - காரைநகர்)

**தோற்றம் :26-04-1926 மறைவு :19-01-1993**



அன்புடன் எம்மை அரவணைத்து
ஆர்வமுடன் எம்மைக் காத்து
இன்னமுதாய இனிய அறிவுரைகள் கூறி
ஈடேற வணிகத்தில் வழிகள் பல காட்டி
உன்னதமான வாழ்வை எமக்களிக்க
ஊக்கமுடன் உழைத்து வந்தீர்!
எண்ணிய சேவைகள் பல செய்து
ஏற்றமுற வைத்தீர்! எம்மை எல்லாம்
ஐயுறவு ஏதுமின்றி எம் வாழ்வு மலர்ந்திட
ஒற்றுமையாய் எம்மை அணைத்து
ஓதற்கரிய பாடல் கலைகள் யாவும் புகட்டி
ஔவையின் அருளுரையும் இனிதே தந்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிசமைத்த
தெய்வமே எங்கள் அன்புத் தந்தையே
எம்மைவிட்டு விண்ணுலகு சென்று
ஆண்டுகள் பத்தொன்பது பறந்தோடிப்போயும்
மறக்குமா! எம் நெஞ்சம்
என்றென்றும் உம் நினைவில் வாழும்

(ச/7882)(2-6-7)

மணி ஓசை,
383, கோவில் வீதி, நல்லூர்.

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
50,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தொன்பதாவது ஆண்டு அமரத்துவ அஞ்சலி

மலர்வு
26
04
1926



உதிர்வு
19
01
1995

திதி 20.01.2012

காரைநகர் - வாரிவளவு

அமரர் உயர்திரு இ. ச. பேரம்பலம் E.S.P

நிறுவுநர் இ.ச. பேரம்பலம் சக நிறுவனம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஏற்றமுடன் திகழ்வதற்கு
நீவிர் விதைத்த வித்து
நிழல் தரும் விருட்சங்களாயிற்று
வருடங்கள் பத்தோடு ஒன்பது
வந்தே போனாலும் நும்
திருவடித் தாமரைகளை என்றும்
தியானித்தே வாழ்ந்திடுவோம்.

E.S.P & Company
124, Old Moor Street,
Colombo - 12.
கணேசபவனம்
வாரிவளவு, காரைநகர்.

நீங்காத நினைவுகளுடன்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# புதிய நியமனம்

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்கான புதிய பிரதிக் கல்விப் பணிப்பாளராக திருமதி லாவண்யா சுகந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 13 ஆம் திகதி தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். இப் பதவியை வகித்த க. முருகவேல் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற பின்னர் சி. இதயராஜா இப்பதவியை வகித்தார். அவர் நிர்வாகத்திற்கான பிரதிக் கல்விப் பணிப் பாளராக நியமனம் பெற்றதைத் தொடர்ந்து அந்த வெற்றிடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த இவர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியும் ஆவார். 2005 ஆம் ஆண்டில் வேலணை மத்திய கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் 2009 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கான திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று கல்வி நிர்வாக சேவையில் இணைந்து கொண்டார்.

(க-405)

## கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடு களுக்கு வந்து உரிய முறையில் திருத்தித் தருகின்றோம்.

அழையுங்கள்: 0779086737

## வாடகைக்கு

மானிப்பாய், இணுவில் வீதியில் நல்ல நிலையில் உள்ள யாழ். அரிசி ஆலை சகல உபகரணங்களும் அனைத்துத் தளபாடங்களுடனும் மற்றும் அனைத்து வசதிகளுடனும் உடனடியாக வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 0777163095 / 077 3537859

## University of Jaffna Sri Lanka
## Faculty of Graduate Studies

Postgraduate Diploma in Teaching English as a Second Language (TESL)
2012-2014 (Batch I)

Applications are invited from eligible candidates for admission to the Postgraduate Diploma in Teaching English as a Second Language (TESL) for the academic year 2012/2014.

Admission Requirements:

1. Degree in any field from a recognized University.
   And
2. At least three years experience in Teaching English as a Second Language at primary/secondary/tertiary levels In Government or recognized private schools/ Institutions.
   And
3. Age - below fifty five years

"Duration of the Course: Four Semesters (Approximately Two years)
Medium of instruction: English.
Selection Criteria: Written Examination and Viva voce.


Written Examination - Title of the paper "English Language Proficiency" (02 hours)
The paper will check the candidate's basic ability in reading and writing skills
Viva voce - Candidates are expected to prove their basic oral proficiency in English.
35 Candidates will be selected based on their overall performance
Course Fee: Rs, 37, 700,00
Closing date for Applications: 17th February, 2012.

Application Procedure:

Application forms and other details could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna either in person or by post on a payment of Rs. *300/=* per application form. Those who wish to obtain application forms by post are requested to send a money order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelope( Rs. *5)* 23cm x 10 cm in size.
Duly completed applications should be forwarded to the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaftna on or before the closing date of application.
Illegible, incomplete and late applications will be rejected without intimation,

**Registrar 17.01.2012** (C/7885)(2,6,7)


# Admissions Open for 2012




YOUR DREAM OF A FOREIGN DEGREE AT AN AFFORDABLE FEE WITH A JOB GUARANTEED UPON GRADUATION AT S.E.A COLLEGE, BANGALORE




S.E.A College Of Engineering & Technology
Ekta Nagar, Basavanapura, Virgo nagar post, Bangalore - 560 049, India
Call our Local Representative on 0779875781,0785142137
E-Mail:seacollegesrilanka@gmail.com

யாழ் வார்த்தகக் கண்காட்சி
ஜனவரி 20, 21, 22 - 2012
துரையப்பா அரங்கு
காட்சிக்கூடம் - 89.

from England

ADAM
THE RIGHT BALANCE
Speed, Performance, Value

AZextra Retail Scales
Plenty of reasons to buy ADAM....



- Low profile design and robust construction
- 103 PLU Memory
- Front and rear backlit displays
- Water Resistant, colour coded keys to quickly identify the most frequently used keys
- Internal rechargeable battery with up to 90 hours of operation
- Stainless steel weighing pan
- OIML and EC type approval
- Backlit LCD display
- Tough Construction – the ABS Plastic Housing 3Kg, 6Kg, 15Kg and 30Kg Capacities are available

www.adamequipment.com

இலங்கை அலவீடுகள், அலகுகள் நியமங்கள், சேவைகள், திணைக்களம்

For more information contact us:
ADAM STORE -
Street , Kohuwala, Nugegoda. Tel: - 0759009451


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் 2012 உழவர் விழா அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டார்.

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட நடுவராக நியமனம் பெற்ற மாவத்தை விளையாட்டுக் கழகத் தலைவர் துஷ்யந்தனுக்கு வாழ்த்துப் பத்திரத்தை சரவணபவனும், பாராட்டுப் பத்திரத்தை வாழ்நாள் பேராசிரியர் சி.க.சிற்றம்பலமும் வழங்கினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனுக்கு உதைபந்தாட்ட வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றனர். (த-28)

# வலிகாமம் வலய உதைபந்து இன்று மோதும் அணிகள்



வலி வடக்கு, ஜன. 20

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 17, 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**17 வயதுப் பிரிவு**
**மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம்**

* வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் சுன்னாகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்.
* வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி எதிர் மாதகல் சென்ஜோசெப் மகா வித்தியாலயம்.
* இணுவில் மத்திய கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.
* இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி.
* மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சுன்னாகம் கந்தரோடை தமிழ கந்தையா வித்தியாலயம.
* சென்.ஜோசெப் மகா வித்தியாலயம் எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.
* தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.
* அராலி இந்துக் கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**
**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்.**

* இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்.
* வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
* வட்டுக்கோட்டை மத்தியகல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.
* இணுவில் மத்திய கல்லூரி எதிர் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.
* வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி எதிர் ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்.
* சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
* மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.
* தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம். (ம-86)


# கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் சங்க புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம்,ஜன.20

கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

நிர்வாக சபை உறுப்பினர் களில் தலைவர் - டாக்டர் மா.ஜெயராசா, செயலாளர்- றெஜி. அலோசியஸ், பொருளாளர் இ.பரஞ்சோதி, உபதலைவர் வ.நகுலேஸ்வரன், ஆர்.ரவீந்திரன், உபசெயலாளர்- எஸ்.குமார், நிர்வாகசபை உறுப்பினர்கள் சா.அலன்டிலன், வே.சுந்தரலிங்கம், செ.ஜெகநாதன், சீ.விக்டர் லோகநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-23)

# மேசைப்பந்தாட்டம்



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான ஆண்கள் பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியும் திறந்த போட்டியாக மாவட்ட மட்டத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# புதுமுக மாணவருக்கு தடகளப் போட்டிகள்

வலி வடக்கு, ஜன. 20

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பீடங்களுக் இடையேயான புதுமுக மாணவாகளுக்கான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியார் ரி.வேல்நம்பியும் சிறப்பு விருந்தினராக மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் எஸ். மகிந்தனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-86)

SPOT Admissions
ON 20th 21st 22nd @
Jaffna International Trade Fair
Stall No. A17

India's No.1 Private University
SRM UNIVERSITY
(Under section 3 of UGC Act 1956)

Faculty of Engineering and Technology
Aerospace Engineering, Architectural Engineering, Genetic Engineering, Mechatronics Automobile Engineering, Chemical Engineering, Biotechnology, Biomedical Engineering, Civil Engineering, Computer Science & Engineering, Nanotechnology, Bioinformatics, Software Engineering, Electrical & Electronics Engineering, Food & Process Engineering, Electronics & Communication Engineering, Electronics & Instrumentation Engineering, Information & Telecommunication Engineering, Information Technology, Nuclear Engineering, Instrumentation & Control Engineering, Mechanical Engineering.

Medicine & Health Sciences
M.B.B.S, B.D.S, B.Sc. Nursing, Bachelor of Physiotherapy, Bachelor of Pharmacy, Bachelor of Occupational Therapy, Bachelor of Audiology and Speech Language, Pathology, B.Sc Optometry, Bachelor of Medical Record Sciences, B.Sc Medical Laboratory Technology, Post Basic B.Sc Nursing.

Faculty of Science, Arts and Humanities
B.Sc Biotechnology, B.Sc Biotechnology & Bioinformatics, B.Sc Computer Science, B.Sc Econometrics, B.Sc Film Technology, B.Sc Hotel & Catering Management, B.Sc Information & System Management, B.Sc Information Technology, B.Sc Visual Communication, B.Com, B.C.A, B.A, B.Ed.



SRM University Information Centre
Regional Office:
329, 1st Floor, Meewella Building, Galle Road, Colombo 04.
Tel: 0112 592 323 | 0718 554 503
Jaffna Branch:
70/6, K.K.S Road, Jaffna.
Tel: 0718 554 508

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலிட அணியின் மூக்குடைந்தது



டெஸ்ட் கிரிக்கெட் தர வரிசையில் முதலிடம் வகிக்கும் இங்கிலாந்தை பத்து இலக்குகள் வித்தியாசத்தில் மண் கௌவ வைத்தது பாகிஸ்தான்.

இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் டுபாயில் செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆனால் அந்த முடிவு தவறானது என்பதை விரைவாக வீழ்த்தப்பட்ட இங்கிலாந்து இலக்குகள் தெளிவாகக் வெளிப்படுத்தின. பாகிஸ்தான் அணியின் சுழல் மன்னன் அஜ்மல் வீசிய பந்துகள் இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களை திணறடித்தன. அஜ்மல் என்ற புயல் மையம் கொண்டு அதி பயங்கரமாக வீசியதால் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 192 ஓட்டங்களுக்குள் மடங்கியது. இங்கிலாந்து அணி சார்பாக இலக்குக் காப்பாளர் பிரையர் 70 ஓட்டங்களைப் பெற்றார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இங்கிலாந்து அணியின் நம்பிக்கை நட்சத்திரம் பீற்றர்சன் 2 ஓட்டங்களோடு நடையைக் கட்டினார். இங்கிலாந்து அணியின் தலைவர் அன்ட்ரூ ஸ்ரோஸ் 19, குக் 3, ரொட் 17, பெல் 0, மோர்ஹன் 24, ப்றோட் 8, சுவான் 34, ட்ரம்லெட் 1, அன்டர்ஸன் 12 ஓட்டங்களை எடுத்தனர். பாகிஸ்தான் அணியின் சயிட் அஜ்மல் 7 இலக்குகளையும், சீமா, ஹபீஸ், அப்துர் ரஹ்மான் ஆகியோர் தலா ஒரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இணைப்பாட்டமாக 114 ஓட்டங்களை எடுத்து பலமான அடித்தளம் இட்டனர். பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஹபீஸ் 88 ஓட்டங்களும், தௌபீக் உமார் 58 ஓட்டங்களும் , அணித் தலைவர் மிஸ்பா உல்ஹக் 52 ஓட்டங்களும் பெற்று ஆட்டமிழந்தனர். நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர நிறைவில் பாகிஸ்தான் அணி 7 இலக்குகளை இழந்து 288 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்று மூன்றாம் நாள் ஆட்டத்தில் இலக்குக் காப்பாளர் அட்னன் அக்மல் அடித்த அரைச்சதத்தின் உதவியாடு பாகிஸ்தான் அணி 300 ஓட்டங்களை இலகுவாகக் கடந்தது.


இறுதியில் 119.5 பந்துப் பரிமாற்ற நிறைவில் பாகிஸ்தான் அணி சகல இலக்குகளையும் இழந்து 338 ஓட்டங்களைக் குவித்தது. இங்கிலாந்து அணியின் சுழல் சூறாவளி சுவான் நான்கு இலக்குகளையும், ஸ்ரூவர்ட் ப்ரோட் 3 இலக்குகளையும் அன்டர்ஸன் இரண்டு இலக்குகளையும் வீழ்த்தினர்.

முதல் இன்னிங்ஸில் சூடு கண்ட இங்கிலாந்து இரண்டாவது இன்னிங்ஸிலும் திருந்தவில்லை. உமர்குல்லின் வேகத்திலும், அஜ்மலின் சுழலிலும் சிக்கி சின்னாபின்னமானது.

இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ட்ரோஸ் 6 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை உமர் குல்லின் வேகத்தில் சிக்கி அட்னன் அக்மலிடம் பிடிகொடுத்து வெளியேறினார். தொடர்ந்தும் உமர்குல்லும், அட்னன் அக்மலும் கூட்டணி அமைத்து குக்(5) மற்றும் ஜொனதன் ரொட்(49) ஆகியோரின் இலக்குகளை வேட்டையாடினர்.

இரண்டாவது இன்னிங்ஸிலும் ஏமாற்றினார் பீற்றர்ஸன். எந்தவொரு ஓட்டமும் எடுக்காமல் அவர் உமர் குல்லிடம் தனது இலக்கைத் தாரைவார்த்தார். உமர்குல் 4 இலக்குகளை வீழ்த்திய திருப்தியோடு ஓய்வெடுக்க அதன்பின்னர் அப்துர் ரஹ்மானும், அஜ்மலும் போட்டிபோட்டுக் கொண்டு இலக்குகளை வீழ்த்தத் தொடங்கினர். பெல் (4), மோர்கன் (14), மற்பிறையர் (4), ப்ரோட் (17), சுவான் (39), ட்ரம்லெட் (0) ஆகியோர் அணி வகுத்து ஒன்றன்பின் ஒன்றாக களத்தை விட்டு வெளியேற இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 160 ஓட்டங்களுடன் திருப்திப்பட்டு தனது முழு இலக்குகளையும் இழந்தது. பாவம்! 15 ஓட்டங்களோடு களத்தில் ஆட்டமிழக்காது நின்ற அன்டர்ஸன் சேர்ந்து விளையாட யாராவது வருவார்களா என எதிர்பார்த்து ஏமாந்து சோர்ந்து போய் நடையைக் கட்டினார். அஜ்மலும் ரஹ்மானும் தலா 3 இலக்குகளை தம் வசமாக்கினர்.

15 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கியது பாகிஸ்தான். எனினும் இந்த இலக்கை அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஹபீஸ் தனி ஒருவராக விளாச, நான்காவது பந்துப் பரிமாற்றத்திலேயே வெற்றி பாகிஸ்தானைத் தேடி வந்தது. 10 இலக்குகளைச் சரித்த அஜ்மல் ஆட்டநாயகனானார்.



# இறுதி 40

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இந்திய கிரிக்கெட் அணி படுமோசமாக விளையாடி வருகின்றது. மேலும் தொடரை 3-0 என்ற கணக்கில் பறிகொடுத்துள்ளது. 3 டெஸ்ட் ஆட்டங்களும் 5 நாட்கள் முழுமையாக நடைபெறவில்லை. அதிலும் பேர்த் டெஸ்ட் ஆட்டம் இரண்டரை நாட்களிலேயே முடிந்தது.

மூத்த வீரர்கள் துடுப்பாட்டத்தில் ஒட்டுமொத்தமாக சொதப்பி வருகின்றனர். இந்த நிலையில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் வாசிம் அக்ரம் அளித்த நேர்காணலில், பேர்த், சிட்னி போன்ற ஆடுகளங்களில் வயதான வீரர்களால் விளையாடுவது என்பது சிரமம். அங்கு நிலவும் சூழ்நிலைக்கு ஏற்ப உடல் அசைவுகளை மாற்றி ஆடுவது மிகவும் களைப்பாக்கிவிடும்.

குறைந்தது இந்திய அணியில் 3 மூத்த வீரர்களாவது சிரமப்பட்டிருப்பார்கள். மேலும் 2 நாட்களுக்கு மேல் களத்தில் முழுவதும் நின்று களத்தடுப்பு செய்வது என்பதும் எளிதல்ல. இந்திய அணி விமர்சிக்கப்படுவதில் தவறில்லை.

40 வயது நெருங்கி விட்டாலே வீரர்கள் கிரிக்கெட்டில் இருந்து ஒதுங்கிவிட வேண்டும். லக்ஸ்மன் (37), டிராவிட்(39), சச்சின் (38) ஆகியோர் பெரிய ஜாம்பவான்கள் தான். ஆனால் பழைய சாதனைகள் எல்லாம் தற்போதைய நிலையில் வெற்றிக்கு உதவாது.

உண்மை நிலையை புரிந்து கொண்டு விலகிக் கொள்ள வேண்டும். தெரிவுக் குழுவும் ஒருசில கடினமான முடிவுகளை எடுத்துதான் ஆக வேண்டும். ஒரு நாள் ஆட்டத்தின் அணித்தலைவராக அசத்தும் டோனி டெஸ்ட் போட்டியில் சரிவர செயல்படுவதில்லை.

இளம் வீரர்களை அவர் களத்தில் ஊக்கப்படுத்துவதே கிடையாது. இளம் வேகப்பந்து வீச்சாளர்களை பயிற்சியாளர்கள் சரியான முறையில் தயார்படுத்த வேண்டும் என்றார். (15)

# சினிமாவின் பக்கம் ஸ்ரீசாந்தின் பார்வை



சினிமாவில் நடிக்க ஆசை என்று இந்தியாவின் பிரபல கிரிக்கெட் வீரரான ஸ்ரீசாந்த் கூறியுள்ளார்.

பிரபல கிரிக்கெட் வீரரான ஸ்ரீசாந்த் தற்போது ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதால் கிரிக்கெட்டிற்கு சிறிது காலம் இடைவெளி விட்டுள்ளார்.

ஆனால் இந்த இடைவெளியில் 'ஸ்ரீ36' என்ற பெயரில் தனக்கு என்று ஒரு பாண்ட் குழுவை வைத்துக் கொண்டு தேசம் என்ற ஒரு இசை அல்பத்தை தயாரித்து முடித்துள்ளார். இந்த அல்பத்தில் ஆடுவதற்கென்றே பிரபல நடனக் கலைஞர்களிடம் ஸ்ரீசாந்த் நடனம் கற்று வருகிறார்.

இதனைப் பற்றி ஸ்ரீ சாந்த் கூறுகையில், கிரிக்கெட்டை முற்றிலும் மறந்து விட்டு நான் இந்த அல்பத்தை உருவாக்கவில்லை. தீவிரமாக பந்து வீசும் பயிற்சியில் ஈடுபட்டபடியே தான் இந்த அல்பத்தை தயாரித்துள்ளேன்.


எனக்கு சினிமா ஆசை இருந்தாலும் இப்போதைக்கு கிரிக்கெட்டில் கவனம் செலுத்தவே விரும்புகிறேன். நடுவில் சற்று ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் இதுபோல் சின்னச் சின்ன அல்பங்களை உருவாக்கி பழகிக்கொள்வேன். கிரிக்கெட்டை விட்டு முழுவதுமாக ஓய்வெடுத்த பிறகு சினிமாவில் கவனம் செலுத்துவேன் என்று கூறியுள்ளார். (15)

# மீண்டும் மஹேல



இலங்கை, இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் மோதும் முக்கோண தொடருக்கான இலங்கை அணித் தலைவராக, 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வரையில் தலைமை தாங்கிய மஹேல ஜெயவர்தன நியமிக்கப்படுவார் என்று இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பாகிஸ்தானுடனான தொடர் தோல்விகளின் பின்னர் இறுதியாக தென்னாபிரிக்கத் தொடரில் வாய்ப்பு தருமாறு டில்ஷான் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (15)



# ஜெயசூரியாவுக்கு 110,000

பங்களாதேஷ் பிரிமியர் லீக் தொடரில் விளையாடுவற்காக இலங்கை வீரர் சனத் ஜயசூரிய 110,000 டொலர் ஏலத்தில் குல்னா ரோயல் பெங்கால் அணியினால் வாங்கப்பட்டுள்ளார். அதே வேளை முத்தையா முரளிதரனை சிட்டகொங் கிங்ஸ் அணியினால் 100, 000 டொலர்களுக்கு வாங்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் பிரிமியர் லீக் சுற்றுத் தொடர் பெப்ரவரி 9 முதல் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இலங்கை வீரர் லசித் மலிங்கவும் நேற்று ஏலத்தில் விற்கப்பட்டார். சமிந்த வாஸ் ஏலத்தில் இருந்த போதிலும் இதுவரையில் அவரை எந்த அணியினாலும் வாங்கப்படவில்லை. (15)



# முரளிக்கு 100,000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்துவின் வெற்றிக்கு கைகொடுத்த றுக்ஷ்மனின் சதம்

யாழ்ப்பாணம், ஜன.20

றுக்ஷ்மனால் பெறப்பட்ட சதம் கைகொடுக்க 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது யாழ். இந்துக் கல்லூரி அணி.

யாழ். இந்துக் கல்லூரிக்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையில் கடந்த வாரம் 19 வயது பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டி ஒன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணித் தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். அதற்கமைய தனது முதலாவது இனிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 60 ஓவர்கள் நிறை வில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் றொபேட் 78, தாரணன் 22, சிந்துஷன் 18, கோபிநாத் 19, சஞ்சயன் 12 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ். இந்துக் கல்லூரி அணி வீரனான வாமணன் 18 ஓவர்களில் 55 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் யஸ்மினன் 13 ஓவர்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் நிலாசனன் 5 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சிந்துஷன் 3 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இனிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணியினர் 74.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 367 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் றுக்ஸ்மன் 119, யஸ்மினன் 68, சஜிகன் 30, கிரிசோபன் 23, மதுஷன் 39, கல்கோபன் 22 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி வீரர்களான குமுதன் 20 ஓவர்கள் பந்து வீசி 81 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களையும் சஞ்சேயன் 21 ஓவர்கள் பந்துவீசி 87 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் தாரணன் 4 ஓவர்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தமது இரண்டாவது இனிங்ஸுக்காகத்துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியினர் 33 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் றெபேட் 50, யளேக்சன் 20, குமுதன் 15, சுவிஷன் 14 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். இந்துக் கல்லூரி அணி வீரர்களான மதுஷன் 13 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களையும் சிந்துஷன் 7 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

18 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் தனது இரண்டாவது இனிங்சுக் காகத் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணியினர் 1.4 ஓவர்கள் நிறைவில் 18 ஓட்டங்களைப் பெற்று 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றனர்.

இதில் மதுஷன் 7 ஓட்டங்களையும் கல்கோபன் ஓர் ஓட்டத்தையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். 10 ஓட்டங்கள் உதிரிகளாக கிடைக்கப்பெற்றன. (ம-23)

## கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ். நகரில் நாளை ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இரு பாலாருக்குமான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இதில் ஆண்களுக்கான போட்டி யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலிலும் பெண்களுக்கான போட்டி வேம்படி மகளிர் கல்லூரி கூடைப் பந்தாட்ட திடலிலும் இடம் பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கான நிரல் ஒழுங்கு தயாரிக்கும் நிகழ்வு காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறும் எனவும் ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை யாழ். மத்திய கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது என்றும் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எவ். ஜே. றூபசிங்கம் தெரிவித்துள்ளார். (ம-23-86)

## மென்பந்துச் சுற்றில் நாளை மோதும் அணிகள்

யாழ்ப்பாணம், ஜன.20

ஏழாலை கண்ணகி விளையாட்டுக்கழகம் நடத்தும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறை யிலான மென்பந்துச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நாளை சனிக்கிழமை ஏழாலை மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

காலை 8.30 மணி- சுன்னாகம் கலைமகள் விளையாட்டுக்கழகம் எதிர் மல்லாகம் சாளம்பை 'ஏ' விளையாட்டுக்கழகம்.

முற்பகல் 10 மணி- மல்லாகம் விளையாட்டுக்கழகம் எதிர் சுன்னாகம் வள்ளுவர் வியைாட்டுக்கழகம், மாலை 3 மணி- இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் எதிர் உடுவில் கிங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

மாலை 4.15- ஏழாலை ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம். (ம-23)

## உதைபந்தாட்டம்

தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 17,19 வயதுப் பிரிவு அணியினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று வெள்ளிக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை வேலணை மத் திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

## யாழ்.பிரதேச கழகங்களிடையே போட்டிகள் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் 2012 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளை நடத்துவது தொடர்பான கூட்டம் இன்று வெள்ளிக் கிழமை மாலை 3.30 மணியளவில் யாழ். பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரம் சுகுணரதி தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களை இந்தக் கூட்டத்தில் பங்கு கொள்ளுமாறு விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். நித்தியநாயகம் கேட்டுள்ளார். (ம-23)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி தங்கராசா

*(கிளாக்கர் அல்லது சின்னக்கிளி)*

*(பிரபல வர்த்தகரும் கஜானி, அம்பாள் லொறி உரிமையாளரும்)*



சுன்னாகம் வரியப்புலத்தைப் பிறப்பிடமாகவும் புகையிரத நிலைய வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தங்கராசா 17.01.2012 செவ் வாய்க் கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பவானியின் அன்புக் கணவரும் சுரேஸ்குமார் (கண்ணன், கனடா), தினேஸ்குமார், கணேஸ்குமார், கபிலாஜின் (விளையாட்டு விஞ்ஞான பிரிவு, யாழ். பல்கலைக் கழகம்), கஜானி (யா/யூனியன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2012) வெள்ளிக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.*
*021 224 0037.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

### திருமதி மார்க்கண்டு இராசம்மா

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கீரிமலை வீதி, பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு இராசம்மா நேற்று (19.01.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இரத்தினசிங்கம் மற்றும் தங்கமலர், கமலாதேவி, நீலா, தங்கராசா, தியாகராசா ஆகியோரின் பாசமிகு தாயும் கந்தசாமி, நடராசா, மகேந்திரம், நாகேஸ்வரி, மங்கையற்கரசி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பண்டத்தரிப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கீரிமலை வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்
மார்க்கண்டு தங்கராசா (மகன்)

### சிறுநீரகம் தேவை

O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. தந்து உதவுபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 0777246203**

### தரம் 5 மாணவச் செல்வங்களின் பெற்றோர்களே!

கடந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் அதிக மாணவர்களை சித்தியடையவைத்து சாதனை படைத்த நாவலர் வெளியீடான "வெற்றிக்கனி" மாதிரி வினாத்தாள் விடைகளுடன் இம்மாதம் 22ம் திகதி முதல்வெளிவருகின்றது. வினாத்தாள் தேவைப்படும் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் மற்றும் பெற்றோர்கள் தொடர்புகொள்ளவும்.

* பரீட்சை - புதிய நாவலர் கல்வி நிலையத்தில் நடைபெறும்.
* பரீட்சை - விரும்பிய 6 மணிநேரங்களில்.
* 1வது பரீட்சை - 22.01.2012 (ஞாயிறு)
* வெளி மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம்.

**மேலதிக விவரங்களுக்கு**
T.P:- 0774598440
புதிய நாவலர் கல்வி நிலையம்.
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.




## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் அகிலன்



காளிகோயிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் அகிலன் கடந்த (17.01.2012) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் மயில்வாகனம் - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் மோகன் (ஆஸ்திரேலியா), மகேந்திரன் (சுவிஸ்), ஜீவன் (சுவிஸ்), யசோ (பிரான்ஸ்), குமணன் (கேசவன் - லண்டன்), மதனன் (மதி - ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரனும் இராஜேஸ்வரி, பவானி, சீதாதேவி, வரதராசன், ஜெனித்தா, தர்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (23.01.2012) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளி கோயிலடி,*
*மல்லாகம், யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**க.தங்கராசா**
**(சகோதரன்)**

### சண்முகநாதன் மகேஸ்வரி



கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சண்முகநாதன் மகேஸ்வரி நேற்று (19.01.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகசபை- நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் சந்திராதேவி, லீலாதேவி ஆகியோரின் சகோதரியும் சோதிநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற செல்வநாதன் (ஜேர்மனி), கமலராணி, ஜெகநாதன் (சுவிஸ்), பவநாதன் (நாதன் ஆடை யகம், திருநெல்வேலி) ஆகியோரின் பாசமிகு தாயும் பூமகள்தேவி (ஜேர்மனி), தயாளினி (ஜேர்மனி)திருச்செல்வம், வனிதா (சுவிஸ்), சற்சொரூபினி ஆகியோரின் பாசமிகு மாமியும் துசியா, ஷர்மிளா, ஜெனியா, மீரா, திலீபன், ஜானுதி, ஜனதன், யதுர்சன், ஜனுஜா, சிந்துஜா, அபிராமி, ஆதவன், ஜனனி, தருனிகா, ஆரனிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சபிரா, சக்திகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

தகவல்
ச. பவநாதன் குடும்பத்தினர் (மகன்)
(நாதன் புடவையகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிக தடவை ஹெலியில் பயணம் செய்த பிரதமர்

அண்மைக் காலத்தில் அதிக தடவை ஹெலிகொப்டர் மூலமான பயணங்களை மேற்கொண்ட இலங்கை அரசியல்வாதியாக தான் விளங்குவதாகப் பிரதமர் டி.எம்.ஜயரட்ண நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

தனது உடல்நிலை காரணமாக இவ்வாறான பயணங்களைத் தனது மருத்துவர்கள் அங்கீகரிக்காத போதிலும் தான் அதிக தடவை ஹெலிகொப்டர் மூலம் பயணங்களை மேற்கொண்டதாகப் பிரதமர் ஜயரட்ண கூறினார். ஒரே தினத்தில் நாட்டின் வெவ்வேறு பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் தான் பங்குபற்ற வேண்டியிருந்ததாக அவர் கூறினார்.

## துமிந்த சில்வா சந்தேக நபரல்லர்

முல்லேரியா சம்பவத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வா பாதிக்கப்பட்டவரே தவிர, சந்தேகநபர் இல்லை என கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுல சூரிய மீண்டும் வலியுறுத்தியுள்ளார். குறித்த துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சம்பவத்தின் போது முதலாவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்தசில்வாவிற்கே துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டதாக பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் சாரதி உள்ளிட்ட சாட்சிகள் 5 பேருக்கும் மேலதிகமானவர்கள் வாக்குமூலம் அளித்துள்ள நிலையிலும், அவர் சந்தேக நபராக்கப்பட்டுள்ளார் என சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

## அரசியலில் களமிறங்கும் திட்டமில்லை

கொழும்பு,ஜன.20

அரசியலில் களமிறங்கும் திட்டம் எதுவும் இல்லை என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியலில் ஈடுபடுமாறு பலர் அழைப்பு விடுத்த போதிலும் அவற்றை நிராகரித்ததாக அவர் தெரிவித்தார்.

அரசியலில் ஈடுபடுமாறு ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் பாதுகாப்புச் செயலாளரிடம் கோரியுள்ளார். இதன் போது, தம்மை பாதுகாப்புச் செயலாளர் பதவியிலிருந்து விலக்குவதற்கு முயற்சிக்கின்றீர்களா என்று கோத்தபாய ராஜபக்ஷ, லலித் வீரதுங்கவிடம் வினவியதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

# அரசு - கூட்டமைப்பு பேச்சின்போது இந்திய மத்தியஸ்தம் அவசியம்

### கிருஷ்ணாவிடம் வலியுறுத்தினார் யாழ்.ஆயர்

யாழ்ப்பாணம், ஜன.20

இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுக்களில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக இந்தியா செயற்பட வேண்டும் என யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயம் ஆண்டகை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய அரசின் உதவிகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்.பொது நூலகத்துக்கு முன்னால் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கலந்து கொண்டார்.

இதன்போதே யாழ் ஆயர் இந்த வேண்டுகோள் அடங்கிய மகஜரொன்றை இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் கையளித்தார்.

இந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசானது தமிழ் சிறுபான்மையினருக்குப் பொருத்தமான அரசியல் தீர்வொன்றை அடைவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களில் ஈடுபட்டுவருகிறது.

இலங்கையில் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இது

**இலங்கை அரசானது பேச்சுக்களின் வழியாக மாகாண சபைகளை இயங்குவதற்கு தேவையான அதிகாரங்களை வழங்குவதில் எள்ளளவும் விட்டுக்கொடுக்கவில்லை**



ஒரு வழி என இதனை இந்திய வெளிவிவகார அமைச்சு வரவேற்றிருக்கிறது. ஆனால், இலங்கை அரசானது பேச்சுக்களின் வழியாக மாகாண சபைகளை இயங்குவதற்கு தேவையான அதிகாரங்களை வழங்குவதில் எள்ளளவும் விட்டுக்கொடுக்கவில்லை.

30 ஆண்டுகள் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் பின்னரும் பெரும்பான்மையைக் கொண்ட இலங்கை அரசு மத்தியில் இருந்து தமது அதிகாரங்களை வழங்கத் தாயாராக இல்லை.

எனவே இலங்கை அரசிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சின் வழி இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றிற்கு வழி செய்யும் படி இந்திய அரசை விநயமாக வேண்டுகிறோம்.

இல்லாவிடின் இப்பேச்சுக்கள் நீண்டுகொண்டு போவதோடு இலங்கை அரசானது புதிய வழிகளை தேடி அரசியல் பிரச்சினைக்குத் தீர்வினைக் காணும் எண்ணத்தைப் பின்தள்ளிக்கொண்டே போகும்.

எனவே இந்திய அரசானது புவியியல் நோக்கங்களையும் தாண்டி உண்மையாகத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண உழைக்க வேண்டும். இந்தப் பேச்சில் இந்திய அரசு மத்தியஸ்தம் வகிப்பதை இலங்கை அரசு எதிர்க்கப் போவதில்லை.

இந்திய சமாதான உடன்படிக்கைக்கு முன்பு இந்திய அரசு இது போன்ற மத்தியஸ்தப் பணியை ஆற்றியபோதும் தமிழ் தலைவர்கள் இந்திய சமாதான ஒப்பந்தத்தின் தன்மைகளை உணராமலும் தமக்குள் கெட்டித்தனமாக ஒன்றிணைந்து செயற்படாமலும் தூக்கி எறிந்துவிட்டனர்.

எனவே, இந்திய வெளிவிவகார அமைச்சானது இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விடாமல் எமது வேண்டுகோளைப் பரிசீலித்து எமது உதவிக்கு வரும்படி அன்பு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்படுகின்ற மக்கள் மீது தாங்கள் காட்டும் மனிதாபிமான கரிசனைக்கு நன்றி தெரிவிக்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## அங்கவீனர்களுக்கு வீடுகள்

கொழும்பு, ஜன.20

சமூகசேவை அமைச்சு மூலம் தேசத்துக்கு மகுடம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்றவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க வீடமைப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக சமூக சேவை அமைச்சின் பணிப்பாளர் டி.ஸீ. ஜயமான தெரிவித்தார். இந்தத் திட்டத்தின் கீழ் அநுராதபுரம் மாவட்டத்தில் 110 வீடுகள் நிர்மாணிக்கப் படவுள்ளன. இந்த வீடுகள் 23 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தலா 5 வீடுகள் வீதம் அமைக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ச)

## சோமாலியாவுக்கு அரிசி ஏற்றுமதி

கொழும்பு, ஜன.20

7,500 மெற்றிக்தொன் அரிசியை சோமாலியாவுக்கு ஏற்றுமதி செய்ய இலங்கை அரசு தீர்மானித்துள்ளதோடு அதற்கு அமைச்சரவை அனுமதியும் கிடைத்துள்ளது.

அரசி உற்பத்திற்கென அம்பாறை மற்றும் பொலனறுவை ஆகிய மாவட்டங்களில் இருந்து 15,000 மெற்றிக் தொன் நெல் விநியோகிக்கப்படவுள்ளது. பெரும்போகத்தில் 100,000 மெற்றிக் டொன் நெல்லை களஞ்சியப்படுத்த வசதிகள் இருப்பதாக நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு அமைச்சரவைக்கு தெரிவித்துள்ளது. (ச)

# தேடப்படுபவர் இட்டார் ஆணை தேடிவந்தவர் கொன்றார் தமிழை

### அரியாலையில் கிருஷ்ணலீலை

யாழ்ப்பாணம், ஜன.20

தமிழகம், சூளைமேட்டுச் சூட்டுச் சம்பவம் தொடர்பான வழக்கில் இந்தியாவில் தேடப்படுபவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் 'அன்புக் கட்டளைக்கு' அடிபணிந்து அரைகுறைத் தமிழிலும் இடையே புரியாத ஒரு மொழியைக் குழைந்தும் உரையாற்றினார் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா.

அரியாலையில் இந்திய நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்விலேயே இந்த 'கிருஷ்ண லீலை' நிகழ்ந்தது.

அத்தோடு யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் கிருஷ்ணாவோடு ஒட்டி உறவாடிய படியே அமைச்சர் டக்ளஸும் நிழலாகப் பின்தொடர்ந்தார். ஆனாலும் கிருஷ்ணாவும் அதற்கு எதிர்ப்பு ஏதும் தெரிவிக்கவில்லை. கிருஷ்ணாவின் கவனத்தைத் தன் பக்கம் ஈர்க்கும் முகமாக, ''இப்போது தமிழில் அமைச்சர் கிருஷ்ணா உரையாற்றுவார்'' என்று அறிவித்தார் டக்ளஸ். சபை நாகரிகம் கருதி அமைச்சரின் அன்புக் கட்டளைக்கு அடிபணிந்து ஒரு சில நிமிடங்கள் தனக்குத் தெரிந்த தமிழில் கிருஷ்ணா உரையாற்றினார்.

**அரியாலையில் இந்திய நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகளை கையளிக்கும் நிகழ்விலேயே இந்த 'கிருஷ்ண லீலை' நிகழ்ந்தது**

இதேவேளை ''இந்தியாவில் ஒரு வழக்கில் தேடப்படும் நபர் ஒருவருடன் இந்திய அரசின் முக்கிய அமைச்சர் ஒருவர் கூடிக்குலாவிய விடயம் கண்டிக்கத்தக்கது. இந்தியாவின் இறையாண்மையை மதிக்காமல் ஒளிந்திருக்கும் ஒருவருடன் இவ்வாறு அமைச்சர் உறவாடியமை இந்தியாவுக்கே அவமானம்'' - அக்கினிப்புயல் சீமான் உதயனுக்குத் தெரிவித்தார். (ங-15)

## மின்சார சபை ஊழியர்கள் வேலை நிறுத்தம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான பேச்சுத் தோல்வியில் நிறைவடைந்ததை அடுத்து, இலங்கை மின்சார சபை ஊழியர்கள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் குதித்துள்ளனர். எனினும் தடையில்லாமல் மின் விநியோகம் இடம்பெறும் என மின் சக்தி அமைச்சு உறுதியளித்துள்ளது.

# போலிக் கடிதம் மூலம் பட்டதாரிகள் நியமனம்

### குடாநாட்டில் நடந்த மோசடி அம்பலம்

யாழ்ப்பாணம், ஜன.20

கல்வி அமைச்சிலிருந்து வழங்கப்பட்டது போன்ற போலியான நியமனக் கடிதங்களை வழங்கி பட்டதாரி நியமனம் பெற முனைந்த மோசடி ஒன்று அம்பலமாகி உள்ளது.

இவ்வாறான போலி நியமனக் கடிதங்களுடன் அண்மைய நாள்களில் 9 பேர் பாடசாலைகளில் இணைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. உறுதியான எண்ணிக்கை தெரியவரவில்லை.

இத்தகைய கடிதத்துடன் பெண் ஒருவர் பாடசாலையில் இணைந்திருந்தார் என்பதை உதயன் உறுதிப்படுத்தியுள்ளது. இந்த மோசடி பற்றித் தன்னிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

உயர் கல்வி அமைச்சினது போன்றே தயாரிக்கப்பட்ட போலியான கடிதத் தலைப்பில், தனித் தமிழில் இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. 6.12.2011 திகதியிட்ட இந்தக் கடிதத்தில் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகர என்பவரின் கையெழுத்து இடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தைச் சமர்ப்பித்து கடந்த வியாழக்கிழமை யாழ். வண்ணை நாவலர் பாடசாலையில் பெண் ஒருவர் இணைந்துள்ளார். அவரது நியமனக் கடிதத்தில் சந்தேகம் கொண்ட அதிபர் அது பற்றி விசாரித்துள்ளார். அதன் பின்னர் அந்தப் பெண் பாடசாலைக்கு வருவதை நிறுத்தி விட்டார். அவரிடம் கல்வித் திணைக்களத்தினர் விசாரித்ததில் தனக்குத் தெரிந்தவரையில் 9 பேருக்கு இந்த வகையிலான நியமனம் வழங்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

**உயர் கல்வி அமைச்சினது போன்றே தயாரிக்கப்பட்ட போலியான கடிதத் தலைப்பில், தனித் தமிழில் இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன**

அவர் சமர்ப்பித்த நியமனக் கடிதத்தில் பல தவறுகள் இருப்பதை மாகாணக் கல்வித் திணைக்களம் கண்டறிந்துள்ளது.

பாடசாலை ஆசிரியர்களுக்கான நியமனங்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. ஒருபோதும் உயர் கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்படுவதில்லை. போலி நியமனக் கடிதங்கள் உயர் கல்வி அமைச்சால் வழங்கப்பட்டுள்ளன.

கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயலாளரின் பெயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதே தவிர, உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதல்ல.

போலி நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டம் புதிதாக இணையும் ஆசிரியர்களுக்கு உரியதல்ல. கடிதத்தலைப்பில் உயர் கல்வி அமைச்சு என்பதற்கான ஆங்கிலப் பதம் வழக்கமாக அந்த அமைச்சுப் பயன்படுத்துவதை ஒத்திருக்கவில்லை.

